
சைவநெறிக்கூடம்

தமிழா தமிழில் வழிபடு

# அருள் ஞானமிகு உச்சிமுருகன் கோயில்

# Arul Gnanamighu Uchi Murugan Koyil



Bridge Street, High Wycombe, Bucks HP11 2EL

01494637799 / 07841 522514

# கூட்டு வழிபாட்டு பாமாலை


2 of 2



சைவநெறிக்கூடம்

தமிழா தமிழில் வழிபடு

# அருள் ஞானமிகு உச்சிமுருகன் கோயில்
# Arul Gnanamighu Uchi Murugan Koyil



Bridge Street, High Wycombe, Bucks HP11 2EL
01494637799 / 07841 522514

# கூட்டு வழிபாட்டு பாமாலை

## 2 of 2

நன்கொடை – £10

| அருட்பாடல்கள் | | பக்கம் |
|---|---|---|
| பிள்ளையார் துதி | பிள்ளையார் | 1 |
| பிள்ளையார் பிள்ளையார | பிள்ளையார் | 1 |
| வேல்முருகா மால்மருகா | முருகன் 1 | 2 |
| சுப்ரம் மண்யம் சுப்ரம் மண்யம் | முருகன் 2 | 3 |
| அன்பருக்கு அன்பனே நீ வா | முருகன் 3 | 3 |
| அரக ரோகரா சுவாமி அரக ரோகரா | முருகன் 4 | 4 |
| முருகா முருகா முருகையா | முருகன் 5 | 5 |
| முருகா முருகா வடிவேலழகா | முருகன் 6 | 5 |
| பச்சை மயில் வாகனனே சிவ | முருகன் 7 | 6 |
| என்னப்பனே என்ஐய்யனே கந்தப்பனே | முருகன் 8 | 7 |
| குன்றத்திலே குமரனுக்கு கொண்டாட்டம் | முருகன் 9 | 8 |
| கந்தனும் வருவான் காட்சியும் தருவான | முருகன் 10 | 8 |
| பச்சைமயில் வாகனனே குறவள்ளி | முருகன் 11 | 9 |
| முருகா முருகா முருகா முருகா ..அரகரோகரா | முருகன் 12 | 10 |
| முத்தான முத்துக் குமரா முருகையா வா | முருகன் 13 | 10 |
| வெற்றி வேல் முருகனுக்கு … அரோகரா | முருகன் 14 | 11 |
| திருமுருகா … என்று … ஒருதரம் சொன்னால் | முருகன் 15 | 12 |
| திருப்பதி மலை மேல் இருப்பவனே | முருகன் 16 | 12 |
| முருகா முருகா வருகின்றோம் முழுமுதலாய் | முருகன் 17 | 13 |
| இறைவனுக்கே நீ இறைவனப்பா | முருகன் 18 | 13 |
| அரகரோகரா சுவாமி அரகரோகரா | முருகன் 19 | 14 |
| வேலன் வாறானே வேலன் தேரில் வாறானே | முருகன் 20 | 14 |
| சரவண பவ குக வடிவேலா | முருகன் 21 | 15 |
| காவடியாம் காவடி கந்தவேலன் காவடி | முருகன் 22 | 15 |
| பச்சை மயில் வாகனனே சிவபா | முருகன் 23 | 16 |
| வாரும் வாரும் தெய்வ வடிவேள் முருகரே | முருகன் 24 | 17 |
| பழனி என்ற ஊரிலே பழனி என்ற பேரிலே | முருகன் 25 | 17 |
| காவடியாட்டம் காவடியாட்டம் | முருகன் 26 | 18 |
| யெயமுருகா யெயமுருகா யெய யெய யெய | முருகன் 27 | 18 |
| நீ இருக்கும் கோவிலிலே நாங்கள் | முருகன் 28 | 19 |
| ஆறுபடை வீடு கொண்ட வேல் முருகா | முருகன் 29 | 20 |
| வேல் வேல் முருகா வேல் வேல் முருகா | முருகன் 30 | 20 |
| வெற்றிவேல் வீரவேல் சக்திவேல | முருகன் 31 | 21 |
| சுப்ரம்மண்யம் சுப்ரம்மண்யம் சண்முகநாத | முருகன் 32 | 22 |
| திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா | முருகன் 33 | 22 |
| ஓம் சரவணபவ என ஓது - ஓம் | முருகன் 34 | 23 |
| அன்பனுக்கு அன்பனான ஐயனே சண்முகா | முருகன் 35 | 23 |
| பாலன் முருகன் அவன் சுப்பிரமணியன் | முருகன் 36 | 24 |
| முருகா --- முருகா --- முருகா | முருகன் 37 | 25 |
| மரகத மயில் மீது | முருகன் 38 | 25 |
| பழனி முருகா வேல் முருகா | முருகன் 39 | 26 |
| கந்தா குமரா கதிர்வேலா | முருகன் 40 | 26 |
| ஆறுபடை வீடு திருப்புகழ் | முருகன் | 26 |

| | | |
|---|---|---|
| திருப்பரங்குன்றம் | முருகன் | 26 |
| திருச்செந்தூர் | முருகன் | 27 |
| பழனி | முருகன் | 27 |
| சுவாமிமலை | முருகன் | 28 |
| திருத்தணி | முருகன் | 28 |
| **பழமுதிர்ச்சோலை** | முருகன் | 29 |
| கருணாகர வேலன் **“1 – 10** | முருகன் | 29-31 |
| திருக்கந்தர் திருப்பலாண்டு | முருகன் | 32 |
| தெய்வமணி மாலை – **5ம்** திருமுறை **1 – 31** | முருகன் | 33-46 |
| திருவாசகம் சிவபுராணம் | **சிவன்** | 47-49 |
| கணநாதம் கணநாதம் | **விநாயகர்** 1 | 50 |
| சிவசிவ கயமுக கணநாதா | **விநாயகர்** 2 | 50 |
| கணபதி கணபதி பாலயமாம் | **விநாயகர்** 3 | 50 |
| கயமுக கயமுக கணநாதா | **விநாயகர்** 4 | 51 |
| யெயகணேச யெயகணேச | **விநாயகர்** 5 | 51 |
| யெயகணேசா ஓடிவா | **விநாயகர்** 6 | 52 |
| கணபதி ஓம் யெய கணபதி ஓம் யெய | **விநாயகர்** 7 | 53 |
| யெயகணேச பாகிமாம் | **விநாயகர்** 8 | 53 |
| ஆனை முகனே ஓங்கார மூர்த்தி | **விநாயகர்** 9 | 54 |
| சந்தனத்தில் குளித்திடுவான் | **விநாயகர்** 10 | 54 |
| ப்ரபோ கணபதே பரிபூரண வாழ்வருள்வாயே | **விநாயகர்** 11 | 55 |
| சிவ கட்டளை | **சிவன்** 0 | 56 |
| சம்போ மகாதேவா – சதாசிவா சம்போ | **சிவன்** 1 | 58 |
| சிவமயமே எங்கும் சிவமயமே | **சிவன்** 2 | 59 |
| பரமஞான மூர்த்தியே நீ வா வா வா | **சிவன்** 3 | 60 |
| அரகரோகரா சாமி அரகரோகரா | **சிவன்** 4 | 60 |
| சிவாய நம ஓம் சிவாய நம ஓம் | **சிவன்** 5 | 61 |
| ஓம் சிவாய நமசிவாய ஓம் சிவாய சங்கரா | **சிவன்** 6 | 61 |
| தில்லை அம்பல நடராயா –உன் | **சிவன்** 7 | 62 |
| கங்கை கொண்டாய் நடராயா | **சிவன்** 8 | 62 |
| ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த | **சிவன்** 9 | 62-65 |
| நடராசர் பத்து பாடல்கள் **1 – 10** | **சிவன்** | 66-70 |
| திருவெம்பாவை **1 – 10** | **சிவன்** 9 | 70-74 |
| விழி கிடைக்குமா அபய கரம் கிடைக்குமா | **சிவன்** 10 | 75 |
| வந்த வினையும் வருகின்ற | | 75 |
| திருநீற்றுப் பதிகம் **1 – 11** | **சிவன்** | 76-77 |
| பட்டினத்தார் பாடல்கள் **1 – 10** | **சிவன்** | 77-78 |
| திருப் பொற் சுண்ணம் **1 – 20** | **சிவன்** | 79-83 |
| காயித்திரி மந்திரம் | **அம்மன்** 0 | 83 |
| சரசுவதி அந்தாதி **1 – 18** | **அம்மன்** | 83-86 |
| அயிகிரி நந்தினி நந்தித மேதினி | **அம்மன்** 1 | 86 |
| ஜெய ஜெய தேவி துர்கா தேவி | **அம்மன்** 2 | 86 |
| ஜெய ஜெய ஜெய சக்தி ஓம் ஸ்ரீ | **அம்மன்** 3 | 87 |
| ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ | **அம்மன்** 4 | 88 |

| | | |
|---|---|---|
| அம்மா அம்மா பரமேஸ்வரி | **அம்மன்** 5 | 89 |
| அம்ப பரமேஸ்வரி அகிலாண்டேஸ்வரி | **அம்மன்** 6 | 89 |
| துக்க நிவாரண அஷ்டகம் | **அம்மன்** 7 | 90 |
| ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் | **அம்மன்** 8 | 91 |
| கற்பக வல்லி நின் பொற்பாதங்கள் பிடித்தேன் | **அம்மன்** 9 | 91 |
| ரக்ச ரக்ச ஜகன் மாதா சர்வ சக்தி ஜெயதுர்கா | **அம்மன்** 10 | 92 |
| கற்பூர நாயகியே கனகவல்லி | **அம்மன்** 11 | 93 |
| அன்னை பராசக்தியே நீ வா வா வா | **அம்மன்** 12 | 93 |
| திருவிளக்கே திருவிளக்கே தேவி பராசக்தி | **அம்மன்** 13 | 94 |
| திருவிளக்கை ஏற்றி வைத்தோம் | **அம்மன்** 14 | 95 |
| ஆய கலைகள் அறுபத்தி நான்கினையும் | **அம்மன்** 15 | 96 |
| மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி | **அம்மன்** 16 | 96 |
| கொண்டைமுடி அலங்கரித்து | **அம்மன்** 17 | 97 |
| ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை | **அம்மன்** 18 | 98 |
| அணுவிற்குள் அணுவும் நீ அண்டங்கள் | **அம்மன்** 19 | 98 |
| கன்றுக்கு பசுவாக குன்றுக்கு ஒளியாக | **அம்மன்** 20 | 98 |
| விழியுண்டு ஒளியில்லை இருளுண்டு | **அம்மன்** 21 | 99 |
| வேரற்ற மரமாகி வீழ்ந்து விட்டேன் அம்மா | **அம்மன்** 22 | 99 |
| ஏதொன்றும் அறியாமல் நான்செய்த | **அம்மன்** 23 | 99 |
| "ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ | **அம்மன்** | 100 |
| அபிராமி அந்தாதி பாடல் 1 – 102 | **அம்மன்** 24 | 101-116 |
| கலையாத கல்வியும் குறையாத | **அம்மன்** 24 | 116 |
| சகலகலாவல்லி மாலை 1 – 10 | **அம்மன்** | 116 |
| கௌரிக் காப்புத் | **அம்மன்** | 117-120 |
| சிவலிங்க அட்டகம் (லிங்காஷ்டகம்) | **லிங்கம்** | 120-121 |
| ஓங்கார நாதம் உயர்வான வேதம் | **ஜயப்பன** 1 | 121 |
| பகவான் சரணம் பகவதி சரணம் | **ஜயப்பன** 2 | 122 |
| சாமியே சரணம் ஐயா | **ஜயப்பன** 3 | 122 |
| இருமுடி தாங்கி ஒரு மனதாகி | **ஜயப்பன** 4 | 123 |
| பொய்யின்றி மெய்யோடு நெய் கொண்டு | **ஜயப்பன** 5 | 125-126 |
| கரிவராசனம் (ஹரிவராசனம்) – தமிழில் | **ஜயப்பன** 6 | 125 |
| **உனை தெய்வம் என்பதா** | **ஜயப்பன** 7 | 127 |
| **வில்லாளி வீரனே** | **ஜயப்பன** 8 | 127-128 |
| **பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஜயப்பன்** | **ஜயப்பன** 9 | 129-130 |
| **ஜயப்பன் 18 படி பாடல்** | **ஜயப்பன** 10 | 131-133 |
| எந்தமலை சேவித்தாலும் - | **ஜயப்பன** 11 | 133 |
| தேடுகின்ற கண்களுக்குள் | **ஜயப்பன** 12 | 133-134 |
| மோகினி தந்த மன மோகனா நீயே | **ஜயப்பன** 13 | 134 |
| பச்சை மாமலை போல் மேனி | **திருமாள் 1** | 135 |
| **குறை ஒன்றும் இல்லை** | **திருமாள் 2** | 136-137 |
| நட்சத்திரம் – விண்மீன் | | 138 |
| தமிழ் மாதம் எண் வடிவங்கள் | | 139 |
| **இலங்கை நாட்டை காக்க வேண்டி** | | 140-141 |

# பிள்ளையார் துதி

**மண்ணுல கத்தினிற் பிறவி மாசற**
**எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்**
**கண்ணுதல் உடையதோர்களிற்றுமா முகப்**
**பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்!**

# அருட்பாடல்கள்

அருட்பாடல்கள் – 1

**பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்**
**பிள்ளையார் பிள்ளையார் எம்மைக் காக்கும் பிள்ளையார்**

**ஆற்றங்கரை ஓரத்திலே அரச மரத்து நிழலிலே**
**வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார் (பிள்ளையார்)**

**யானைமுகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்**
**பானை வயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர் (பிள்ளையார்)**

**மஞ்சளாலே செய்யினும் மண்ணாலே செய்யினும்**
**ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் ஆழ்த்தும் பிள்ளையார் (பிள்ளையார்)**

**ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்**
**நேரும் துன்பம் யாவையும் நீக்கி வைக்கும் பிள்ளையார் (பிள்ளையார்)**

**அவல் கடலை சுண்டலும் அரிசிக் கொழுக்கட்டையும்**
**கவலை இன்றி உண்ணுவார் கண்ணை மூடி தூங்குவார் (பிள்ளையார்)**

**கலியுகத்தில் விந்தைதனை காணவேண்டி அனுதினம்**
**எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார் (பிள்ளையார்)**

**ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை**
**நெஞ்சில் நாட்டும் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார் (பிள்ளையார்)**

(சைவஎல்லப்ப நாவலர்)

# முருகன்

## அருட்பாடல்கள் – 1

**வேல்முருகா மால்மருகா வாவா சண்முகா**
**கால்பிடித்தேன் காத்தருள வாவா சண்முகா**
**நால்வேதப் பொருளான நாதா சண்முகா**
**நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா**
**செல்வமாக சிவன் அணைக்கும் சேயே சண்முகா (வேல்முருகா)**

**ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா**
**ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா**
**தேறுதலை தருபவனே தேவா சண்முகா**
**சிங்கார ஓங்கார சீலனே சண்முகா (வேல்முருகா)**

**நாறுமாலை யணிமார்பா நாயகா சண்முகா**
**நாதவித்து கலாதீத நாயகா சண்முகா**
**ஏறுமயில் வாகனனே ஏந்தலே சண்முகா**
**நீறணிந்தார் வினைபோக்கும் நீதமே சண்முகா (வேல்முருகா)**

**பாடும்பணி தந்திடுவாய் பண்டிதா சண்முகா**
**பக்தருடன் கூட்டிடுவாய் முத்தனே சண்முகா**
**ஆடும்சேவற் கொடியழகா ஆண்டவா சண்முகா**
**அடியார்உள்ளக் குகையமர்ந்த ஆனந்தா சண்முகா (வேல்முருகா)**

**வீடும்நாடும் நின்திருத்தான் வேண்டினேன் சண்முகா**
**வீரன்சூரன் உடல்கிழித்த வேலனே சண்முகா**
**ஓடும்மனம் உன்னைநாட ஆடிவா சண்முகா**
**ஒருவனேஎன் வினையழித்த உத்தமா சண்முகா (வேல்முருகா)**

**எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா**
**எங்கும்நிறைந்த அன்புருவே என் முருகா சண்முகா**
**தில்லையிலே ஆடும்தேவி பாலகா சண்முகா**
**திருட்டுத்தனமாய்க் குறக்கொடியைக் கொண்டவா சண்முகா (வேல்முருகா)**

**தொல்லையெல்லாம் கடந்தபதம் தந்திடும் சண்முகா**
**தோத்தரித்தோம் எங்கள்முன்னே வந்திடுவாய் சண்முகா**
**கல்லையொத்த மனமுருகக் கருணைசெய் சண்முகா**
**கல்லெனச்சி லம்பொலிக்க ஓடிவா சண்முகா (வேல்முருகா)**

## அருட்பாடல்கள் – 2

**சுப்ரம் மண்யம் சுப்ரம் மண்யம்**
**சண்முக நாதா சுப்ரம் மண்யம்**
**சிவசிவ சிவசிவ சுப்ரம் மண்யம்**
**கரகர கரகர சுப்ரம் மண்யம்**
**(சுப்ரம் மண்யம்)**

**குரசர வணபவ சுப்ரம் மண்யம்**
**குமர குருபரா சுப்ரம் மண்யம்**
**சிவசர வணபவ சுப்ரம் மண்யம்**
**சிவகுரு பரகர சுப்ரம் மண்யம்**
**(சுப்ரம் மண்யம்)**

**குரபர கரசிவ சுப்ரம் மண்யம்**
**கூர்வடி வேலா சுப்ரம் மண்யம்**
**ஓம் ஓம் ஓம் ஓம் சுப்ரம் மண்யம்**
**ஓங்கார ரூபா சுப்ரம் மண்யம்**
**(சுப்ரம் மண்யம்)**

**ஓம் சரவணபவ சுப்ரம் மண்யம்**
**ஓங்கார வேலா சுப்ரம் மண்யம்**
**கந்தா கடம்பா கருணாகரனே**
**கதிர் வடிவேலா சுப்ரம் மண்யம்**
**வருவாய் அருள்வாய் மயில்மேல் அழகா**
**வடிவேல் அழகா சுப்ரம் மண்யம் (சுப்ரம் மண்யம்)**

## அருட்பாடல்கள் – 3

**அன்பருக்கு அன்பனே நீ வா வா சண்முகா**
**ஆறுபடை வீடுடையாய் வா வா சண்முகா**
**இன்பமய யோதியே நீ வா வா சண்முகா**
**ஈசனுமை பாலகனே வா வா சண்முகா**

**உலகநாதன் மருமகனே நீ வா வா சண்முகா**
**ஊமைக்கருள் புரிந்தவனே வா வா சண்முகா**
**எட்டுக்குடி வேலவா நீ வா வா சண்முகா**
**ஏறுமயில் வாகனனே நீ வா வா சண்முகா**

**ஐங்கரற் கிளையவனே வா வா சண்முகா**
**ஓய்யார வள்ளி லோலா வா வா சண்முகா**
**ஓங்காரத் தத்துவனே வா வா சண்முகா**
**ஔவைக் குபதேசித்தவா வா வா சண்முகா**

அகிலலோக நாயகனே வா வா சண்முகா
ஆடிவாநீ ஓடிவாநீ வாவா சண்முகா
ஓடிவாநீ ஆடிவாநீ வாவா சண்முகா

அருட்பாடல்கள் – 4

அரக ரோகரா சுவாமி அரக ரோகரா
அரக ரோகரா சுவாமி அரக ரோகரா

உச்சி முருகனுக்கு அரக ரோகரா
கைய்விக்கம் முருகனுக்கு அரக ரோகரா
சிங்கார வேலனுக்கு அரக ரோகரா (அரக ரோகரா)

சிவசக்தி குமரனுக்கு அரக ரோகரா
கதிர்காம வேலனுக்கு அரக ரோகரா
கைய்விக்கம் முருகனுக்கு அரக ரோகரா (அரக ரோகரா)

திருச்செந்தூர் வேலனுக்கு அரக ரோகரா
திருப்பரங்கிரி நாதனுக்கு அரக ரோகரா
பழனிமலை ஆண்டியற்கும் அரக ரோகரா (அரக ரோகரா)

சுவாமிமலை பாலகனுக்கு அரக ரோகரா
உச்சி மலை முருகனுக்கு அரக ரோகரா
கந்தப்ப சுவாமிக்கும் அரக ரோகரா (அரக ரோகரா)

கதிர்காம வேலனுக்கு அரக ரோகரா
கதிரமலை வேலனுக்கும் அரக ரோகரா
கபிலவன முருகனுக்கும் அரக ரோகரா (அரக ரோகரா)

திருப்பரங்கிரித் தீர்த்தனுக்கு அரக ரோகரா
திருச்செந்தூர் தேவனுக்கும் அரக ரோகரா (அரக ரோகரா)

திருப்பழனிச் செல்வனுக்கு அரக ரோகரா
திருவேரகப் பாலனுக்கும் அரக ரோகரா
குன்றிலாடும் குமரனுக்கு அரக ரோகரா
குஞ்சரிதன் கணவணுக்கும் அரக ரோகரா (அரக ரோகரா)

குறவள்ளி கந்தனுக்கு அரக ரோகரா
குணங்கடந்த கோலனுக்கும் அரக ரோகரா

**சோயாமலைக் கிழவனுக்கு அரக ரோகரா**
**துயர்தீர்க்கும் முருகனுக்கும் அரக ரோகரா** **(அரக ரோகரா)**

**சிவசக்தி வடிவனுக்கு அரக ரோகரா**
**சிங்கார ரூபனுக்கும் அரக ரோகரா**
**அகங்கார நாசனுக்கு அரக ரோகரா**
**அன்பர்களின் நேயனுக்கும் அரக ரோகரா** **(அரக ரோகரா).**

## அருட்பாடல்கள் – 5

**முருகா முருகா முருகையா**
**முத்துக் குமரா முருகையா**

**கந்தா கடம்பா கதிர்வேலா**
**கார்த்திகை மைந்தா வேல் முருகா அருள்**
**கார்த்திகை மைந்தா வேல் முருகா** **(முருகா முருகா)**

**சரவணபவனே முருகையா**
**சஞ்சலம் தீர்ப்பாய் முருகையா மனச்**
**சஞ்சலம் தீர்ப்பாய் முருகையா** **(முருகா முருகா)**

**வள்ளியின் கணவா வடிவேலா**
**வரம் பல வருவாய் வரதையா அருள்**
**வரம் பல வருவாய் வரதையா** **(முருகா முருகா)**

**கருணைக் கடலே கதிர்காமா**
**கவலை தீர்ப்பாய் கந்தையா மனக்**
**கவலை தீர்ப்பாய் கந்தையா** **(முருகா முருகா)**

## அருட்பாடல்கள் – 6

**முருகா முருகா வடிவேலழகா**
**மயில் வாகனனே வா வா வா**
**வேலவனே வடிவேலவனே - மயில்**
**வாகனனே கருணாகரனே** **(முருகா)**

**பழனியில் வாழும் பார்வதி தாயை**
**பாராய் ஐயா முருகையா - எமை**
**வள்ளீரமணா வடிவேல் முருகா**
**மயில் மீதேறியே வா வா வா (முருகா)**

**பாவ விநாசன துரிய நிவாரண**
**பாதாம் புயமே தவசரணம் - உன்**
**தவதிரு நாமம் பாடும் அடியார்க்**
**கொருகதி அருள்வாய் முருகேசா (முருகா)**

**செந்தூர் வாழும் சிவசுப்ரமணியா**
**சரவண பவனே தவசரணம்**
**வேளிமலை வாழும் வேலவனே - உனை**
**வேண்டினோம் ஆண்டிட வா வா வா (முருகா)**

அருட்பாடல்கள் – 7

**பச்சை மயில் வாகனனே சிவ**
**பால சுப்ரமணியனே வா - இங்கு**
**இச்சை எல்லாம் உன் மேலே - வைத்தேன்**
**எள்ளளவும் ஐயமில்லையே (பச்சை மயில்)**

**கொச்சை மொழியானாலும் - உன்னைக்**
**கொஞ்சிக் கொஞ்சிப் பாடிடுவேன்**
**சர்ச்சை எல்லாம் மறந்ததப்பா - இங்கு**
**சாந்தம் நிறைந்ததப்பா (பச்சை மயில்)**

**வெள்ளமது பள்ளந்தனிலே பாயும்**
**தன்மை போல உள்ளந்தனிலே நீ**
**மெல்ல மெல்ல புகுந்து விட்டாய் எந்தன்**
**கள்ளமெல்லாம் கரைந்ததப்பா (பச்சை மயில்)**

**நெஞ்சமதில் கோவில் அமைத்தேன் அதில்**
**நேர்மை எனும் தீபம் வைத்தேன் - நீ**
**செஞ்சிலம்பு கொஞ்சிட வா முருகா**
**சேவற் கொடி மயில் வீரா (பச்சை மயில்)**

ஆறுபடை வீடுடையவா எனக்கு
ஆறுதலைத் தருந்தேவா நீ
ஏறுமயில் ஏறிவருவாய் - முருகா
எங்கும் நிறைந்தவனே (பச்சை மயில்)

அலை கடல் ஓரத்திலே எங்கள்
அன்பான சண்முகனே நீ
அலையா மனநீ தந்தாய் - உனக்கு
ஆனந்த கோடி நமஷ்காரம் (பச்சை மயில்)

அருட்பாடல்கள் – 8

என்னப்பனே என்ஐய்யனே கந்தப்பனே கந்தக் காருண்யனே (2)
பன்னிருகை வேலவனே பன்னிருகை வேலவனே (2)
கன்னி வள்ளி மணவாளனே கன்னி வள்ளி மணவாளனே

வேல் வேல் வேல் வேல் வேல் முருகா வேல் .... வேல்
வேல் வேல் வேல் வேல் வேல் முருகா வேல்
வேல் முருகா மாம்பழனி வேல் முருகா வேல் வேல்
வேல் முருகா மாம்பழனி வேல் முருகா வேல் வேல்

பார்வதியாள் பாலகனே பார்வதியாள் பாலகனே (2)
பக்தர்களுக்கு அனுகூலனே பக்தர்களுக்கு அனுகூலனே
வேல் வேல் வேல் வேல் வேல் முருகா வேல்
வேல் வேல் வேல் வேல் வேல் முருகா வேல்
வேல் முருகா மாம்பழனி வேல் முருகா வேல் வேல்
வேல் முருகா மாம்பழனி வேல் முருகா வேல் வேல்

எட்டுக்குடி வேலவனே எட்டுக்குடி வேலவனே (2)

சுட்டபழம் தந்தவனே ... ஔவைக்கு
சுட்டபழம் தந்தவனே

வேல் வேல் வேல் வேல் வேல் முருகா வேல் .... வேல்
வேல் வேல் வேல் வேல் வேல் முருகா வேல்
வேல் முருகா மாம்பழனி வேல் முருகா வேல் வேல்
வேல் முருகா மாம்பழனி வேல் முருகா வேல் வேல்

கால்களில் பொற் சிலம்பு ... முருகன்
கைகளில் பொற் சதங்கை (2)

யல் யல் யல் .. என வருவான்

வேல் வேல் வேல் வேல் வேல் முருகா வேல்
வேல் முருகா மாம்பழனி வேல் முருகா வேல் வேல்.

## அருட்பாடல்கள் – 9

குன்றத்திலே குமரனுக்கு கொண்டாட்டம்
அங்கே குவிந்ததம்மா பெண்களெல்லாம்
வண்டாட்டம் .... கொண்டாட்டம் (2)
குன்றத்திலே குமரனுக்கு கொண்டாட்டம்
தெய்வயானை திருமணமாம் திருப்பரங்குன்றம் (2)
தெருமுழுதும் பக்தர்களின் ஆனந்தமன்றம் (2)
தங்கம் வைரம் பவளம் முத்து தவழும் தெய்வானை (2)
தாங்கிக் கொண்டாள் வாங்கிக் கொண்டாள் முருகப்பெருமானை (2)
முருகப்பெருமானை
குன்றத்திலே குமரனுக்கு கொண்டாட்டம்
அங்கே குவிந்ததம்மா பெண்களெல்லாம்
வண்டாட்டம் .... கொண்டாட்டம்
உருகிச் சொல்லுங்கள் முருகனின் பெயரை
நெருங்கிச் செல்லுங்கள் முருகனின் ஊரை (2)
வேல் முருகா வெற்றி வேல் முருகா (2)
சந்தனம் பூசுங்கள் குங்குமம் சூடுங்கள் (2)
அரகர பாடுங்கள் வருவதைப் பாருங்கள் (2)
கந்தனுக்கு வேல் வேல் முருகனுக்கு வேல் வேல் (4)
வேல் முருகா வெற்றி வேல் முருகா (4)

## அருட்பாடல்கள் – 10

கந்தனும் வருவான் காட்சியும் தருவான்
கவலையை நீ விடுவாய் ... மனமே
கனவிலும் நினைவிலும் அவன் திருநாமத்தை
மறவாமல் நீ இருப்பாய் ... மனமே
மறவாமல் நீ இருப்பாய்
சிக்கலில் வேல் எடுத்தான் சிங்கார வேலனானான்
செந்தூரில் போர் புரிந்தான் சூரனையே வதைத்தான்
சரவணன் அவனே சண்முகன் அவனே
சிவசக்தி வடிவானவன் .... முருகன்
சிவசக்தி வடிவானவன்

தணிகையிலே அமர்ந்தான் தத்துவங்கள் சொன்னான்
தந்தைக்கு குருவானான் தமிழுக்கு துணையானான்
தரணியில் புகழோடு திருமறைகள் போற்ற
சுவாமி மலையில் நின்றான் .... தகப்பன்
சாமியாக நின்றான்
பழமதைக் கேட்டான் பழனியிலே அமர்ந்தான்
பக்தர்களை அழைத்தான் அருள் ஞானப் பழம் தந்தான்
பழமுதிர்ச் சோலையில் அழகுடன் அமர்ந்தான்
பரங்குன்றில் மணமாலை சூட்டிக்கொண்டான்
திருப்பரங்குன்றில் மணமாலை சூட்டிக்கொண்டான்
கந்தனும் வருவான் காட்சியும் தருவான்
கவலையை நீ விடுவாய் ... மனமே
கனவிலும் நினைவிலும் அவன் திருநாமத்தை
மறவாமல் நீ இருப்பாய் ... மனமே
மறவாமல் நீ இருப்பாய்

அருட்பாடல்கள் – 11

பச்சைமயில் வாகனனே குறவள்ளி மணவாளனே வா
சின்னஞ்சிறு வயது முதல் உன்னை பாடுகின்றேன் தயவில்லையா
மேனியெல்லாம்
திருநீறு உன் சந்நிதியே குறிக்கோளு
ஆறுமுகம் உன்பேரு உன்னை பாடுவதே பெரும்பேறு
(பச்சை மயில்)
ஆண்டி உன்னை காண்பதற்கு இங்கு அலங்காரக் கூட்டமையா
உனக்காக சேவற் காவடி அது மலையேறி ஓடுதைய்யா
(பச்சை மயில்)
வஞ்சிக்குற மங்கையவள் உன்னைக் கொஞ்சியது போதுமையா
தெய்வானை தாயாரும் உன்னைக் கோவிக்கமாட்டாள் ஐயா
(பச்சை மயில்)
ஔவை அவள் திருமேதை உன்கேள்வியெல்லாம் அங்கு கேட்டுக்கோ
நான் ஏழைக்கு ஏழையப்பா நீ நல்ல பதில் சொல்லி விட்டுப் போ முருகா
(பச்சை மயில்)

அருட்பாடல்கள் – 12

| | |
|---|---|
| முருகா முருகா முருகா முருகா ... | அரகரோகரா |
| மால் மருகா மருகா மருகா மருகா ... | அரகரோகரா |
| தணிகாசலனே தவமா மணியே ... | அரகரோகரா |
| வானவர் போற்றும் தீன தயாளா ... | அரகரோகரா |
| கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா ... | அரகரோகரா |
| கந்தா கடம்பா கார்த்திகேயா ... | அரகரோகரா |
| செந்திலாண்ட செங்கல்வராயா ... | அரகரோகரா |
| சிவசண்முகனே சேனைத் தலைவா ... | அரகரோகரா |
| அக்கினிகருப்பா ஆறுபடை வீடா ... | அரகரோகரா |
| ஆவினன்குடிவாழ் அழகிய வேலா ... | அரகரோகரா |
| முருகா முருகா முருகா முருகா ... | அரகரோகரா |
| மால் மருகா மருகா மருகா மருகா ... | அரகரோகரா |
| மயில் வாகனனே மாதவக் கொழுந்தே... | அரகரோகரா |
| முருகா முருகா முருகா முருகா ... | அரகரோகரா |
| மால் மருகா மருகா மருகா மருகா ... | அரகரோகரா |
| பழனி பதிவாழ் பாலகுமாரா ... | அரகரோகரா |
| சேவற் கொடியே செங்கதிர் வேலா ... | அரகரோகரா |
| சிவனார் மகனே செந்திலாதி பா ... | அரகரோகரா |
| முருகா முருகா முருகா முருகா ... | அரகரோகரா |
| மால் மருகா மருகா மருகா மருகா ... | அரகரோகரா |
| சாமி நாதா சக்தி வேலா ... | அரகரோகரா |
| மூவர் முதல்வா முத்துக் குமரா ... | அரகரோகரா |
| வள்ளி மணாளா வானவர் வேந்தே ... | அரகரோகரா |
| வடிவேல் முருகா திருமால் மருகா ... | அரகரோகரா |
| வேல் வேல் முருகா வெற்றிவேல் முருகா.. | அரகரோகரா |
| வேல் வேல் முருகா வெற்றிவேல் முருகா | அரகரோகரா |
| முருகா முருகா முருகா முருகா ... | அரகரோகரா |
| மால் மருகா மருகா மருகா மருகா ... | அரகரோகரா |

அருட்பாடல்கள் – 13

முத்தான முத்துக் குமரா முருகையா வா
சித்தாடும் செல்வக் குமரா சிந்தை மகிழ வா
முத்தான முத்துக் குமரா முருகையா வா வா வா
சித்தாடும் செல்வக் குமரா சிந்தை மகிழ வா வா வா
நீ ஆடும் அழகைக் கண்டு வேலாடி வருகுதையா (2)

வேலாடும் அழகைக் கண்டு மயிலாடி மகிழுதையா
மயிலாடும் அழகைக் கண்டு மனமாடி மகிழுதையா
மனமாடும் அழகைக் கண்டு மக்கள் கூட்டம் ஆடுதையா (2)

முத்தான முத்துக் குமரா முருகையா வா வா வா
சித்தாடும் செல்வக் குமரா சிந்தை மகிழ வா வா வா
பன்னீரில் குளிக்க வைத்து பட்டாடை உடுத்தி வைத்து (2)
சந்தனத்தில் சாந்தனுக்கு அங்கமெல்லாம் பூசி வைத்து (2)
நீர் பூசி திலகம் வைத்து நெஞ்சத்தில் உன்னை வைத்து (2)
அன்று பூர்த்த மலரால் உன்னை அர்ச்சிப்போம் வருவாய் அப்பா (2)
முத்தான முத்துக் குமரா முருகையா வா வா வா
சித்தாடும் செல்வக் குமரா சிந்தை மகிழ வா வா வா

## அருட்பாடல்கள் – 14

வெற்றி வேல் முருகனுக்கு ... அரோகரா
வள்ளி மணவாளனுக்கு ... அரோகரா
வேலவா ... வடி வேலவா வேடனாக வந்து நின்ற வேலவா
ஓடிவா ... நண்பரை நாடிவா ஆண்டியாக வந்து நின்ற ஆண்டவா (வேலவா ...)
வேலவா ... வெற்றிவேல் முருகனுக்கு ... அரோகரா
வள்ளி மணவாளனுக்கு ... அரோகரா
சின்னஞ்சிறு பாதம் எடுத்து ஆடிவா ... ஆடிவா (2)
சிங்கார வேலுடனே ஓடிவா ...ஓடிவா (2)
சிந்தையிலே நினைப்பவரை நாடிவா ... உன்னை
சிந்தையிலே நினைப்பவரை நாடிவா
சின்னஞ்சிறு சிவகுமரா ஓடிவா
வேலவா ... வெற்றிவேல் முருகனுக்கு ... அரோகரா
வள்ளி மணவாளனுக்கு ... அரோகரா
முத்தே ரத்தினமே ... முருகையா
முத்தே ரத்தினமே ... முருகையா முருகையா (2)
முழுமதி முகத்தவனே ... கந்தையா ... கந்தையா (2)
முத்தகனே வினை தீர்க்கும் வேலையா
... வடி வேலையா ... உன் கையில் வேலையா
அந்த வெள்ளி மலை நாதன் பெற்ற சின்னையா (2) (வேலவா ...)

## அருட்பாடல்கள் — 15

**திருமுருகா ... என்று ... ஒருதரம் சொன்னால்**
**உருகுது நெஞ்சம் ... பெருகுது கண்ணீர்**
**திருமுருகாவென்று ... ஒருதரம் சொன்னால்**
**உருகுது நெஞ்சம் ... பெருகுது கண்ணீர் (2) ... திருமுருகா**

**சிறுமதியால் உள்ளம் இருண்டிடும் வேளையில் (2)**
**அருளொளி வீசும் ஆண்டவன் நீயே (2)**
**திருமுருகாவென்று ... ஒருதரம் சொன்னால்**
**உருகுது நெஞ்சம் ... பெருகுது கண்ணீர் ... திருமுருகா**

**அப்பனும் பிள்ளையும் நீ தான் ஐயா**
**அடிப்பதும் அணைப்பதும் உன் கை தான் ஐயா (2)**
**கற்பனை வாழ்வினில் கதி இனி ஏது (2)**
**கருணாநிதியே கதிர்வடிவேலா (2)**
**திருமுருகாவென்று ... ஒருதரம் சொன்னால்**
**உருகுது நெஞ்சம் ... பெருகுது கண்ணீர்**
**திருமுருகா திருமுருகா திருமுருகா.**

## அருட்பாடல்கள் – 16

**திருப்பதி மலை மேல் இருப்பவனே**
**தீராத வினையெல்லாம் தீர்ப்பவனே**
**ஸ்ரீநிவாசா கோவிந்தா - ஶ்ரீ வெங்கடேசா கோவிந்தா**
**உள்ளமாம் கோவிலில் உறைபவனே**
**உலகோரை வாழ்விக்க வந்தவனே**
**சங்கடம் தீர்க்கும் கோவிந்தா**
**வெங்கட ரமணா கோவிந்தா (திருப்பதி)**

**ஏழுமலை மேல் இருப்பவனே**
**எல்லா வினைகளையும் தீர்ப்பவனே**
**சீரடி நந்தா கோவிந்தா**
**ஸ்ரீசத்ய நந்தா கோவிந்தா (திருப்பதி)**

## அருட்பாடல்கள் – 17

**முருகா முருகா வருகின்றோம்**
**முழுமுதலாய் உன்னை நினைக்கின்றோம்**
**தலைவா தமிழால் அழைக்கின்றோம் - இந்தத்**
**தரணியெல்லாம் போற்றிப் புகழ்கின்றோம் (முருகா)**

**கந்தா கடம்பா வருகின்றோம்**
**கலியுக வரதா வருகின்றோம்**
**மயில் மீதேறி வருவாயா? எங்கள்**
**துயர்களைப் போக்கி அருள்வாயா? (முருகா)**

**நெற்றி கண் பொறியில் பிறந்தவனே**
**தாமரை மலரில் தவழ்ந்தவனே**
**வடிவேலுடனே வருவாயா?**
**வந்தெமை காத்து அருள்வாயா? (முருகா)**

## அருட்பாடல்கள் – 18

**இறைவனுக்கே நீ இறைவனப்பா**
**எனக்கருள வேண்டும் பழனியப்பா**
**அப்பா ... (இறைவனுக்கே)**
**அப்பா இறைவனுக்கே நீ இறைவனப்பா**
**குறைவில்லா வாழ்வு தரும் குமரனப்பா (3)**
**ஈசனுக்கு நீ தகப்பன் சாமியப்பா (2)**
**அம்மையப்பா ... பழனியப்பா இறைவனுக்கே நீ இறைவனப்பா**
**வா என்று அழைக்குமுன்பே வருகை தரும் வரதனப்பா (2)**
**வா வா என்று அழைக்குமுன்பே வருகை தரும் வரதனப்பா**
**தாவென்று கேட்குமுன்னே வரம் தரும் குமரனப்பா (2)**
**கூவுகின்ற சேவற் கொடி தாங்கி நிற்கும் கந்தனப்பா (3)**
**குன்றுதோறும் ஆடுகின்ற சிங்கார வேலனப்பா (2)**
**அம்மையப்பா ... பழனியப்பா இறைவனுக்கே நீ இறைவனப்பா**
**அப்பா இறைவனுக்கே நீ இறைவனப்பா.**

## அருட்பாடல்கள் – 19

**அரகரோகரா சுவாமி அரகரோகரா**
**அரகரோகரா அரகரோகரா அரகரோகரா**
**ஆறுமுக வேலவனே அகிலமெல்லாம் ஆள்பவனே**
**ஆறுபடை வீடுடையாய் அன்பர் எமை காத்திடுவாய்**
**பாலனாக வீற்றிருப்பாய் பழனிமலை மீதினிலே**
**ஞானப்பழம் நீயன்றோ ஞானமெல்லாம் நல்கிடுவாய (அரகரோகரா)**

**நீலக்கடல் ஓரத்திலே செந்தூரில் நிற்பவனே**
**ஆசைகளாம் அசுரர்களை அழித்திடுவாய் ஆறுமுகனே (அரகரோகரா)**

**சிவகுருவாய் சிறந்து நிற்கும் சுவாமி மலை நாதனேநீ**
**சிவபதமே சீக்கிரமாய் சேர்ந்திடவே வழிதருவாய் (அரகரோகரா)**

**தேவிதேவயானையுடன் பரங்குன்றில் வாழ்பவனே**
**தேடி வந்த பக்தர் எமை கருணையுடன் காத்திடுவாய் (அரகரோகரா)**

**குறவள்ளி காந்தனாக சோலைமலை சேர்ந்தவனே**
**பிறவிப்பிணி அறுத்துணையே அடையவழி அருள்வாய் (அரகரோகரா)**

**வள்ளி தெய்வயானை மருவும் தணிகைமலை நாயகனே**
**அள்ளித் தரும் அண்ணலே உன் அருள்பதமே அளித்திடுவாய் (அரகரோகரா)**

## அருட்பாடல்கள் – 20

**வேலன் வாறானே வேலன் தேரில் வாறானே**
**ஆறுமுக வேலன் அவன் தெருவில் வாறானே**
**பரமசிவன் புத்திரனாம் வேலன் தானடி அவன்**
**சக்தி உமை பார்வதியாள் மைந்தன் தானடி (வேலன்)**

**குறவர் குல அழகு மங்கை வள்ளியாமடி அந்த**
**வள்ளி மீது மையல் கொண்ட வேலன் தானடி**
**ஆனைமுகன் வேலனுக்கு அண்ணனாமடி அவனைக்**
**காட்டி வள்ளிப் பெண்ணை மணந்து கொண்டான்டி (வேலன்)**

**சுவாமி மலை பழனி மலை தணிகை மலையடி**
**திருச்செந்தூர் பரங்குன்றம் பழமுதிர்சோலை**
**ஆறுவீடும் ஆறுமுகனுக் காறுபடையடி**
**வள்ளி தெய்வானை யோடு வாழும் வீடடி (வேலன்)**

**பம்மை ஆற்றங்கரையில் வந்த மணிகண்டன் தானே**
**சரவணப் பொய்கை தவழ்ந்து நின்ற வேலவன் தானே**
**சபரி மலை ஐயப்பனுக்கு அண்ணனாமடி முருகன்**
**வேலவனுக்குத் தம்பி அவன் ஐயப்பன் தான்டி (வேலன்).**

## அருட்பாடல்கள் – 21

**சரவண பவ குக வடிவேலா**
**குக சரவண பவ கதிர்வேலா**
**சிவ சரவண பவ சிவபாலா**
**பவகுக யெய யெய உமைபாலா (சரவண பவ)**

**பழமுதிர் சோலையில் உறைபவனே**
**பக்தர்கள் குறைகளைத் தீர்ப்பவனே**
**திருத்தணி மலையிலே அமர்பவனே**
**திரு அடியார்களை காப்பவனே (சரவண பவ)**

**சூரனை வதை செய்த தீரன் அவன்**
**வானவர் துயர் தனை போக்கியவன்**
**திருப்பரம் குன்றுக்குச் சென்றவனே அங்கு**
**குஞ்சரி தன்னை மணந்தவனே (சரவண பவ)**

**ஆறுமுகம் கொண்ட வேலனவன்**
**உலகுய்ய வந்த தீரன் அவன்**
**பக்தரைக் காப்பதில் முதல்வன் அவன்**
**அழகு மிழிந்திடும் குமரனவன் (சரவண பவ)**

## அருட்பாடல்கள் – 22

**காவடியாம் காவடி கந்தவேலன் காவடி**
**கண்கொள்ளாக் காட்சி தரும் கடம்பனுக்கு காவடி (காவடி)**
**வேல் முருகன் நாமத்திலே விதம் விதமாய்க் காவடி**
**வெற்றிவேலன் காவடி வீரவேலன் காவடி (காவடி)**

**சிங்கார வேலனுக்கு சின்னச் சின்னக் காவடி**
**வண்ணமயில்த் தோகையோடு ஆடிவரும் காவடி (காவடி)**
**பழனிமலைப் பாலகனுக்கு பாற்குடத்தால் காவடி**
**தென் பழனி வேலனுக்கு தேன் குடத்தால் காவடி (காவடி)**

சுவாமி மலை நாதனுக்கு சந்தனத்தால்க் காவடி
பால சுப்ரமணியனுக்கு பஞ்சாமிர்தக் காவடி (காவடி)
ஆறுமுகவேலனுக்கு அழகு மயில்க் காவடி
வண்ண வண்ணக் காவடி வெற்றி வேலன் காவடி (காவடி)

ஸ்ரீமயூர நாதனுக்கு மஞ்சத்தால்க் காவடி
குன்றக் குடி குமரனுக்கு குறைவில்லாத காவடி (காவடி)
பக்தரெல்லாம் கொண்டாடும் காவடியாம் காவடி
பாமாலை பாடி ஆடி நாடி வரும் காவடி (காவடி)
கண் கொள்ளாக் காட்சி தரும் கந்த வேலன் காவடி
எம்மை மறந்தாட வைக்கும் முருக வேளின் காவடி (காவடி)
காண காண அருள் சுரக்கும் சரவண பவன் காவடி
காணக் கண்கள் கோடி வேண்டும் கந்த முருகன் காவடி (காவடி).

அருட்பாடல்கள் – 23

பச்சை மயில் வாகனனே
பச்சை மயில் வாகனனே சிவபாலசுப்ரமண்யனே வா
இச்சை எல்லாம் உன்மேலே எனக்கு எள்ளளவும் ஐயமில்லையே

சரவணப் பொய்கையில் நீ ஆறுமுக மானவனே
சங்கரியின் கரம்படவே நீ ஒரு முகமானவனே
கார்த்திகை பெண்கள் ஐயா உனை வளர்த்த கரங்கள் ஐயா
கார்த்திகையில் மாலையிட்ட எங்களைக் கருத்தோடு காத்திடுவாய் (பச்சை)

ஓம் சக்தி தந்தவனே ஓங்கார ரூபனே வா
ஔவைக்குபதேசிகனே நீ எனை அன்போடு அரவணைப்பாய்
தணிகைமலை தனியரசே தாகம் கொண்டேன் உன்மேலே
தண்டையணிந்த கால்களினால் நீதாளமிட்டு ஆடியே வா (பச்சை)

குறவள்ளி நாயகனே குற்றங்களை குறைத்திட வா
குன்று ஏறி விளையாடும் குன்றக்குடி வேலனே வா
சூராதி சூரனையா நீ சூரனை வென்றவனே
சுந்தரேசன் மைந்தனே நீ சுவாமி மலை நாதனே வா (பச்சை)

பழனி மலை நாயகனே பாவம் எல்லாம் தீர்த்திட வா
பாவிநான் உனைக் கண்டால் எந்தன் பாவமெல்லாம் மறைந்திடுமே
செந்தில் நாயகனே சேவற்கொடியோனே
உன் சேவடியை கண்டாலே உனக்குச் சேவை செய்திடுவேன் (பச்சை)

**தெய்வயானை மணவாளா தேவாதிதேவனே வா**
**தேவர்துயர் தீர்த்தவனே நீ என் துயர்களை மாற்றி டவா**
**வில்லாளி வீரன் ஐயா உன் தம்பி சபரி மலை நாதன் ஐயா**
**காடுமலை கடக்கும் போது நீயும் கருத்தோடு காத்திடுவாய் (பச்சை)**

அருட்பாடல்கள் – 24

**வாரும் வாரும் தெய்வ வடிவேள் முருகரே**
**வள்ளி மணாளரே வாரும் புள்ளி மயிலோரே வாரும் வாரும்**
**பொழுது விடிந்தது பொற்கோழி கூவிற்றுப்**
**பொன்னான வேலரே வாரும் மின்னார் முந் நூலரே வாரும் வாரும்**
**அருணனுதித்தனன் அன்பர்கள் சூழ்ந்தனர்**
**ஆறுமுகத் தோரே வாரும் மாதிலகத் தோரே வாரும் வாரும்**
**பக்தர்கள் சூழ்ந்தனர் பாடல் பயின்றனர்**
**பன்னிரு தோளரே வாரும் பொன்மலர்த் தாளரே வாரும் வாரும்**
**தொண்டர்கள் நாடினர் தோத்திரம் பாடினர்**
**சுப்ரமணியரே வாரும் வைப்பி னணியரே வாரும் வாரும்**

அருட்பாடல்கள் – 25

**பழனி என்ற ஊரிலே பழனி என்ற பேரிலே**
**பவனி வந்தான் தேரிலே பலனும் தந்தான் நேரிலே முருகன் (பழனி)**

**பழமுதிரும் சோலையிலே பாற்காவடி ஆடிவர**
**தணிகை மலை தென்றலிலே பன்னீர் காவடி ஆடிவர**
**சுவாமி மலை மேலிருந்து வீர வேலும் வெற்றி தர**
**செந்தூரின் வாசலிலே சந்தன காவடி ஆடிவர முருகன் (பழனி)**

**கதிர்காம நதியோரம் தீர்த்த காவடி ஆடிவர**
**சந்நிதியின் வீதியிலே பறவை காவடி ஆடிவர**
**செல்ல கதிர்காம மலையோரம் நாதஸ்வரம் முழங்கிவர**
**நல்லூரின் கோபுரத்தில் மணியோசை முழங்கிவர முருகன் (பழனி)**

## அருட்பாடல்கள் – 26

**காவடியாட்டம் காவடியாட்டம் காவடியாட்டம் - அந்த**
**கந்தவேலன் புகழைப்பாடும் காவடியாட்டம்**

**பால்காவடியாட்டத்திலே பாலமுருகனைப் பாருங்க**
**வேல்காவடியாட்டத்திலே வேல்முருகனைத் தேடுங்க**
**(காவடியாட்டம்)**
**பன்னீர்க் காவடியாட்டத்திலே பழனியப்பனைப் பாருங்க**
**பஞ்சாமிர்தக் காவடியாட்டத்திலே பாலசுப்ரமணியனைத் தேடுங்க (காவடியாட்டம்)**
**தேன் காவடியாட்டத்திலே திருத்தணியனைப் பாருங்கோ**
**தினைக் காவடியாட்டத்திலே செந்தூரனை தேடுங்க (காவடியாட்டம்)**
**சந்தனக் காவடியாட்டத்திலே சாமிநாதனைப் பாருங்கோ**
**சர்ப்பக் காவடியாட்டத்திலே சண்முகனைத் தேடுங்க (காவடியாட்டம்)**
**சின்ன சின்னக் காவடியிலே சிங்கார வேலனைப் பாருங்க**
**வண்ண வண்ணக் காவடியிலே வாகை வேலனைத் தேடுங்க (காவடியாட்டம்)**
**மச்சக் காவடியாட்டத்திலே மயூரநாதனைப் பாருங்க**
**பச்சைமயில் காவடியிலே பழனியாண்டவனைத் தேடுங்க (காவடியாட்டம்)**
**விதவிதமான காவடியிலே வெற்றிவேலனைப் பாருங்க**
**குறைவில்லாத காவடியிலே குன்றக் குடியானைத் தேடுங்க (காவடியாட்டம்)**
**பால்க்காவடி, பன்னீர்க் காவடி, புஷ்பக் காவடி**
**தேன்காவடிஇ தினைக் காவடி, வண்ணக் காவடி**
**(காவடியாட்டம்)**
**சந்தனக் காவடி, சர்ப்பக் காவடி, சின்னக் காவடி**
**வண்ணக் காவடி, மயில் காவடி, மச்சக் காவடி**
**(காவடியாட்டம்).**

## அருட்பாடல்கள் – 27

**யெயமுருகா யெயமுருகா யெய யெய யெய யெய யெயமுருகா**
**வேல்முருகா வேல்முருகா வேல்வேல் வேல் வேல் வேல் முருகா**

**சரவண பவனே யெயமுருகா சண்முக நாதா யெயமுருகா**
**பார்வதி மைந்தா வேல் முருகா பசுபதி புத்ரா வேல்முருகா (யெய)**

**திருமகள் மருகா யெயமுருகா திருமால்மருகா யெயமுருகா**
**ஐங்கரன் இளையா வேல் முருகா ஐயப்பன் தமையா வேல்முருகா (யெய)**

**தெய்வானை நாதா யெயமுருகா வள்ளிமணாளா யெயமுருகா**
**திருப்பரங்கிரி வாழ் வேல் முருகா திருத்தணி மலை வாழ் வேல்முருகா (யெய)**

**பழனிப்பதி வாழ் யெய முருகா ஏரகத் தேவா யெயமுருகா**
**திருத்தணி வாசா வேல்முருகா பழமுதிர் சோலை யெய வேல்முருகா (யெய)**
**கார்த்திகேயா யெயமுருகா கலியுக வரதா யெய முருகா**
**ஆபத்பாந்தவா வேல்முருகா அனாத ரட்சகா வேல் முருகா (யெய)**

**அமரர்கள் தேவா யெயெ முருகா அடியார்கள் நேசா யெயெ முருகா**
**வேதத்தின் நாயகா வேல்முருகா குற்றங்கள் பொறுத்தெமை வேல்முருகா (யெய)**

அருட்பாடல்கள் – 28

**நீ இருக்கும் கோவிலிலே நாங்கள் வந்து தேடுகின்றோம்**
**எங்கு ஐயா சென்று விட்டாய் வேல் முருகா**
**நீயும் சென்ற இடம் நாமறியோம் மால்மருகா0**
**பக்தர் நாங்கள் தேடிநிற்க எங்கள் குறைகூறி வைக்க**
**ஆவலாய் ஓடிவந்தோம் வேல்முருகா**
**நீயும் எங்கே ஐயா போய் ஒளிந்தாய் மால்மருகா (நீ இருக்கும் கோவிலிலே)**

**ஆறுபடை வீடிருக்கு சுற்றி வர மயிலிருக்கு**
**எங்கே அப்பா சென்று விட்டாய் வேல்முருகா**
**அதை அறியாமல் வந்தோமையா மால்மருகா**
**அப்பா சக்தி சிவன் பாலகனே வேல்முருகா (நீ இருக்கும் கோவிலிலே)**

**வள்ளி தெய்வானையிடம் சென்று அங்கு தங்கினையோ**
**அவர்கள் தடை செய்ததினால் இங்குவரத் தாமதமே**
**வேலவனே வந்து முகம் காட்டேனய்யா**
**எங்கள் துயர் போக்கி வைக்க வாவேனய்யா (நீ இருக்கும் கோவிலிலே)**

**தேரோடும் வீதியெல்லாம் தேடித் திரிகிறோமே**
**அடியார் நொந்து மனம் வாடுகின்றோமே**
**கார் ஓடும் வீதியெல்லாம் தேர் ஓடி வருகுதையா**
**அந்த தேரினிலே ஏறி இங்கு வாவேனய்யா (நீ இருக்கும் கோவிலிலே)**

**உந்தன் திருவருளை எங்களுக்குத் தாவேனய்யா**
**சரணம் சரணம் என்று வந்தோம் ஐயா**
**உந்தன் பாதமலர் சரணம் நின்றோமையா**
**உந்தன் பாதமலர் சரணம் நின்றோமையா (நீ இருக்கும் கோவிலிலே)**

## அருட்பாடல்கள் – 29

**ஆறுபடை வீடு கொண்ட வேல் முருகா உம்மை**
**தோத்தரித்தோம் தாள் பணிந்தோம் வாருமையா**
**தேவர் குறை தீர்த்து வைத்த வெற்றி வேலா**
**எங்கள் குறை தீரும் ஐயா சக்தி வேலா (ஆறுபடை வீடு)**

**நெற்றிக்கண் பொறிதனிலே அவதரித்தாய் நீ**
**சரவணப் பொய்கையிலே தவழ்ந்து வந்தாய்**
**அன்னை சக்தி அணைப்பிலே வீற்றிருந்தாய்**
**முருகன் எனும் திருநாமம் தானும் பெற்றாய் (ஆறுபடை வீடு)**

**ஓங்கார மூர்த்தியான பிள்ளையாரவர் அவர்**
**மாங்கனியை பெற்று நின்ற கோபத்தினாலே**
**ஆண்டிவேடம் பூண்டு ஐயன் அவனியிலே**
**கோயில் கொண்டு வீற்றிருந்தான் பழனியிலே (ஆறுபடை வீடு)**

**ஆறுபடை வீடிருக்கு நித்தமுமக்கு**
**சுற்றியுலா வருவதற்கு மயிலுமிருக்கு**
**பக்தர் குறை தீர்ப்பதற்கு ஏனோ தயக்கம்**
**கருணை வைத்தால் தீருமையா எங்கள் மயக்கம் (ஆறுபடை வீடு)**

**தமிழீழம் யாழ்நகராம் நல்லூரினிலே**
**தென் இலங்கை கதிர்காமம் நற்பதியிலே**
**அருளோடு நிறைந்திருக்கும் கந்த முருகா**
**பச்சை மயில் ஏறி வந்து ரட்சித் தருள்வீர் (ஆறுபடை வீடு)**

## அருட்பாடல்கள் – 30

**வேல் வேல் முருகா வேல் வேல் முருகா**
**வேல் வேல் முருகா வேல் வேல் முருகா**

**வேல் வேல் முருகா வேல் வேல் முருகா**
**வேல் வேல் முருகா வேல் முருகா**

**ஆடியே வா முருகா எங்கள் அழகிய மால்மருகா**
**ஆனந்த மாமயில் ஏறி ஆனந்த மாமயில் ஏறி**
**அருள்தர வா முருகா எங்கள் ஆறுபடை வேல் முருகா (வேல் வேல்)**

**பாடாத வாயும் பாமாலை பாடும் கைய்விக்கம் முருகையா**
**உன்னைத் தேடாத நெஞ்சும் திருமுகம் தேடும் தரிசனம் தா ஐயா**
**உந்தன் தரிசனம் தா ஐயா (வேல் வேல்)**

**கைய்விக்கம் முருகன் பாதங்கள் பணிந்தால் பாவங்கள் பறந்தோடும்**
**முத்துமணி குமரன் சித்தமது தணிந்தால் யாவும் நிறைவேறும்**
**உடன் யாவம் நிறைவேறும் (வேல் வேல்)**

**அன்பொழிக்கும் உனது கருணையால் வாழ்ந்தோம் சக்தி உமை பாலய்யா**
**பொன்கொழிக்கும் எங்கள் பூமியில் எழுந்த கைய்விக்கம் வேலய்யா**
**எழுந்த கைய்விக்கம் வேலய்யா (வேல் வேல்)**

அருட்பாடல்கள் – 31

**வெற்றிவேல் வீரவேல் சக்திவேல்**
**சக்திவேல் வீரவேல் வெற்றிவேல்**
**அன்னை சக்தி தான் அளித்த வெற்றிவேல் சூரன் உடல்கிழித்த வீரவேல்-திரு**
**செந்தூரில் போர் முடித்த சக்திவேல் குன்றுடைத்து கீரரை சிறை மீட்ட வேல்**
**(வெற்றிவேல்)**

**குன்றுதோறும் ஆடும் எங்கள் குமரவேல் பரங்குன்றத்தில் குஞ்சரியை மணந்த வேல்**
**வள்ளியை மணந்த நல்ல தணிகைவேல் நம்பும் அடியாரை காக்கும் ஞானவேல்**
**(வெற்றிவேல்)**

**சுட்டபழம் அவ்வைக் கன்றளித்த வேல் அவ்வையின் செருக்கறுத்து நின்றவேல்**
**பயனையிலே ரசனை கொண்டு வந்த வேல் பயனை பாடும் அடியாருடன் நிற்கும்**
**வேல் (வெற்றிவேல்)**

**வேல் வேல் வேல் வேல் வெற்றி வேல் வேல் வேல்**
**வீர வேல் வேல் வேல் வெற்றி வேல் வேல் வேல்**

**வேல் வேல் வேல் வேல் வெற்றி வேல் வேல் வேல்**
**வீர வேல் வேல் வேல் வெற்றி வேல் வேல் வேல்**

அருட்பாடல்கள் – 32

**சுப்ரம்மண்யம் சுப்ரம்மண்யம் சண்முகநாதா சுப்ரம்மண்யம்**
**சுப்ரம்மண்யம் சுப்ரம்மண்யம் சண்முகநாதா சுப்ரம்மண்யம்**

**சுப்ரம்மண்யம் சுப்ரம்மண்யம் அரகரசிவசிவ சுப்ரம்மண்யம்**
**சுப்ரம்மண்யம் சுப்ரம்மண்யம் சிவசிவஅரகர சுப்ரம்மண்யம்**

**திருநீறு அணிந்த சுப்ரம்மண்யம் வடிவேல் எடுத்த சுப்ரம்மண்யம்**
**மயிலேறி வந்த சுப்ரம்மண்யம் அழகோடு வாழும் சுப்ரம்மண்யம்**
**(சுப்ரம்மண்யம்)**
**ஆண்டியைப் போல சுப்ரம்மண்யம் அரசனைப் போல சுப்ரம்மண்யம்**
**வெளிவேசம் போடும் சுப்ரம்மண்யம் அழகான தெய்வம் சுப்ரம்மண்யம்(சுப்ரம்மண்யம்)**
**குறவள்ளி நாடும் சுப்ரம்மண்யம் தெய்வானை தேடும் சுப்ரம்மண்யம்**
**மதயானை தம்பி சுப்ரம்மண்யம் எமையாளும் தெய்வம் சுப்ரம்மண்யம் (சுப்ரம்மண்யம்)**

**திருவுள்ள தெய்வம் சுப்ரம்மண்யம் குணமான தெய்வம் சுப்ரம்மண்யம்**
**மலையேறி நின்ற தெய்வம் சுப்ரம்மண்யம் குருவான ஞான சுப்ரம்மண்யம்**
**(சுப்ரம்மண்யம்)**

அருட்பாடல்கள் – 33

**திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா**
**திருத்தணி மலை மீது எதிரொலிக்கும் (2)**

**திருச்செந்தூரிலே வேலாடும் உன்**
**திருப்புகழ் பாடியே கடலாடும் (2) (திருப்பரங்குன்றத்தில்)**

**பழனியிலே இருக்கும் கந்த பழம் நீ**
**பார்வையிலே கொடுக்கும் அன்புப் பழம் (2)**

**பழமுதிர்ச் சோலையில் முதிர்ந்த பழம்**
**பக்திப் பசியோடு வருவோர்க்கு ஞானப் பழம் (2) (திருப்பரங்குன்றத்தில்)**

**சிறப்புடனே கந்தக் கோட்டமுண்டு உன்**
**சிங்கார மயிலாட தோட்டமுண்டு (2)**

**உனக்கான மனக் கோயில் கொஞ்சமில்லை**
**அங்கு உருவாகும் அன்புக்கோ பஞ்சமில்லை (2) (திருப்பரங்குன்றத்தில்)**

அருட்பாடல்கள் – 34

**ஓம் சரவணபவ என ஓது - ஓம் சரவணபவ என ஓது**
**ஓம் சரவணபவ என ஓது - ஓம் சரவணபவ என ஓது**
**குறிஞ்சி நிலமாளும் குமரக்குருபரனின் அருளைப் பெறுவோமே நாளும் -அவன்**
**கையில் வேல் கொண்டு ஆறுபடைநின்று அருளை பொழிவானே நாளும்**
**(ஓம் சரவணபவ)**
**ஆறுமுகமாக அழகுத் தமிழாக குழந்தை வடிவேலன் வந்தான் - அவன்**
**அன்னை மடிமீது அணைத்து மகிழ்ந்திடவே கந்தன் எனும் நாமம் கொண்டான்**
**(ஓம் சரவணபவ)**

**மாங்கனியைப் பெற மயிலின் மீதேறி உலகை வலம் வந்த குமரா நீ**
**கோபக் கனலேறி ஆண்டி உருக்கொண்டு பழனிமலை நின்ற முருகா**
**(ஓம் சரவணபவ)**
**அருணகிரிநாதர் பாடும் திருப்புகழில் நின்று நடனமாடினாய் -ஔவை**
**மூதாட்டி தமிழின் சுவை கேட்டுன் உள்ளம் களித்தாடினாய்**
**(ஓம் சரவணபவ)**
**தேவர் துயர்தீர சூரன் பகை முடித்து வெற்றிவேலாகினாய் - அவன்**
**உடலைக் கூறாக்கி சேவல் கொடியாக்கி மயிலின் மீதேறினாய்**
**(ஓம் சரவணபவ)**
**கந்தன் என்றாலும் கடம்பன் என்றாலும் காத்து வளர்க்கின்ற குமரா உன்**
**அன்பர் படுகின்ற துன்பம் துயர் போக்கி அல்லல் அறுப்பாயே முருகா**
**(ஓம் சரவணபவ)**
**அழகு முருகன் அவன் அழகுத் திருமேனி காணக்கண்கோடி வேண்டும்-அவன்**
**பாதச் சலங்கை ஒலி காதில் விழுந்தாலும் பாவம் பறந்தோடி போகும்**
**(ஓம் சரவணபவ)**

அருட்பாடல்கள் – 35

**அன்பனுக்கு அன்பனான ஐயனே சண்முகா**
**ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா**
**சண்முகா சண்முகா சண்முகா சண்முகா**
**சண்முகா சண்முகா சண்முகா சண்முகா**

**பால் தருவோம் பழம் தருவோம் ஓடி வா சண்முகா**
**பாடிடுவோம் பயனை செய்வோம் பாங்குடன் வா சண்முகா (சண்முகா)**

**கால் பிடித்தோம் காத்தருள வா வா சண்முகா**
**வேல் முருகா மால்மருகா சரவணபவ சண்முகா (சண்முகா)**

பாடிவரும் எங்கள் முன்னே தோன்றிடுவாய் சண்முகா
பரமசிவன் பாலகனே பாங்குடன் வா சண்முகா (சண்முகா)

ஆறுமுக மால்மருகா கலியுககுக சண்முகா
அல்லும் பகலும் உந்தனையே சிந்தித்தோம் சண்முகா (சண்முகா)

ஓடும் மனம் உந்தனையே நாடச் செய்வாய் சண்முகா
ஆனந்தனே எம்முருகா ஆதரிப்பாய் சண்முகா (சண்முகா).

## அருட்பாடல்கள் — 36

பாலன் முருகன் அவன் சுப்பிரமணியன்
சக்தி உமை வேல் கொடுத்த சுப்பிரமணியன்
மால்மருகன் வேலவன் சுப்பிரமணியன்
நம்பிடுவார் நன்றுணையாம் சுப்பிரமணியன்
ஆறுமுகம் கொண்ட ஐயன் சுப்பிரமணியன்
எங்கள் முகம் பார்த்திடுவான் சுப்பிரமணியன் (பாலன்)

புள்ளி மயில் வாகனனே சுப்பிரமணியன்
நாம் இருக்க பயம் ஏன் என்பான் சுப்பிரமணியன்
ஆபத்துவேளையிலே சுப்பிரமணியன்
வந்து காத்து நிற்பான் சுப்பிரமணியன்
வேலோடு வந்திடுவான் சுப்பிரமணியன் - எங்கள்
எதிரிகளை தாக்கி நிற்பான் சுப்பிரமணியன் (பாலன்)

நம்பி நிற்கும் அடியாரைச் சுப்பிரமணியன்
இமை போல் காத்து நிற்பான் சுப்பிரமணியன்
முருகா முருகா என்றால் சுப்பிரமணியன் - உளம்
கனிந்து வந்து நிற்பான் சுப்பிரமணியன்
சுற்றுலாவில் வரும் போது சுப்பிரமணியன்
பக்தர்களைப் பார்த்து நிற்பான் சுப்பிரமணியன் (பாலன்)

ஓம் சரவணபவ நாமம் சுப்பிரமணியன்
மந்திரத்தில் தந்திடுவான் சுப்பிரமணியன்
புகழ்பாடும் பக்தரோடு சுப்பிரமணியன்
நற்றுணையாய் நின்றுடுவான் சுப்பிரமணியன்
சரணம் சரணம் ஐயா சுப்பிரமணியன் - உந்தன்
பாதமலர் சரணம் ஐயா சுப்பிரமணியன்

அருட்பாடல்கள் – 37

**முருகா -- முருகா -- முருகா**
**வருவாய் மயில் மீதினிலே வடிவேலுடனே வருவாய்**
**தருவாய் நலமும் தகவும் புகழும்**
**தவமும் திறமும் தனமும் கனமும். (முருகா) 1.**

**அடியார் பலரிங்குளரே**
**அவரை விடுவித் தருள்வாய்**
**முடியா மறையின் முடிவே!**
**அசுரர் முடிவே கருதும் வடிவேலவனே! (முருகா) 2.**

**சுருதிப் பொருளே, வருக.**
**துணிவே, கனலே, வருக.**
**கருதிக் கருதிக் கவலைப் படுவார்**
**கவலைக் கடலைக் கடியும் வடிவேல் (முருகா) 3.**

**அமரா வதிவாழ்வுறவே**
**அருள்வாய்! சரணம், சரணம்!**
**குமரா, பிணி யாவையுமே சிதறக்**
**குமுறும் சுடர்வேலவனே, சரணம். (முருகா) 4**

**அறிவாகிய கோயிலிலே**
**அருளாகிய தாய் மடிமேல் பொறிவேலுடனே வளர்வாய்,**
**அடியார் புதுவாழ்வுறவே புவிமீதருள்வாய் (முருகா) 5.**

**குருவே, பரமன் மகனே,**
**குகையில் வளருங் கனலே,**
**தருவாய் தொழிலும் பயனும்,**
**அமரர் சமரா திபனே, சரணம். சரணம்..?..**

அருட்பாடல்கள் – 38
**மரகத மயில் மீது**
**வேல் தாங்கும் முருகா**
**மாலயன் காணாத**
**ஜோதியின் பாலா (மரகத மயில்)**
**மாறாத கருணை**
**எமக்கருள் தந்தாய் (2)**
**ஓம் முருகா**
**ஞானவேல் அழகா (2)**

## அருட்பாடல்கள் – 39

**பழனி முருகா வேல் முருகா**
**சரணம் சரணம் வேல் முருகா**
**கணபதி சோதர வேல் முருகா**
**கார்த்திகேயா வேல் முருகா**
**சுப்ரமணியா வேல் முருகா**
**அரகரோகரா சுவாமி**
**அரகரோகரா சுவாமி**
**அரகரோகரா**

## அருட்பாடல்கள் – 40

**கந்தா குமரா கதிர்வேலா**
**கருணா கரனே சிவபாலா**
**வருவாய் அருள்வாய்**
**அழகாய் முருகா (2)**
**மாயோன் மருகா**
**மயில் வாகனனே (2)**
**முருகா முருகா முருகா முருகா**
**முருகா முருகா மயில்மேல்**
**மாயோன் மருகா**
**மயில் வாகனனே (2) /உச்சி முருகன் அடியார் சாந்தி 38-40**

## ஆறுபடை வீடு திருப்புகழ்

### திருப்பரங்குன்றம் (மதுரைக்கு அருகில்)

**மன்றலங் கொந்துமிசை தெந்தனத் தெந்தனென**
**வண்டினங் கண்டுதொடர் குழல்மாதர்**
**மண்டிடுந் தொண்டையமு துண்டுகொண் டன்புமிக**
**வம்பிடுங் கும்பகன தனமார்பில்**
**ஒன்றஅம் பொன்றுவிழி கன்றஅங் கங்குழைய**
**உந்தியென் கின்றமடு விழுவேனை**
**உன்சிலம் புங்கனக தண்டையுங் கிண்கிணியும்**
**ஒண்கடம் பும்புனையும் அடிசேராய்**
**பன்றியங் கொம்புகம டம்புயங் கஞ்சுரர்கள்**
**பண்டையென் பங்கமணி பவர்சேயே**
**பஞ்சரங் கொஞ்சுகிளி வந்துவந் தைந்துகர**

**பண்டிதன் தம்பியெனும் வயலூரா**
**சென்றுமுன் குன்றவர்கள் தந்தபெண் கொண்டுவளர்**
**செண்பகம் பைம்பொன்மலர் செறிசோலை**
**திங்களுஞ் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர்**
**தென்பரங் குன்றிலுறை பெருமாளே.**

திருச்செந்தூர் (கடற்கரைத் தலம்)

**தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்**
**தண்கழல்சி லம்புடன் கொஞ்சவேநின்**
**தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்**
**சந்தொடம ணைந்துநின் றன்புபோலக்**
**கண்டுறக டம்புடன் சந்தமகு டங்களுங்**
**கஞ்சமலர் செங்கையுஞ் சிந்துவேலும்**
**கண்களுமு கங்களுஞ் சந்திரநி றங்களுங்**
**கண்குளிர என்றன்முன் சந்தியாவோ**
**புண்டரிகர் அண்டமுங் கொண்டபகி ரண்டமும்**
**பொங்கியெழ வெங்களங் கொண்டபோது**
**பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கினும் வளர்ந்துமுன்**
**புண்டரிகர் தந்தையுஞ் சிந்தைகூரக்**
**கொண்டநட னம்பதஞ் செந்திலிலும் என்றன்முன்**
**கொஞ்சிநட னங்கொளுங் கந்தவேளே**
**கொங்கைகுற மங்கையின் சந்தமணம் உண்டிடுங்**
**கும்பமுநி கும்பிடுந் தம்பிரானே.**

பழனி (மலைமேல் உள்ள தலம்)

**தமரு மமரு மனையு மினிய**
**தனமு மரசும் அயலாகத்**
**தறுகண் மறலி முறுகு கயிறு**
**தலையை வளைய எறியாதே**
**கமல விமல மரக தமணி**
**கனக மருவு மிருபாதங்**
**கருத அருளி யெனது தனிமை**
**கழிய அறிவு தரவேணும்**
**குமர சமர முருக பரம**
**குலவு பழநி மலையோனே**

கொடிய பகடு முடிய முடுகு
குறவர் சிறுமி மணவாளா
அமர ரிடரு மவுண ருடலு
மழிய அமர்செய் தருள்வோனே
அறமு நிறமு மயிலு மயிலு
மழகு முடைய பெருமாளே.

## சுவாமிமலை (குருவாக உபதேசம் செய்த தலம்)

சரணகம லால யத்தை அரைநிமிச நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்க முறுவேனோ
கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலே செச்சை
கமழுமண மார்க டப்ப மணிவோனே
தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொ டுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா
அருணதள பாத பத்ம மதுநிதமு மேது திக்க
அரியதமிழ் தான ளித்த மயில்வீரா
அதிசயம நேக முற்ற பழநிமலை மீது தித்த
அழகதிரு வேர கத்தின் முருகோனே.

## திருத்தணி (திருமணம் புரிந்த தலம்)

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவர் ருயிர்க்குஞ் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி

**தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் பெருமாளே.**

பழமுதிர்ச்சோலை (மலை மேல் உள்ள தலம், மதுரைக்கு அருகில்).

**அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி வரவேணும்
மகபதி யாகி மருவும் வலாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு பெருமாளே.**

கருணாகர வேலன்

**பலன் உலகத் துன்பம் நீங்கி உயர்ந்த இன்பம் பெற
மேலும் பலன்கள் அறிய - இனிய வாழ்விற்கு வழி**

**மண்டலத்து உயிர் யாவையும் ஆள் முதால்
வண்டு மொய்க்கும் நன் மஞ்சரி மொய்ம்பினோய்
கொண்டலைப் பழித்துள்ள அருட்கொடைக்
கோவே என்றனை ஆள என்று அன்பின் என்
வெண் தமிழ்ச் சொலும் கேட்டு அருள் செய்வையோ
வீதி நாய் பொல் அலைந்திடச் செய்வையோ
அண்டர் பூதி அடைந்திட செய்வையோ
அறிகிலேன் கருனாகரவேலனே. 1**

**வஞ்சனாய் அறிவீனர்கள் நம்பும் இவ்
வாழ்விலே உழன்று இப்புலை யாக்கைதான்
துஞ்ச அந்தகன் கையிற் கொடுப்பையோ
சூழ்ந்து சூழ்ந்து இனும் காத்திடச் செய்வையோ
நஞ்சம் உண்டு நடித்தவர் செம்மலே
நங்கை வள்ளி தெய்வானை மணாளனே**

கஞ்ச மெல் அடி ஈந்து எனை ஆள்வையோ
காண்கிலேன் கருணாகர வேலனே. 2

தாயும் நீ பெற்ற தந்தையும் நீ மணந்
தாளும் நீ சொந்தத் தம்பியும் நீ தந்தை
தாயும் நீ அன்னை தாயும் நீ அண்ணன் நீ
தாதையின் மருமானும் நீ மாமன் நீ
சேயும் மாமியும் நீ தொடர்ந்தோரும் நீ
தேவு நீ இறையோனும் நீ மன்னு நீ
ஆயும் என்அக நீ புக்கு இருந்து எனை
ஆண்டு கொள் கருணாகர வேலனே. 3

அன்பு எனும் தட்பம் ஆனது என் நெஞ்சகத்து
அளவை இன்று எழுந்து ஓங்கிப் பரம்பவும்
என்பு நெக்குடைந்து என் வசம் நான் இன்றி
இரு கண்ணாலும் கண்ணீர் உகுத்து ஏசு இலா
இன்பு தோன்றவும் செய்ய ஒரு நீர்மையை
என்று தந்தருள்வாய் எழில் எந்தையே
துன்பிநின்று சுவர்க்கர்ப் புரந்த ஒர்
சுவாமியே கருணாகர வேலனே. 4

நீரில் நாரம் படர்ந்தது போல் என் உள்
நீக்கம் இன்றி நிறைந்த அஞ்ஞானம் ஆம்
கார் இருட்டைத் துமிக்க வெளிச்சமே
காட்டு ஞான விளக்கினை ஏற்ற இந்
நேரம் வந்து அருள் நீட்ட உனக்கு அயர்
நேமம் ஏதும் அறிந்திலன் நான் நிதம்
நாரொடும்படர்வேன் நினை ஒப்பிலா
ஞாட்புடைக் கருணாகர வேலனே. 5

மூன்று இரண்டு புலன்வென்று அகண்டமா
மோன ஞான மெய் விண்புலம் மன்னி நின்று
ஆன்ற இன்பம் அது ஒன்றனை இச்சிப்பார்
அந்தரங்கத்தில் தித்திக்கும் தித்திப்பை
மூன்று இரண்டையும் வென்று அறியாத நான்
மோகித்து இம்பர்த்தியங்கித் திகைக்கிறேன்
ஈன்ற நின் அருள் என் பக்கம் ஆகும் நாள்
எந்த நாள் கருணாகர வேலனே. 6

தண்ணளிதெய்வ ரத்தினம் ஆம் உனைச்
சந்ததம் சிந்தை செய்கின்ற நானும் நான்

உண்ணும உண்டியும் உண்டிகளால் புட்டி
உறும் உடம்பும் உள் ஆக்கையும் நோக்கமும்
கண்ணிக் கண்ணிக் கலங்கிட நிற்கின்ற
கண்ணது ஆம் இந்தப் பூமியும் பூமி மீது
எண்ண உள்ள எல்லாம் மலம் ஆகுமேல்
என் செய்குவேன் கருணாகர வேலனே. 7

சாவியைக் குத்தும் காலத்திலே எழும்
தண்டுலத்தினை ஏய்ப்ப மனத்தின் எக்
காலமும் செய் தியானத்தினால் இருள்
கண்டிதப்பட்டு இலங்கும் மெய்ஞ்ஞானம் என்று
ஒளியிடும் சுருதிப்படிக்கே உனை
உள்ளினேன் அருள் உற்று வந்து இப்பொலா
ஞாலநச்சு மயக்கை வர்ச்சித்து அருள்
நாட்டி ஆள் கருணாகர வேலனே. 8

எண்ணிலாத பல் கால்களைக் கொண்டு உலகு
எங்கும் ஒர் கணத்து ஏகும் மனத்தை ஓம்
கண்ணிவைத்துப் பிடித்து வளைத்து உளே
கட்டி நான் நல்ல காரிய வேடனாய்
எண்ணம அற்ற சுகத்தை அடைந்து இனி
எந்தை நின் அருள் மண்ணும் வெளிக்குள்ளே
மண் இகந்து உய்யும் மார்க்கத்தில் நிற்க என்
மாட்டு வா கருணாகர வேலனே. 9

கன்னிமார் அறுவர்க்கு அட்ட சித்தியைக்
காதலாய் அன்று அதிர்த்த பிரான் உறை
கன்னி நாட்டு அங்கயற்கண்ணி தன் அகம்
கண் குளிர்ப்புற உள்ள கைக்கிள்ளையே
தென் அவிர்ந்து உயர் தென் கயிலைப் பதிச்
செல்வனுக்கும் திருப்புகழ் செப்பிய
என்னை ஆள் உடையானுக்கும் சாமியே
என்னை ஈ கருணாகர வேலனே. 10

## திருக்கந்தர் திருப்பலாண்டு

**பாடல் - திருக்கந்தர் திருப்பலாண்டு (அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)**

**பண் : பஞ்சமம் / தேவாரப்பண் - தானெனை முன் படைத்தான்**
**இராகம் : ஆகிரி / தாளம் - ரூபகம்**

**பொன்னுயர் நாட்டிறை புத்திரி தனைமன்றல் புரிந்துசெந் தினைகாத்த**
**மின்னினை மாமணஞ் செய்தரு ணாடிய வித்தகர் தமையாண்டு**
**நன்னல நல்கருள் வேந்தென விளங்குபு நான்மறை களும்விரித்துப்**
**பன்னரும் பரமென விருக்குநந் தேவுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 1**

**மூப்பறு கட்டிள மைத்திரு மேனியு மூப்புடை யார்க்கெல்லாம்**
**மூப்புடை மேன்மையு மூப்புடை யாவிகண் முழுவது மூப்பிளமை**
**யாப்பறு மாறெமை யாள்கும ராவென நாடிறை மையுமல்கு**
**பாப்பணை யான்மரு மானெனும் வேலற்குப் பல்லாண்டு கூறுதுமே. 2**

**நீர்வள மார்பரங் குன்றிலு நீடெழி னிமிர்திருச் செந்திலிலும்**
**சீர்வள மார்திரு வேரகந் தன்னிலுந் தீதறு பழநியிலும்**
**ஏர்வள மார்திருச் சோலையங் கிரியிலு மிருந்தடி நினைவார்க்குப்**
**பார்வள மேல்வள நல்கருட் குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 3**

**தணிகைகந் தாசலஞ் சமரா புரிதிருச் சயிலமி லஞ்சியறா**
**அணிகெழு வேள்வியங் கிரிபொதி யாசல மாரிப்பா டுடுப்பைமகா**
**திணியகத் தேவைசெங் கோடுகுன் றக்குடி திருவுரு மலையாரூர்**
**பணியுயர் கூடலம் பதியுறை குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 4**

**சித்தர்கள் காண்கதிர் காமமண் ணாமலை சீசயி லங்கயிலை**
**எத்தவ ரும்புகழ் மேரு சிராசல மேர்த்திரு நீற்றுமலை**
**உத்தம நீள்கழு கோதியெண் கண்ணெனு மொண்டலங் களின்மேவிப்**
**பத்தருக் கருள்புரி கின்றசெவ் வேளுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 5**

**நேசர்கள் வாழெழின் மயிலவொண் மாதிர நீர்மலி பெரும்பேறு**
**கோசரர் சூழ்கந்த கோட்டங் குமாரவொண் கோட்ட நல் வேற்காடு**
**மாசில்கு மாரபு ரம்பெரு வயலிரு கொடுமளூர் வதிந்து அடியார்**
**பாசறை தீர்த்தருள் பு=ரிமுரு கோனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 6**

**துப்புறு பூண்டிபுள் வேணகர் வேனகர் தூயவர் புகழாண்டார்**
**குப்பமி றாதபொ னம்பல மெனவே குயினில யங்களிலும்**
**ஒப்பக நாடுகள் காடுகள் கீழ்மே லுலகுயிர்த் திரள்களிலும்**
**பப்புவர் மீக்கூ றிடநிறை குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 7**

கட்சியி லேபடுத் துயில் கொண்டிருட் காரியி னுங்கொடிய
அட்சிகண் மோகன மாழ்ந்துள வாயுளை யவம்பணி யவியாமல்
வெட்சியுங் கோடையு மணிதிரு மொய்ம்புகள் விளங்கிட மென்றூவிப்
பட்சியில் வருமுரு கோனெனு மாதிக்குப் பல்லாண்டு கூறுதுமே. 8

எண்ணுந ரெண்ணம தோர்ந்தரு ளேந்தலு மிரவொடு பகலிறந்த
கண்ணர்கள் பின்றொடர் காதலுள் ளானுமொர் காலமு மிடர்நாசம்
நண்ணுத லில்லுயர் பெருந்திற லோனுமெஞ் ஞாலமு நினைவொன்றால்
பண்ணிடு மீசனு மாயுள்ள குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 9

அன்னையின் மேம்படு கருணையி னாற்குக னடிகளைப் புகழ்தாசன்
தன்னைமெய் யடியவ னாக்கவென் றகம்புறஞ் சார்ந்துவந் தேற்றமதி
சொன்னவ னாயனு பூதிசொன் னவற்குறு சூரறுத் தெவராலும்
பன்னாவொ ணாநல நல்கிய குகனுக்குப் பல்லாண்டு. 10

## தெய்வமணி மாலை – திரு அருட்பா   ஐந்தாம் திருமுறை

1)திருவோங்கு புண்ணியச் செயல்ஓங்கி அன்பருள்
திறலோங்கு செல்வம்ஓங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்
திகழ்ந்தோங்க அருள்கொடுத்து
மருவோங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க
வளர்கருணை மயம்ஓங்கிஓர்
வரம்ஓங்கு தெள்அமுத வயம்ஓங்கி ஆனந்த
வடிவாகி ஓங்கிஞான
உருவோங்கும் உணர்வின்நிறை ஒளிஓங்கி ஓங்கும்மயில்
ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்
உறவோங்கும் நின்பதம்என் உளம்ஓங்கி வளம்ஓங்க
உய்கின்ற நாள்எந்தநாள்
தருவோங்கு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

2)பரம்ஏது வினைசெயும் பயன்ஏது பதிஏது
பசுஏது பாசம்ஏது
பத்திஏ தடைகின்ற முத்திஏ தருள்ஏது
பாவபுண் யங்கள்ஏது
வரம்ஏது தவம்ஏது விரதம்ஏ தொன்றும்இலை

மனம்விரும் புணவுண்டுநல்
வத்திரம் அணிந்துமட மாதர்தமை நாடிநறு
மலர்சூடி விளையாடிமேல்
கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந் தவரொடு
கலந்துமகிழ் கின்றசுகமே
கண்கண்ட சுகம்இதே கைகண்ட பலன்எனும்
கயவரைக் கூடாதருள்
தரமேவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

3)துடிஎன்னும் இடைஅனம் பிடிஎன்னும் நடைமுகில்
துணைஎனும் பிணையல்அளகம்
சூதென்னும் முலைசெழுந் தாதென்னும் அலைபுனல்
சுழிஎன்ன மொழிசெய்உந்தி
வடிஎன்னும் விழிநிறையும் மதிஎன்னும் வதனம்என
மங்கையர்தம் அங்கம்உற்றே
மனம்என்னும் ஒருபாவி மயல்என்னும் அதுமேவி
மாழ்கநான் வாழ்கஇந்தப்
படிஎன்னும் ஆசையைக் கடிஎன்ன என்சொல்இப்
படிஎன்ன அறியாதுநின்
படிஎன்ன என்மொழிப் படிஇன்ன வித்தைநீ
படிஎன்னும் என்செய்குவேன்
தடிதுன்னும் மதில்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

4) வள்ளல்உனை உள்ளபடி வாழ்த்துகின் றோர்தமை
மதித்திடுவ தன்றிமற்றை
வானவரை மதிஎன்னில் நான்அவரை ஒருகனவின்
மாட்டினும் மறந்தும்மதியேன்
கள்ளம்அறும் உள்ளம்உறும் நின்பதம்அ லால்வேறு
கடவுளர் பதத்தைஅவர்என்
கண்எதிர் அடுத்தைய நண்என அளிப்பினும்
கடுஎன வெறுத்துநிற்பேன்
எள்ளளவும் இம்மொழியி லேசுமொழி அன்றுண்மை
என்னை ஆண் டருள்புரிகுவாய்
என்தந்தை யேஎனது தாயேஎன் இன்பமே
என்றன்அறி வேஎன்அன்பே

தள்ளரிய சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

5) பதிபூசை முதலநற் கிரியையால் மனம்எனும்
பசுகரணம் ஈங்கசுத்த
பாவனை அறச்சுத்த பாவனையில் நிற்கும்மெய்ப்
பதியோக நிலைமைஅதனான்
மதிபாசம் அற்றதின் அடங்கிடும் அடங்கவே
மலைவில்மெய்ஞ் ஞானமயமாய்
வரவுபோக் கற்றநிலை கூடும்என எனதுளே
வந்துணர்வு தந்தகுருவே
துதிவாய்மை பெறுசாந்த பதம்மேவு மதியமே
துரிசறு சுயஞ்சோதியே
தோகைவா கனமீ திலங்கவரு தோன்றலே
சொல்லரிய நல்லதுணையே
ததிபெறும் சென்னையில கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

6)காமஉட் பகைவனும் கோபவெங் கொடியனும்
கனலோப முழுமூடனும்
கடுமோக வீணனும் கொடுமதம் எனுந்துட்ட
கண்கெட்ட ஆங்காரியும்
ஏமம்அறு மாச்சரிய விழலனும் கொலைஎன்
றியம்புபா தகனுமாம்இவ்
வெழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற்றி டாமல்அருள்வாய்
சேமமிகு மாமறையின் ஓம்எனும் அருட்பதத்
திறன்அருளி மலயமுனிவன்
சிந்தனையின் வந்தனைஉ வந்தமெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகாரத்னமே
தாமம்ஒளிர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகர் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

7) நிலைஉறும் நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடு
நிகழ்சாந்த மாம்புதல்வனும்

நெறிபெறும் உதாரகுணம் என்னும்நற் பொருளும்மருள்
நீக்கும்அறி வாம்துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனும் சுத்தமுறு
மனம்என்னும் நல்ஏவலும்
வருசகல கேவலம்இ லாதஇட மும்பெற்று
வாழ்கின்ற வாழ்வருளுவாய்
அலைஇலாச் சிவஞான வாரியே ஆனந்த
அமுதமே குமுதமலர்வாய்
அணிகொள்பொற் கொடிபசுங் கொடிஇரு புறம்படர்ந்
தழகுபெற வருபொன்மலையே
தலைவர்புகழ் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

8) ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்க்வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

9) ஈஎன்று நான்ஒருவர் இடம்நின்று கேளாத
இயல்பும்என் னிடம்ஒருவர்ஈ
திடுஎன்ற போதவர்க் கிலைஎன்று சொல்லாமல்
இடுகின்ற திறமும்இறையாம்
நீஎன்றும் எனைவிடா நிலையும்நான் என்றும்உள
நினைவிடா நெறியும்அயலார்
நிதிஒன்றும் நயவாத மனமும்மெய்ந் நிலைநின்று
நெகிழாத திடமும்உலகில்
சீஎன்று பேய்என்று நாய்என்று பிறர் தமைத்

தீங்குசொல் லாததெளிவும்
திரம்ஒன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்
திருவடிக் காளாக்குவாய்
தாய்ஒன்று சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

10)கரையில்வீண் கதைஎலாம் உதிர்கருங் காக்கைபோல்
கதறுவார் கள்ளுண்டதீக்
கந்தம்நா றிடஊத்தை காதம்நா றிடஉறு
கடும்பொய்இரு காதம்நாற
வரையில்வாய் கொடுதர்க்க வாதம்இடு வார்சிவ
மணங்கமழ் மலர்ப்பொன்வாய்க்கு
மவுனம்இடு வார்இவரை மூடர்என ஓதுறு
வழக்குநல் வழக்கெனினும்நான்
உரையிலவர் தமையுறா துனதுபுகழ் பேசும்அவ
ரோடுறவு பெறஅருளுவாய்
உயர்தெய்வ யானையொடு குறவர்மட மானும்உள்
உவப்புறு குணக்குன்றமே
தரையில்உயர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

11) நாம்பிரமம் நமைஅன்றி ஆம்பிரமம் வேறில்லை
நன்மைதீ மைகளும் இல்லை
நவில்கின்ற வாகிஆந் தரம்இரண்டினும்ஒன்ற
நடுநின்ற தென்றுவீணாள்
போம்பிரம நீதிகேட் போர்பிரமை யாகவே
போதிப்பர் சாதிப்பர்தாம்
புன்மைநெறி கைவிடார் தம்பிரமம் வினைஒன்று
போந்திடில் போகவிடுவார்
சாம்பிரம மாம்இவர்கள் தாம்பிரமம் எனும்அறிவு
தாம்புபாம் பெனும்அறிவுகாண்
சத்துவ அகண்டபரிபுரண காரஉப
சாந்தசிவ சிற்பிரம நீ
தாம்பிரிவில் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

12) பார்கொண்ட நடையில்வன் பசிகொண்டு வந்திரப்
பார்முகம் பார்த்திரங்கும்
பண்பும்நின் திருவடிக் கன்பும்நிறை ஆயுளும்
பதியும்நல் நிதியும்உணர்வும்
சீர்கொண்ட நிறையும்உட் பொறையும்மெய்ப் புகழும்நோய்த்
தீமைஒரு சற்றும்அணுகாத்
திறமும்மெய்த் திடமும்நல் இடமும்நின் அடியர்புகழ்
செப்புகின் றோர்அடைவர்காண்
கூர்கொண்ட நெட்டிலைக் கதிர்வேலும் மயிலும்ஒரு
þக்‘ழியங் கொடியும் விண்ணோர்
கோமான்தன் மகளும்ஒரு மாமான்தன் மகளும்மால்
கொண்டநின் கோலமறவேன்
தார்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

13)வன்பெரு நெருப்பினைப் புன்புழுப் பற்றுமோ
வானைஒரு மான்தாவுமோ
வலியுள்ள புலியைஓர் எலிசீறு மோபெரிய
மலையைஓர் ஈச்சிறகினால்
துன்புற அசைக்குமோ வச்சிரத் து‘ண்ஒரு
துரும்பினால் துண்டமாமோ
சூரியனை இருள்வந்து சூழுமோ காற்றில்மழை
தோயுமோ இல்லைஅதுபோல்
அன்புடைய நின்அடியர் பொன்அடியை உன்னும்அவர்
அடிமலர் முடிக்கணிந்தோர்க்
கவலமுறு மோகாமம் வெகுளிஉறு மோமனத்
தற்பமும்வி கற்பம்உறுமோ
தன்புகழ்செய் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தன்முகத் துய்யமணி உன்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

14)காணலிடை நீரும்ஒரு கட்டையில் கள்வனும்
காண்உறு கயிற்றில் அறவும்
கடிதரு கிளிஞ்சிலிடை வெள்ளியும் பொன்னைக்
கதித்தபித் தளையின்இடையும்
மானலில் கண்டுள மயங்கல்போல் கற்பனையை
மாயையில் கண்டுவிணே

மனைஎன்றும் மகவென்றும் உறவென்றும் நிதிஎன்றும்
வாள்வென்றும் மானம்என்றும்
ஊனலின் உடம்பென்றும் உயிரென்றும் உளம்என்றும்
உள்என்றும் வெளிஎன்றும்வான்
உலகென்றும் அளவுறுவி காரம்உற நின்றஎனை
உண்மைஅறி வித்தகுருவே
தானமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தன்முகத் துய்யமணி உன்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

15) கற்றொளிகொள் உணர்வினோர் வேண்டாத இப்பெருங்
கன்மவுட லில்பருவம்நேர்
கண்டழியும் இளமைதான் பகல்வேட மோபுரைக்
கடல்நீர்கொ லோகபடமோ
உற்றொளியின் வெயில்இட்ட மஞ்சளோ வான்இட்ட
ஒருவிலோ நீர்க்குமிழியோ
உரைஅனல் பெறக்காற்றுள் ஊதும் துரத்தியோ
உன்றும்அறி யேன் இதனைநான்
பற்றுறுதி யாக்கொண்டு வனிதயைர்கண் வலையினில்
பட்டுமதி கெட்டுழன்றே
பாவமே பயில்கின்ற தல்லாது நின்அடிப்
பற்றணுவும் உற்றறிகிலேன்
சற்றைஅகல் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தன்முகத் துய்யமணி உன்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

16) சடமாகி இன்பம் தராதாகி மிகுபெருஞ்
சஞ்சலா காரமாகிச்
சற்றாகி வெளிமயல் பற்றாகி ஓடும்இத்
தன்மைபெறு செல்வம்ந்தோ
விடமாகி ஒருகபட நடமாகி யாற்றிடை
விரைந்துசெலும் வெள்ளம்ஆகி
வேலைஅலை யாகிஆங் காரவலை யாகிமுதிர்
வேனில்உறு மேகம்ஆகிக்
கடமாய சகடமுறு காலாகி நீடுவாய்க்
காலோடும் நீராகியே
கற்விலா மகளிர்போல் பொற்பிலா துழலும்இது

கருதாத வகைஅருளுவாய்
தடமேவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

17) உப்புற்ற பாண்டம்என ஒன்பது துவாரத்துள்
உற்றசும் பொழுகும்உடலை
உயர்கின்ற வானிடை எறிந்தகல் என்றும்மலை
உற்றிழியும் அருவிஎன்றும்
வெப்புற்ற காற்றிடை விளக்கென்றும் மேகம்உறு
மின்என்றும் வீசுகாற்றின்
மேற்பட்ட பஞ்சென்றும் மஞ்சென்றும் வினைதந்த
வெறுமாய வேடம்என்றும்
கப்புற்ற பறவைக் குடம்பைஎன் றும்பொய்த்த
கனவென்றும் நீரில்எழுதும்
கைஎழுத் தென்றும்உட் கண்டுகொண் டதிலாகை
கைவிடேன் என்செய்குவேன்
தப்பற்ற சென்னையில் கந்தகோட் டத்துள்வளா
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

18) எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
ஏக்கற்றி ருக்கும்வெறுவாய்
எங்கள்பெரு மான்உனை வணங்காத மூடர்தலை
இகழ்விற கெடுக்கும்தலை
கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
கலநீர் சொரிந்தஅழுகண்
கடவுள்நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்திழவு கேட்கும்செவி
பந்தம்அற நினைஎணாப் பாவிகள் தம்நெஞ்சம்
பகீர்என நடுங்கும்நெஞ்சம்
பரமநின் திருமுன்னர் குவியாத வஞ்சர்கை
பலிஏற்க நீள்கொடுங்கை
சந்தமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளா
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

19) ஐயநின் சீர்பேசு செல்வர்வாய் நல்லதெள்
அமுதுண் டுவந்ததிருவாய்
அப்பநின் திருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்தோங்கி வாழுந்தலை
மெய்யநின் திருமேனி கண்டபுண் ணியர்கண்கள்
மிக்கஒளி மேவுகண்கள்
வேலநின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபம் கேட்கும்செவி
துய்யநின் பதம்எண்ணும் மேலோர்கன் நெஞ்சம்மெய்ச்
சுகரூப மானநெஞ்சம்
தோன்றல்உன் திருமுன் குவித்தபெரி யோ'ர்கைகன்
சுவர்ன்னமிடு கின்றகைகள்
சையம்உயர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

20) உழல்உற்ற உழவுமுதல் உறுதொழில் இயற்றிமலம்
ஒத்தபல பொருள்ஈட்டிவீண்
உறுவயிறு நிறையவெண் சோறடைத் திவ்வுடலை
ஒதிபோல் வளர்த்துநாளும்
விழல்உற்ற வாழ்க்கையை விரும்பினேன் ஐயஇவ்
வெய்யஉடல் பொய்என்கிலேன்
வெளிமயக் கோமாய விடமயக் கோஎனது
விதிமயக் கோஅறிகிலேன்
கழல்உற்ற நின்துணைக் கால்மலர் வணங்கிநின்
கருணையை விழைந்துகொண்டெம்
களைகணே ஈராறு கண்கொண்ட என்றன்இரு
கண்ணேஎ னப்புகழ்கிலேன்
தழைவுற்ற சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

21) வானம்எங் கேஅமுத பானம்எங்கே அமரர்
வாழ்க்கைஅபி மானம்எங்கே
மாட்சிஎங் கேஅவர்கள் சூழ்ச்சிஎங் கேதேவ
மன்னன்அர சாட்சிஎங்கே
ஞானம்எங் கேமுனிவர் மோனம்எங் கேஅந்த
நான்முகன் செய்கைஎங்கே
நாரணன் காத்தலை நடத்தல்எங் கேமறை

நவின்றிடும் ஒழுக்கம்எங்கே
ஈனம்அங் கேசெய்த தாருகனை ஆயிர
இலக்கம்உறு சிங்கமுகனை
எண்அரிய திறல்பெற்ற சூரனை மறக்கருணை
ஈந்துபணி கொண்டிலைஎனில்
தானமிங் கேர்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

22) மனமான ஒருசிறுவன் மதியான குருவையும்
மதித்திடான் நின் அடிச்சீர்
மகிழ்கல்வி கற்றிடான் சும்மாஇ ரான்காம
மடுவினிடை வீழ்ந்துசுழல்வான்
சினமான வெஞ்சுரத் துழலுவன் உலோபமாம்
சிறுகுகையி னூடுபுகுவான்
செறுமோக இருளிடைச் செல்குவான் மதம்எனும்
செய்குன்றில் ஏறிவிழுவான்
இனமான மாச்சரிய வெங்குழியின் உள்ளே
இறங்குவான் சிறிதும்அந்தோ
என்சொல்கே ளான்எனது கைப்படான் மற்றிதற்
கேழையேன் என்செய்குவேன்
தனநீடு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

23) வாய்கொண் டுரைத்தல்அரி தென்செய்கேன் என்செய்கேன்
வள்ளல்உன் சேவடிக்கண்
மன்னாது பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை
வாய்ந்துழலும் எனதுமனது
பேய்கொண்டு கள்உண்டு கோலினால் மொத்துண்டு
பித்துண்ட வன்குரங்கோ
பேசுறு குலாலனாற் சுழல்கின்ற திகிரியோ
பேதைவிளை யாடுபந்தோ
காய்கொண்டு பாய்கின்ற வெவ்விலங் கோபெருங்
காற்றினாற் சுழல்கறங்கோ
காலவடி வோஇந்த்ர ஜாலவடி வோஎனது
கர்மவடி வோஅறிகிலேன்
தாய்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே

தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.
24) கற்றமே லவரொடும் கூடிநில் லேன்கல்வி
கற்கும்நெறி தேர்ந்துகல்லேன்
கனிவுகொண் டுவதுதிரு அடியைஒரு கனவினும்
கருதிலேன் நல்லன்அல்லேன்
குற்றமே செய்வதென் குணமாகும் அப்பெருங்
குற்றம்எல் லாம்குணம்எனக்
கொள்ளுவது நின்அருட்குணமாகும் என்னில்என்
குறைதவிர்த் தருள்புரிகுவாய்
பெற்றமேல் வரும்ஒரு பெருந்தகையின் அருள்உருப்
பெற்றெழுந் தோங்குசுடரே
பிரணவா காராரின் மயவிமல சொரூபமே
பேதமில் பரப்பிரமமே
தற்றகைய சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

25) பாய்ப்பட்ட புலிஅன்ன நாய்ப்பட்ட கயவர்தம்
பாழ்பட்ட மனையில்நெடுநாள்
பண்பட்ட கழுநீரும் விண்பட்ட இன்னமுது
பட்டபா டாகும்அன்றிப்
போய்ப்பட்ட புல்லுமணி பூப்பட்ட பாடும்நற்
பூண்பட்ட பாடுதவிடும்
புன்பட்ட உமியும்உயர் பொன்பட்ட பாடவர்கள்
போகம்ஒரு போகமாமோ
ஆய்ப்பட்ட மறைமுடிச் சேய்ப்பட்ட நின்அடிக்
காட்பட்ட பெருவாழ்விலே
அருள்பட்ட நெறியும்மெய்ப் பொருள்பட்ட நிலையும்உற
அமர்போக மேபோகமாம்
தாய்ப்பட்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

26) சேவலம் கொடிகொண்ட நினைஅன்றி வேறுசிறு
தேவரைச் சிந்தைசெய்வோர்
செங்கனியை விட்டுவேப் பங்கனியை உண்ணும்ஒரு
சிறுகருங் காக்கைநிகர்வார்
நாவலங் காரம்அற வேறுபுகழ் பேசிநின்

நற்புகழ் வழுத்தாதபேர்
நாய்ப்பால் விரும்பிஆன் து'ய்ப்பாலை நயவாத
நவையுடைப் பேயர் ஆவார்
நீவலந் தரநினது குற்றேவல் புரியாது
நின்றுமற் றேவல்புரிவோர்
நெல்லுக் கிறைக்காது புல்லுக் கிறைக்கின்ற
நெடியவெறு வீணராவார்
தாவலம் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

27) பிரமன்இனி என்னைப் பிறப்பிக்க வல்லனோ
பெய்சிறையில் இன்னும்ஒருகால்
பின்பட்டு நிற்குமோ முன்பட்ட சூட்டில்
பெறுந்துயர் மறந்துவிடுமோ
இரவுநிறம் உடைஅயமன் இனிஎனைக் கனவினும்
இறப்பிக்க எண்ணம்உறுமோ
எண்ணுறான் உதைஉண்டு சிதைஉண்ட தன்உடல்
இருந்தவடு எண்ணுறானோ
கரவுபெறு வினைவந்து நலியுமோ அதனைஒரு
காசுக்கும் மதியேன்எலாம்
கற்றவர்கள் பற்றும்நின் திருஅருளை யானும்
கலந்திடப் பெற்றுநின்றேன்
தரமருவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

28) நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும்உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிஉண்டு நிலையும் உண்டு
ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும்உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்உறும்
உளம்உண்டு வளமும்உண்டு
தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும்உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்

தியானமுண் டாயில்அரசே
தார்உண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

29) உளம்எனது வசம்நின்ற தில்லைஎன் தொல்லைவினை
ஒல்லைவிட் டிடவுமில்லை
உன்பதத் தன்பில்லை என்றனக் குற்றதுணை
உனைஅன்றி வேறும்இல்லை
இளையன்அவ னுக்கருள வேண்டும்என் றுன்பால்
இசைக்கின்ற பேரும்இல்லை
ஏழையவ னுக்கருள்வ தேன்என்றுன் எதிர்நின்
றியம்புகின் றோரும்இல்லை
வளமருவும் உனதுதிரு அருள்குறைவ தில்லைமேல்
மற்றொரு வழக்கும்இல்லை
வந்திரப் போர்களுக் கிலைஎன்ப தில்லைநீ
வன்மனத் தவனும்அல்லை
தளர்விலாச் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

30) எத்திக்கும் என்உளம் தித்திக்கும் இன்பமே
என்உயிர்க் குயிராகும்ஓர்
ஏகமே ஆனந்த போகமே யோகமே
என்பெருஞ் செல்வமேநன்
முத்திக்கு முதலான முதல்வனே மெய்ஞ்ஞான
மூர்த்தியே முடிவிலாத
முருகனே நெடியமால் மருகனே சிவபிரான்
முத்தாடும் அருமைமகனே
பத்திக் குவந்தருள் பரிந்தருளும் நின்அடிப்
பற்றருளி என்னைஇந்தப்
படியிலே உழல்கின்ற குடியிலே ஒருவனாப்
பண்ணாமல் ஆண்டருளுவாய்
சத்திக்கும் நீர்ச்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

31) நான்கொண்ட விரதம்நின் அடிஅலால் பிறர்தம்மை
நாடாமை ஆகும்இந்த
நல்விரத மாம்கனியை இன்மைஎனும் ஒருதுட்ட
நாய்வந்து கவ்விஅந்தோ
தான்கொண்டு போவதினி என்செய்வேன் என்செய்வேன்
தளராமை என்னும்ஒருகைத்
தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
தன்முகம் பார்த்தருளுவாய்
வான்கொண்ட தெள்அமுத வாரியே மிகுகருனை
மழையே மழைக்கொண்டலே
வள்ளலே என்இருகண் மணியேஎன் இன்பமே
மயில்ஏறு மாணிக்கமே
தான்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

சரவணபவ மந்திரத்தை சக்கர முறையில் (மாற்றி மாற்றி) 6 முறை சொல்வதால் : கந்த சட்டி கவசத்தை 36 முறை ஓதுவதற்கு இணையான பலனைத் தரும் என்று பெரியோர்கள் கூறுவதன் பின்னணியில் ஒரு கணித மற்றும் ஆன்மீக ரகசியம் உள்ளது. இதன் விளக்கத்தை கீழே காண்போம்:

**1. சக்கர கணித விளக்கம் (6 x 6 = 36)**

சரவணபவ மந்திரம் என்பது ஆறெழுத்து மந்திரம். இதைச் சக்கர வரிசையில் (Permutation) மாற்றும்போது ஆறு விதமான அடுக்குகள் உருவாகின்றன:

| | |
|---|---|
| ஓம் சரவணபவ | [அனைத்தும் வசமாகும்] |
| ரவணபவச | [செல்வம் பெருகும்] |
| வணபவசர | [நோய் நீங்கும்] |
| ணபவசரவ | [எதிரிகளை வெல்ல] |
| பவசரவண | [அனைவரும் விரும்புவர்] |
| வசரவணப | [தீமைகள் செயலிழக்கும்] |

இந்த 6 வரிசைகளையும் நீங்கள் ஒரு சுற்றாகச் சொல்லும்போது, மந்திரத்தின் சக்தி 6 மடங்காகப் பெருகுகிறது. இந்த ஆறு வரிசைகளையும் தலா ஆறு முறை (6 வரிசை x 6 முறை) சொல்லும்போது அது 36 அலைவரிசைகளை உருவாக்குகிறது. கந்த சஷ்டி கவசத்தின் முழுமையான ஆற்றல் இந்த 36 சுழற்சிகளுக்குள் அடங்கிவிடுவதால், இது 36 முறை கவசம் படித்ததற்குச் சமமாகக் கருதப்படுகிறது.

## திருவாசகம் சிவபுராணம்

**தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி**
**அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே எல்லை**
**மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசகம் என்னும் தேன். (மாணிக்கவாசகர்)**

**நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!**
**இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!**
**கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க!**
**ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!**
**ஏகன், அநேகன், இறைவன், அடி வாழ்க!**

**வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க!**
**பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய் கழல்கள் வெல்க!**
**புறத்தார்க்குச் சேயோன் தன் பூம் கழல்கள் வெல்க!**
**கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க!**
**சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!**

**ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!**
**தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!**
**நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!**
**மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி!**
**சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி!**

**ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!**
**சிவன், அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்,**
**அவன் அருளாலே அவன் தாள் வணங்கி,**
**சிந்தை மகிழ, சிவபுராணம் தன்னை,**
**முந்தை வினை முழுதும் மோய உரைப்பன் யான்:**

**கண்ணுதலான், தன் கருணைக் கண் காட்ட, வந்து எய்தி,**
**எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி**
**விண் நிறைந்து, மண் நிறைந்து, மிக்காய், விளங்கு ஒளியாய்!**
**எண் இறந்து, எல்லை இலாதானே! நின் பெரும் சீர்,**
**பொல்லா வினையேன், புகழும் ஆறு ஒன்று அறியேன்**

**புல்லாகி, பூடாய், புழுவாய், மரமாகி,**
**பல் விருகமாகி, பறவையாய், பாம்பாகி,**
**கல்லாய் மனிதராய், பேயாய், கணங்களாய்,**
**வல்லசுரராகி, முனிவராய், தேவராய்,**
**செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்,**

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்!
மெய்யே, உன் பொன் அடிகள் கண்டு, இன்று வீடு உற்றேன்
உய்ய, என் உள்ளத்துள், ஓங்காரம் ஆய் நின்ற
மெய்யா! விமலா! விடைப் பாகா! வேதங்கள்
ஐயா என, ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற, நுண்ணியனே!

வெய்யாய்! தணியாய்! இயமானன் ஆம் விமலா!
பொய் ஆயின எல்லாம் போய் அகல, வந்தருளி,
மெய்ஞ்ஞானம் ஆகி, மிளிர்கின்ற மெய்ச் சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே!

ஆக்கம், அளவு, இறுதி, இல்லாய்! அனைத்து உலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே!
மாற்றம், மனம், கழிய நின்ற மறையோனே!

கறந்த பால், கன்னலொடு, நெய் கலந்தால் போலச்
சிறந்து, அடியார் சிந்தனையுள் தேன் ஊறிநின்று,
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய், எம்பெருமான்! வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை,
அறம், பாவம், என்னும் அரும் கயிற்றால் கட்டி,
புறம் தோல் போர்த்து, எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்க, புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா! உனக்குக்
கலந்த அன்பு ஆகி, கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி,
நிலம் தன் மேல் வந்தருளி, நீள் கழல்கள் காட்டி,
நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்கு,

தாயின் சிறந்த தயா ஆன தத்துவனே!
மாசு அற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே! தேன் ஆர் அமுதே! சிவபுரனே!
பாசம் ஆம் பற்று அறுத்து, பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து, நெஞ்சில் வஞ்சம் கெட,

பேராது நின்ற பெரும் கருணைப் பேர் ஆறே!
ஆரா அமுதே! அளவு இலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி, என் ஆர் உயிர் ஆய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையும் ஆய், அல்லையும் ஆம்
சோதியனே! துன் இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம், நடு, ஆகி, அல்லானே!
ஈர்த்து என்னை, ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தின்

நோக்கு அரிய நோக்கே! நுணுக்கு அரிய நுண் உணர்வே!
போக்கும், வரவும், புணர்வும், இலாப் புண்ணியனே!
காக்கும் எம் காவலனே! காண்பு அரிய பேர் ஒளியே!
ஆற்று இன்ப வெள்ளமே! அத்தா! மிக்காய்! நின்ற
தோற்றச் சுடர் ஒளி ஆய், சொல்லாத நுண் உணர்வு ஆய்,

மாற்றம் ஆம் வையகத்தின் வெவ்வேறே வந்து, அறிவு ஆம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்று ஆன உண் ஆர் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா, அரனே! ஓ! என்று என்று

போற்றி, புகழ்ந்திருந்து, பொய் கெட்டு, மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து, வினைப் பிறவி சாராமே,
கள்ளப் புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!

அல்லல் பிறவி அறுப்பானே! ஓ!" என்று,
சொல்லற்கு அரியானைச் சொல்லி, திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக் கீழ்,
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

# விநாயகர் பாடல்கள்

| | |
|---|---|
| கணநாதம் | கணநாதம் |
| ஈஸ்வர புத்ரம் | கணநாதம் |
| விக்ன விநாயக | கணநாதம் |
| சித்தி விநாயக | கணநாதம் |
| முக்தி பிரதாயக | கணநாதம் |
| மூசக வாகன | கணநாதம் |
| மோதக கஷ்தா | கணநாதம் |
| சாமர கர்ணா | கணநாதம் |
| வாமன ரூபா | கணநாதம் |
| மகேஸ்வர புத்ரா | கணநாதம் |
| விக்ன விநாயக | கணநாதம் |
| பாத நமஸ்தே | கணநாதம் |

சிவசிவ கயமுக கணநாதா
சிவகண வந்தித குணநாதா
வா வா வா வா அங்குசபாசா
வந்தருள் இன்பம் தந்திடும் நேசா
உமை தருபாலா குருமணியே
உந்தன் அடைக்கலம் அடியோமே
மகா கணபதே குருசரணம்
விக்ன விநாயக குருசரணம்
சரணம் சரணம் தந்திமுகா
சரவண பவனுக்குயர் துணைவா.

கணபதி கணபதி பாலயமாம்
கௌரி தனயா பாலயமாம்
கௌரி நந்தன கயவதனா
கணேச வரதா மாம்பாகி
கயானன ஓம் கசவதனா
கயமுக வரதா மாம்பாகி
பக்தயனப் பிரிய கயானனா
பார்வதி புத்ரா மாம்பாகி
பாகி பாகி கயானனா
பார்வதி நந்தன மாம்பாகி.

கயமுக கயமுக கணநாதா
பவ குண நிக்ரக யெயநாதா
யெய யெய யெய யெய குணநாதா
பார்வதி புத்ரா கணநாதா (கயமுக)

பிரம்ஸ் வரூபா யங்கர நாதா
மூசிக வாகன கசானனா
விக்ன விநாயக சித்தி கணேஸ்வர
ப்ரணஸ்வரூபா கயானனா (கயமுக)

மோகன நாதா மகேஸ்வர புத்ரா
தேவாதி தேவா கணநாதா
பவகுண விக்ரக ஸ்ரீகுணபாலா
விக்ன விநாயகா கயானனா (கயமுக)

உமா மகேஸ்வர குமரா கணபதி
நவாமி கயமுக தயாநிதே
கங்கா தர சுத லம் போதர கர
வியய விநாயக தயாநிதே (கயமுக)

யெயகணேச யெயகணேச யெயகணேச பிள்ளையார்
ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச பிள்ளையார்
ஓம்குருநம ஓம்குருநம ஓம்குருநம ஓம்குரு
யெயகுருநம யெயகுருநம யெயகுருநம யெயகுரு

ஓம்சிவாய ஓம்சிவாய ஓம்சிவாய ஓம்சிவம்
நமசிவாய நமசிவாய நமசிவாய ஓம்சிவம்
பராசக்தி பராசக்தி பராசக்தி சக்தியே
மகாசக்தி மகாசக்தி மகாசக்தி சக்தியே

வேல்முருகா வேல்முருகா வேல்முருகா சண்முகா
ஓம்முருகா ஓம்முருகா ஓம்முருகா சண்முகா
நாராயணா நாராயணா நாராயணா கரி கரி
கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கரே கரே

சாமி சரணம் ஐயப்பா சரணம் சாமி சரணம் ஐயப்பா
சரணமப்பா சரணமப்பா சரணமப்பா ஐயப்பா
வரணுமப்பா வரணுமப்பா வரணுமப்பா ஐயப்பா
சாமி சரணம் ஐயப்பா சரணம் சாமி சரணம் ஐயப்பா

கரே ராம கரே ராம ராம ராம கரே கரே
கரே கிருஷ்ண கரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கரே கரே
ஆஞ்சநேய ஆஞ்சநேய ஆஞ்சநேய ராமராம்
ஸ்ரீ ஆஞ்சநேய ராமராம கனுமந்தனே ராமராம்

வயிரவரே வயிரவரே வயிரவ தேவா
சக்தி சிவன் பாலகனே வயிரவ தேவா
சரணம் சரணம் சரணம் ஐயா வயிரவ தேவா
பாதமலர் சரணம் ஐயா வயிரவ தேவா

யெயகணேசா யெயகணேசா யெயகணேசா ஓடிவா
ஸ்ரீ கணேசா ஸ்ரீ கணேசா ஸ்ரீ கணேசா ஆடிவா
பிள்ளையார் பிள்ளையார் எங்கும் நிறைந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் வரங்கள் தரும் பிள்ளையார்
நம்பி வரும் பக்தர்களை காத்து நிற்கும் பிள்ளையார்
கேட்ட வரம் அத்தனையும் தருபவரே பிள்ளையார் (பிள்ளையார்)

கஷ்டம் துன்பம் நேரும்போது ஆறுதல் அளிப்பவர்
எங்கும் அவர் நிறைந்திருந்து அருள் வழங்கிக் காப்பவர்
சக்தி சிவனோடு என்றும் மைந்தனாக இருப்பவர்
பக்தர் குரல் கேட்டவுடன் ஓடி வந்து காப்பவர் (பிள்ளையார்)

இந்திரனின் வேண்டுதலை நிறைவுசெய்து காத்தவர்
அகத்தியரின் கலசமதைத் தட்டி மாரி பொழிந்தவர்
நம்பியாண்ட மைந்தனுக்கு கலைகள் நன்களித்தவர்
நம்பி வேண்டும் வரங்களை பக்தருக்களிப்பவர் (பிள்ளையார்)

ஒழுக்கம் நற்குணங்களை மலர்களாக ஏற்பவர்
அர்ச்சனைகள் செய்யும் போது கருணையோடு காப்பவர்
மோதகம் அவல் பொரியை விரும்பி நன்கு ஏற்பவர்
ஓம் கணபதி என்றவுடன் ஓடிவந்து காப்பவர் (பிள்ளையார்).

கணபதி ஓம் யெய கணபதி ஓம் யெய
கயமுக ஐங்கர கணபதி ஓம்
முத்திப்பரதாய கணபதி ஓம் யெய
விக்ன விநாயக கணபதி ஓம்

பவ பயநாசன கணபதி ஓம்
விக்ன விநாயக கணபதி ஓம்
பரம நிரஞ்சனகணபதி ஓம் யெய
விக்ன விநாயக கணபதி ஓம்

சங்கரன் மைந்தா கணபதி ஓம் யெய
லம்போதர சிவ கணபதி ஓம்
யெய கணநாதா கணபதி ஓம் யெய
சஞ்சலம் தீர்க்கும் கணபதி ஓம்

ஆனந்த தாண்டவ கணபதி ஓம் யெய
ப்ரணவரூபா கணபதி ஓம்
சரணம் சரணம் கணேசா சரணம்
பாத நமஸ்தே கணநாதா
பாத நமஸ்தே கணநாதா.

யெயகணேச யெயகணேச யெயகணேச பாகிமாம்
ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ரட்சமாம்

பிள்ளையார் பிள்ளையார் கன்னி மூலைப் பிள்ளையார் பிள்ளையார்
பிள்ளையார் புதுமை நிறைந்த பிள்ளையார்
எங்கும் நிறைந்து இருப்பவர் அகிலம் எங்கும் காப்பவர்
தேடி செல்ல நாம் நினைக்க ஓடி வந்து காப்பவர் (பிள்ளையார்)

எளிமை மிக்க கடவுளாக எங்கும் வீற்றிருப்பவர்
ஒரு தேங்காய் சூடத்துடன் கேட்கும் வரம் தருபவர்
நம்பி நிற்கும் பக்தருக்கு அருளும் முதல்வரானவர்
ஐயா நீ தான் தஞ்ச மென்றால் அஞ்சேலென்று அருள்பவர் (பிள்ளையார்)

பற்பல மதங்கள் போற்றும் புகழ்மைமிக்க பிள்ளையார்
சிவனும் உமையும் போற்றி நிற்கும் முதன்மையான பிள்ளையார்
பிள்ளையார் இல்லாத கோயில் எங்கும் எதுவும் இல்லையே
பிள்ளையார்க்கு மேலே தெய்வம் வேறு இல்லையே (பிள்ளையார்)
ஆனை முகனே ஓங்கார மூர்த்தி

விக்ன விநாயகா வா வா வா
கற்பக மூர்த்தி மத்தள வயிறா
பொற்பதம் பணிந்தோம் வா வா வா

ஆடிய பாதா நீடிய கருணை
அளித்திடும் கணேசா வா வா வா

மங்கள நாதா குஞ்சர முகனே
சங்கரன் மைந்தா வா வா வா (ஆனை முகனே)

பயனைகள் பாடி சூடிடும் தமிழை
கேட்டு மகிழ்ந்திடும் கணநாதா

அருள் தரும் மணியே எழில் திகழ் முத்தே
அருட் சுடர் மிளிரும் கணபதியே

சத்தியமாய் உமை நித்தமும் நாங்கள்
அடி பணிவோம் ஐயா கணபதியே

மண்ணுலகத்தில் நாம் உம் மலரடியை
தொழுதிடுவோம் ஐயா கணபதியே. (ஆனை முகனே)

சந்தனத்தில் குளித்திடுவான் சர்வசக்தி கணபதி
சந்தமும் காத்திடுவான் சர்வ சக்தி கணபதி
வந்தனையும் செய்பவர்க்கு வாழ்வளிக்கும் கணபதி
தந்திமுகன் மலரடியே நமக்கென்றும் நவநிதி
கன்னிமூலக் கனவிலும் சர்வசக்தி கணபதி
அன்னை தந்தை உலகமென்று வலம்வந்த கணபதி
கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் சரணம் கணேசா

கந்தனுக்கு வள்ளிமானை மணமுடித்த கணபதி
எந்தன் நாவில் தெள்ளுதமிழ்ப் பாட்டமைத்த கணபதி
குஞ்சரத்தை கூப்பிட்டால் குறையேதும் இல்லையே
தஞ்சம் என்று வந்துவிட்டால் உவகிலேது தொல்லையே
சஞ்சலங்கள் நீக்கிடுவான் அம்பிகையின் பிள்ளையே
ஐங்கரனின் நாமமே ஆனந்தத்தின் எல்லையே
கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் சரணம் கணேசா

சித்திபுத்தி தேவிமாரின் சிந்தைமகிழும் நாதனே
தினமும் அன்பு பரவி வாழ்த்தும் நாதனே

மருதநிழலின் கீழிருந்து அருளை வீசும் நேசனே
கரைந்துருகி தொழுபவர்க்கு அல்லல் நீக்கும் கையனே
எங்கிருந்தும் உன்னை நினைத்து மெய் உருகி பாடவே
இங்கு வந்து அள்ளி தந்து உதவும் எங்கள் பிள்ளையே
கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் சரணம் கணேசா.

ப்ரபோ கணபதே பரிபூரண வாழ்வருள்வாயே
ப்ரபோ கணபதே கணபதே கணபதே

சார்ந்து வணங்கி துதி பாடி ஆடி உந்தன்
சார்ந்து வணங்கி துதி பாடி ஆடி உந்தன்
சன்னதி சரணடைந்தோமே

சாந்த சித்த சௌபாக்கியம் யாவையும்
சாந்த சித்த சௌபாக்கியம் யாவையும்

தந்தருள் கணபதே நீயே
தந்தருள் கணபதே நீயே
கணபதே கணபதே

ஆதி மூல கணநாத கஜானன
ஆதி மூல கணநாத கஜானன
அற்புத தவள சொரூபா

தேவ தேவ ஜெய விஜய விநாயக
தேவ தேவ ஜெய விஜய விநாயக

சின்மய பர சிவ தீபாசின்மய பர சிவ தீபா
கணபதே கணபதே

தேடி தேடி எங்கோ ஓடுகின்ற
தேடி தேடி எங்கோ ஓடுகின்ற
தேடி கண்டு கொள்ளலாமே

கோடி கோடி மத யானைகள் பணிசெய்ய
கோடி கோடி மத யானைகள் பணிசெய்ய

குன்றென விளங்கும் பெம்மானே
குன்றென விளங்கும் பெம்மானே
கணபதே கணபதே.

சிவ கட்டளை..!
மந்திரம் தேடாதே - ஒரு தந்திரமும் நாடாதே
உன்னை தேடு - என்னை நாடுவாய்.
ஊர் ஊராக சுற்றாதே - உன் உடலை சுற்று ..
ஊர் உனக்கு மகுடம் சூற்றி - உத்தமன் என பட்டம் தந்தாலும்
உடல் உன்னை கை விட்டால் - பட்டமும் உன் படகும் பிடி சாம்பலே......
புறத்தில்
உன் குடும்பத்தை நேசித்தாய் - அது உன் குடும்பம் என கண்டும் கொண்டாய்..
ஓடி ஓடி உழைத்தாய் - உன் குடும்பத்திற்கு - காவல் தெய்வமாக நின்றாய்..
ஆனால் உனக்கு - காவல் தெய்வமாக - உன் உயிருக்கு காக்கும் கடவுளாக
இருப்பது உன் உடலே.. அக குடும்பத்தை மறந்து விடாதே.
உன் அக குடும்பம் உன் உடலே ..
உன் அக குடும்பம் சரியில்லை என்றால் சூரிய குடும்பத்தில் நீ இருக்க
இயலுவதில்லை..
உன் உள் குடும்பம் உடல் அதை மறந்தால் உன் வெளி குடும்பம் கதறினாலும் -
உன்னை காக்கவும் யாரால் முடியும்.....
மற்ற உயிர்களுக்கு ஒருவன் செய்யும் பாவத்திற்கு விமோசனம் உண்டு
ஒருவன் அவன் உடலுக்கே செய்யும் பாவத்திற்கு விமோசனம் இல்லை
காரணம் அந்த உடல் அவன் உயிருக்காக மட்டுமே சிறப்பாக
வரமாக கொடுக்கப்பட்டதால்.....
உடலுக்கு ஒருவன் செய்யும் தொண்டே சிவ பூசை....
உடலுக்கு உள் சென்று உனக்காக உழைக்கும் உறுப்புகளை வணங்குவதே ஆலயம்
சென்று வணங்குவதை விட உயர்வானது.....
உடல் அனுமதித்தால் தான் ஒருவன் சித்தனும் ஆக முடியும்.....
ஒருவன் எப்படி பட்டவன் ஆக வேண்டும் என்று தீர்பாணிப்பது அவனின்
எண்ணங்களே.....
ஆனால் அந்த எண்ணங்களை தீர்ப்பாணிப்பது சிவ சாட்சியாக உடலே.....
ஒருவன் எதுவாக ஆக விரும்புகிறானோ அதை தீர்மாணிப்பதும் உடலே.....
ஒருவன் உண்ணும் உணவும் பேணி காக்கும் உடலும் அழைத்துசெல்லும்
அதன், அதன் தன்மைக்கு ஏற்ப.....
ஒருவன் அவன் உள் குடும்பமான உடலை கவனித்தால்......
அந்த உள் குடும்பமே உன் வெளி குடும்பத்தை காக்கும்.....
பிறந்த ஒவ்வொருவருக்கும் அவரின் குல குலத்தின் சிவ குல சாமி அவரின் உடலே..
உலகின் அனைத்து ரகசியமும் உடலுக்கு உள்ளே..
அதை தேடு இதுவே சிவ கட்டளை.. ஓம் சிவ சிவ ஓம்

"மாட்டின் சாணத்தை வீட்டில் தெளி"

மாட்டுச் சாணத்தை வீட்டில் மெழுகுவதால், வெளியிலிருந்து வரும், தவறான உணர்வுகளின் நஞ்சான து அடக்கப்படுகின்றது. நாம் வெளியே எங்கே சென்றாலும், அங்கே விச அணுக்களின் தன்மை பரவிப் படர்ந்துள்ளது. அவைகள் நம் பாதங்களில்

பட்டவுடன், நமது உடலில் சேர்கின்றது அந்த உணர்வின் வலிமையை நுகர்ந்தால். நமக்குள் அது வலிமை பெறுகின்றது.

விசத்தின் உணர்வின் தன்மையை நமக்குள் எடுத்தாலும், வாசனையுள்ள சாணத்தின் மீது நமது பாதம் பட்டபின், நமக்குள் விசத்தை ஒடுக்கும் ஆற்றலைப் பெறுகின்றோம்.

ஏனென்றால், மாடு விசத்தின் தன்மையைத் தன் உடலாக்கியபின்,
விசத்தை நீக்கிய நல்ல உணர்வின் தன்மையாக, மாட்டின் சாணம்
வெளிப்படுகின்றது.

ஆகவே, விசத்தை ஒடுக்கும் வல்லமை மாட்டின்
சாணத்திற்கு உண்டு. ஆகையால், ஞானிகள் "மாட்டின் சாணத்தை வீட்டில் தெளி"
என்றார்கள்.மாட்டுச் சாணத்தை வீட்டில்
மெழுகினால், நம்மால் வெளியிடப்பட்டு. வீட்டில் பதிந்துள்ள
சங்கடம், சலிப்பு, வேதனை, போன்ற உணர்வுகளை அது கொல்கின்றது.
2. எந்த எண்ணத்துடன் கோலம் போடவேண்டும்? அதே மாதிரி வீடுகளில் கோலம் போடுவார்கள். இது சாஸ்திரங்கள் நமக்காக உருவாக்கிக் கொடுத்த வழிமுறை.

கோலம் எதற்காகப்போடுகிறார்கள்? பல புள்ளிகளை வைத்து
இணைத்துப்பார்க்கிறார்கள்.கோலப்பொடி தயாரிக்கப் பயன்படும் கற்கள் காந்தப்
புலன்கள் கொண்டது. காந்தப்
புலன்கள் கொண்ட, கோலப்பொடியைக். கொண்டு கோலமிடும் பொழுது, நாம்
எண்ணுகின்ற உணர்வுகள், கோலப்பொடியில் கலந்து விடுகின்றது.

வீட்டில் வெறுப்பாக இருப்பார்கள். சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். ஆக, இந்த
வெறுப்பின் உணர்வுடன், கோலப்பொடியைக் கையில் எடுத்தோம் என்றால்,
அதிலிருக்கும் காந்த சக்தி நமது வெறுப்பின் உணர்வை அது கவர்ந்து கொள்ளும்.
நாம் நமது வீட்டில் கோலப்பொடி வைத்திருக்கிறோம். மற்ற
எல்லாவற்றையும் வைத்திருக்கிறோம். ஆனால், மாமியார் மீது வெறுப்பு, மாமனார் மீது
வெறுப்பு, கணவர் மீது வெறுப்பு என்று மனதில் வெறுப்பு கொண்டு, புள்ளி வைத்தால்
எப்படியிருக்கும்?

இந்த உணர்வுடன் கோலமிடத் தொடங்கினால், என்னாகும்? அது ஒழுங்காக வராது.அழித்து அழித்துக் கோலம் போட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் சந்தோசமாக இருப்பவர்கள், ஒரு புள்ளியை வைத்தால்,
தொடர்ந்து அழகாகக் கோடு இழுத்துக்கொண்டே போவார்கள். ஆக, இதையெல்லாம் மாற்றியமைப்பதற்காக தன் குடும்பத்தின் மீது, பற்றும்
பாசமும் கொள்ளும் பொழுது, மகிழ்ச்சியான உணர்வின் தன்மையை உருவாக்கும் ஆற்றல் வருகின்றது.குடும்பத்தில் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

ஒன்று சேர்ந்து வாழவேண்டும்
என்று எண்ணி கோலப் பொடியை எடுத்து, புள்ளிகளை வைத்துக் கோலமிடும் பொழுது, நம்முடைய நிலைகளும் ஒன்றுபடும் தன்மை வருகின்றது.ஆக, நமக்குள் வேற்றுமை இல்லாத நிலைகள் கொண்டு, அனைவரையும் அரவணைக்கும் தன்மை வர வேண்டுமென்ற எண்ணத்தால், நமது குடும்பத்தின் மீது பற்றும் பாசமும் வரவேண்டும்,

இணைந்து வாழும் சக்தி பெறவேண்டும்என்ற உணர்வுகளை எண்ணித்தான், இங்கு கோலமிட வேண்டும். ஆக, நம் முன்னோரான சித்தபெருமக்கள் வகுத்த அறிவியல் தத்துவங்கள்
பொய்யல்ல. நாம் தெளிவாக இதையெல்லாம் தெரிந்து அந்த
ஞானிகள் காட்டிய அருள் வழியில் மகிழ்ந்து வாழ்வோம் ........

## 1. சிவன் பாடல்கள்

சம்போ மகாதேவா சதாசிவா சம்போ மகாதேவா

சிவஓம் சிவஓம் சதாசிவா
கரிஓம் கரிஓம் நாராயணா

கரிஓம் கரிஓம் நாராயணா
கரி கரி கரி கரி நாராயணா

பன்னக பூசண சதாசிவா
கரி கரி கரி கரி நாராயணா (கரிஓம்)
கயிலாய வாசா சதாசிவா
வைகுண்ட வாசா நாராயணா

பார்வதி றமணா சதாசிவா
பாவ விமோசன நாராயணா
கௌரி சமோதா சதாசிவா
லட்சுமி சமோதா நாராயணா (கரிஓம்)

பத்ம பூசித சதாசிவா
கரிதர சேபித நாராயணா
ஆனந்த ரட்சக சதாசிவா
ஆபத் பாந்தவ நாராயணா (கரிஓம்)

சின்மய தாண்டவ சதாசிவா
அச்சுத கேசவா நாராயணா

சச்சி தானந்தா சதாசிவா
சின்மய ரூபா நாராயணா (கரிஓம்)

கர கர கர கர சதாசிவா
கரி கரி கரி கரி நாராயணா
ஓம் ஓம் ஓம் ஓம் சதாசிவா
டம் டம் டம் டம் நாராயணா (கரிஓம்)

சம்போ சங்கர சதாசிவா
சச்சி தானந்தா நாராயணா
கையிலா பதியே சதாசிவா
வைகுண்ட பதியே நாராயணா (கரிஓம்)

## 2. சிவமயமே எங்கும் சிவமயமே

சிவ சிவ சிவ சிவ சிவமயமே
சிதம்பர நாதா சிவமயமே
தில்லைத் தாண்டவா சிவமயமே (சிவமயமே)

உண்மைப் பொருளாம் சிவமயமே
உலகைக் காப்பது சிவமயமே
எங்கும் நிறைந்தது சிவமயமே
எல்லாம் அன்பின் சிவமயமே (சிவமயமே)

எங்கும் எதிலும் சிவமயமே
எல்லாம் அறிவது சிவமயமே
ஏகப்பரம் பொருள் சிவமயமே - என்றும்
அழியாப் பொருளது சிவமயமே (சிவமயமே)

## 3. பரமஞான மூர்த்தியே நீ வா வா வா

ஞான பரிபூரணனே வா வா வா
வேதத்தின் நாயகனே வா வா வா
இசை ஞானப் பிரியனே நீ வா வா வா (பரமஞான)

கைலயங்கிரி வாசனே நீ வா வா வா
மா தொரு பாகனே நீ வா வா வா
பாம்பணிந்த பரமனே நீ வா வா வா
பக்தர் துயர் தீர்த்திடவே வா வா வா (பரமஞான)

திருநீல கண்டனே நீ வா வா வா
அடியவர்க்கு எளியவனே நீ வா வா வா
ஏழைப் பங்காளனே நீ வா வா வா
மண்சுமந்த நாயகனே வா வா வா (பரமஞான)

அம்மை அப்பனாகவே நீ வா வா வா
சங்கரனே சதாசிவா வா வா வா
ஆடி ஆடி நாடி நாடி வா வா வா
மங்களம் பொலிந்து நிற்க வா வா வா (பரமஞான)

### 4. அரகரோகரா சாமி அரகரோகரா

அரகரோகரா சாமி அரகரோகரா
கயிலை மலைச் சங்கரனே அரகரோகரா
சக்தி உமை நாயகனே அரகரோகரா
சதாசிவ யோதியனே அரகரோகரா
ஆடும் தில்லைச் சிதம்பரனே அரகரோகரா
அருணாசலப் பெருமானே அரகரோகரா
சக்தி உமை பாகருக்கு அரகரோகரா
பாம்பணிந்த பரமனுக்கு அரகரோகரா
சிவ சிவ சிவ சிவமயமே அரகரோகரா

5. சிவாய நம ஓம் சிவாய நம ஓம் (2)
சிவாய நம ஓம் சிவாய நம ஓம் (2)

அரகர சிவசிவ சிவாய நம ஓம் (2)
சிவசிவ சிவசிவ சிவாய நம ஓம் (2)

சிவசிவ அரகர சிவாய நம ஓம் (2)
அரகர அரகர சிவாய நம ஓம் (2)
சிவாய நம ஓம் சிவாய நம ஓம் (2)
ஓம் நமசிவாய சிவாய நம ஓம் (2)

சம்போ சங்கர சிவாய நம ஓம் (2)
அரகர சம்போ சிவாய நம ஓம் (2)

சாம்ப சதாசிவ சிவாய நம ஓம் (2)
பார்வதி ரமணா சிவாய நம ஓம் (2)

சிதம்பர நாதா சிவாய நம ஓம் (2)
தாண்டவப் பிரியா சிவாய நம ஓம் (2)

நடன மனோகர சிவாய நம ஓம் (2)
உமையவள் பாகா சிவாய நம ஓம் (2)

திரு அருள்பெருகிடச் சிவாய நம ஓம் (2)
சரணம் சரணம் சிவாய நம ஓம் (2)

6. ஓம் சிவாய நமசிவாய ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் நமசிவாய சங்கரா
பனிமலையிலிருப்பவனே ஓம் நமசிவாய சங்கரா

பார்வதி மணாளனே ஓம் நமசிவாய சங்கரா
கங்கையை தலையில் கொண்டவனே ஓம் சிவாய சங்கரா
கங்காதர ஈஸ்வரனே ஓம் நமசிவாய சங்கரா

உடுக்கை கையில் கொண்டவனே ஓம் சிவாய சங்கரா
உமையொரு பாகனே ஓம் நமசிவாய சங்கரா
ஆடும் பாம்பை யணிந்தவனே ஓம் சிவாய சங்கரா

ஆலகால கண்டனே ஓம் நமசிவாய சங்கரா
அர்த்தநாரி யீஸ்வரனே ஓம் சிவாய சங்கரா
(திரு) அண்ணாமலை தெய்வமே ஓம் நமசிவாய சங்கரா
மண்டையோடு அணிந்தவனே ஓம் சிவாய சங்கரா
மகா தேவா மகா தேவா ஓம் நமசிவாய சங்கரா
காளைகட்டி நாதனே ஓம் சிவாய சங்கரா
கடுதுருத்தி யப்பனே ஓம் நமசிவாய சங்கரா
வேல் முருகன் தந்தையாரே ஓம் சிவாய சங்கரா
வேண்டும் வரம் தருபவனே ஓம் நமசிவாய சங்கரா

7. தில்லை அம்பல நடராயா -உன்
திருவருள் வேண்டும் சிவராயா (தில்லை)
திருநீல கண்ட யெகதீசா
தினமும் தொழுவேன் மகாதேவா (தில்லை)

கயிலையில் வாழும் கைலாச என்
கருத்தினில் வந்திடு சுகவாசா (தில்லை)
தோடணி செவியுடை பெருமானே
பீடுடை பிரம்ம புரியோனே (தில்லை)

8. கங்கை கொண்டாய் நடராயா திங்கள் கொண்டாய் நடராயா
மங்கை கொண்டாய் மகேஸ்வரா என் மனதில் இருப்பாய் மலைவாசா
பிச்சாண்டி கோவ நடராயா என் பித்தம் தீர்ப்பாய் சுகவாசா
சாம்பல் உடலோய் சதாசிவா சரணம் சரணம் மகாதேவா
நீ ஆடும் ஆட்டத்தில் நடராயா அகிலம் மயங்குது சிவராயா
சூலம் ஆடுது யெகதீசா மருகம் முழங்குது சிவராயா
சரணம் சரணம் சாம்பசிவா சரணம் சரணம் சதாசிவா
சரணம் சரணம் மலைவாசா சரணம் சரணம் மகா ஈசா.

9. ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த ஜோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்து போய்
வாடிவாடி வாடிவாடி வாழ்ந்து போன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

என்னிலே இருந்த உன்றை யான் அறிந்ததிலையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ
என்னிலே இருந்து இருந்து யானும் கண்டுகொண்டேனே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4
நானதேது நீயதேது நடுவில் நின்றதேதடா
கோனதேது குருவதேது கூறிடும் குலாமரே
ஆவதேது அழிவதேது அப்புறத்தில் அற்புதம்
ஈனதேது ராம ராம ராமா என்ற நாமமே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலே வளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகாள்
அஞ்செழுத்தில் ஓர் எழுத்து அறிந்து கூற வல்லிரேல்
அஞ்சல் அஞ்சல் என்று நாதன் அம்பலத்தில் ஆடுமே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

இடது கண்கள் சந்திரன் வலது கண்கள் சூரியன்
இடக்கை சங்கு சக்கரம் வலக்கை சூழ மான்மழு
எடுத்தபாத நீள்முடி எண்திசைக்கும் அப்பறம்
உடல் கலந்து நின்ற மாயம் யாவர் காண வல்லரோ

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

உருவுமல்ல வெளியுமல்ல ஒன்றை மேவி நின்றதல்ல
மருவுமல்ல காதமல்ல மற்றதல்ல அற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல போகுமாவி தானுமல்ல
அரியதாகி நின்றநேர்மை யாவர் காண வல்லரோ

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

மண்கலம் கவிழ்ந்தபோது வைத்து வைத்து அடுக்குவார்
வெண்கலம் கவிழ்ந்தபோது வேண்டுமென்று பேணுவார்
நம்கலம் கவிழ்ந்தபோது நாறுமென்று போடுவார்
என்கலந்து நின்றமாயம் என்ன மாயம் ஈசரே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

ஆனவஞ்செழுத்துளே அண்டமும் அகண்டமும்
ஆனவஞ்செழுத்துளே ஆதியான மூவரும்
ஆனவஞ்செழுத்துளே அகாரமும் மகாரமும்
ஆனவஞ்செழுத்துளே அடங்கலாவலுற்றதே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறில்லை
நினைப்புமாய் மறுப்புமாய் நின்ற மாய்கை மாய்கையை
அனைத்துமாய் அகண்டமாய் அனாதிமுன் அனாதியாய்
எனக்குள் நீ உனக்குள் நான் இருக்குமாறு எங்ஙனே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்கள் எத்தனை
பாழிலே ஜெபித்துவிட்ட மந்திரங்கள் எத்தனை
மிண்டராய்த் திரிந்த போது இரைத்த நீர்கள் எத்தனை
மீளவும் சிவாலயங்கள் சூழ வந்தது எத்தனை

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

அம்பலத்தை அம்புகொண்டு அசங்கென்றால் அசங்குமோ
கம்பமற்ற பாற்கடல் கலங்கென்றால் கலங்குமோ
இன்பமற்ற யோகியை இருளும் வந்து அணுகுமோ
செம்பொன் அம்பலத்துளே தெளிந்ததே சிவாயமே
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

மூன்று மண்டலத்திலும் முட்டி நின்ற தூணிலும்
நான்ற பாம்பின் வாயினும் நவின்றெழுந்த அக்ஷரம்
ஈன்ற தாயும் அப்பரும் எடுத்துரைத்த மந்திரம்
தோன்றுமோர் எழுத்துளே சொல்ல வெங்குதில்லையே
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

நமச்சிவாய அஞ்செழுத்தும் நிற்குமே நிலைகளே
நமச்சிவாய மஞ்சுதஞ்சும் புரணமான மாய்கையை
நமச்சிவாய அஞ்செழுத்தும் நம்முளே இருக்கவே
நமச்சிவாய உண்மையை நன்குரைசெய் நாதனே
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

இல்லை இல்லை என்று இயம்புகின்ற ஏழைகாள்
இல்லை என்று நின்ற ஒன்றை இல்லை என்னலாகுமோ
இல்லையில்ல என்றுமல்ல இரண்டும் ஒன்றி நின்றதை
எல்லை கண்டு கொண்டார் இனி பிறப்பதிங்கு இல்லையே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4
காரகார காரகார காவல் ஊழி காவலன்
போரபோர போரபோர போரில் நின்ற புண்ணியன்
மாரமார மாரமார மரங்களும் எழும் எய்தசீ
ராமராம ராமராம ராமா நாமம் என்னும் நாமமே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

விண்ணிலுள்ள தேவர்கள் அறியோனா மெய்ப்பொருள்
கண்ணில் ஆணியாகவே கலந்து நின்ற எம்பிரான்
மண்ணெலாம் பிறப்பறுத்த மலரடிகள் வைத்தபின்

அண்ணலாரும் எம்முளே அமர்ந்து வாழ்வது உண்மையே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

அகாரமான தம்பலம் அனாதியான தம்பலம்
உகாரமான தம்பலம் உண்மையான தம்பலம்
மகாரமான தம்பலம் வடிவமான தம்பலம்
சிகாரமான தம்பலம் தெளிந்ததே சிவாயமே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

உண்மையான மந்திரம் ஒளியிலே இருந்திடும்
தன்மையான மந்திரம் சமைந்த ரூபமாகிய
வெண்மையான மந்திரம் வினைந்து நீரதானதே
உண்மையான மந்திரம் தோன்றுமே சிவாயமே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4

ஓம் நமச்சிவாயமே உணர்ந்து மெய் உணர்ந்தபின்
ஓம் நமச்சிவாயமே உணர்ந்து மெய் தெளிந்தபின்
ஓம் நமச்சிவாயமே உணர்ந்து மெய் உணர்ந்தபின்
ஓம் நமச்சிவாயமே உட்கலந்து நிற்குமே

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய 4.

## நடராசர் பத்து பாடல்கள்

1. மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ,
மறைநான்கின் அடிமுடியும் நீ,
மதியும் நீ, ரவியும் நீ, புனலும் நீ, அனலும் நீ,
மண்டலமிரண்டேழு நீ,
பெண்ணும் நீ, ஆணும் நீ, பல்லுயிர்க்குயிரும் நீ,
பிறவும் நீ, யொருவ நீயே,
பேதாதி பேதம் நீ, பாதாதி கேசம் நீ,
பெற்ற தாய் தந்தை நீயே,
பொன்னும் நீ, பொருளும் நீ, இருளும் நீ, ஒளியும் நீ,

போதிக்க வந்த குரு நீ,
புகழொணா கிரகங்கள் ஒன்பதும் நீ,
இந்த புவனங்கள் பெற்றவனும் நீ,
எண்ணரிய ஜீவகோடிகளை ஈன்ற அப்பனே
என் குறைகள் யார்க்குரைப்பேன்..?
ஈசனே சிவகாமி நேசனே!
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே..!

2. மானாட, மழுவாட, மதியாட, புனலாட,
மங்கை சிவகாமி யாட,
மாலாட நூலாட மறையாட திறையாட,
மறைதந்த பிரம்மனாட,
கோனாட வானுலகு கூட்டமெல்லாமாட,
குஞ்சர முகத்தனாட,
குண்டல மிரண்டாட, தண்டை புலி யுடையாட,
குழந்தை முருகேசனாட,
ஞான சம்பந்தரோடு இந்திரர் பதினெட்டு முனி
அட்ட பாலகருமாட,
நரை தும்பை அறுகாட நந்தி வாகனமாட
நாட்டியப் பெண்களாட,
வினையோட உனை பாட, எனை நாடி இதுவேளை
விருதோடு ஆடி வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே!
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே..!

3. கடலென்ற புவிமீதில் அலையென்ற உருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி,
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கட்டுண்டு நித்த நித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரைதேடி
ஓயாமலிரவு பகலும்
உண்டுண்டு உறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒருபயனடைந்திலேனே!
தடமென்ற இடி கரையில் பந்தபாசங்களெனும்
தாபமாம் பின்னலிட்டு..
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை இது வண்ணமாய்
இடையென்று கடைநின்று ஏனென்று கேளாது
இருப்பதுன் அழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே!
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே..!

4. வம்பு சூனியமல்ல வைப்பல்ல மாரணம்
தம்பனம் வசியமல்ல
பாதாள அஞ்சனம் பரகாய பிரவேசம் அதுவல்ல ஜாலமல்ல
அம்பு குண்டுகள் விலக மொழியு மந்திரமல்ல
ஆகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல
அரிய மோகனமுமல்ல
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரமரிஷி
கொங்கணர் புலிப்பாணியும்..
கோரக்கர் வள்ளுவர் போகமுனி இவரெலாம்
கூறிடும் வைத்தியமல்ல..
என்மனது உன்னடிவிட்டு விலகாது நிலைநிற்கவே உளது கூற வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே!
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே..!

5. நொந்துவந்தேனென்று ஆயிரம் சொல்லியும்
செவி யென்ன மந்தமுண்டோ
நுட்பநெறி அறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ
சந்ததமுன் தஞ்சம் என்றடியைப் பிடித்தபின்
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுகன் அஇருபிள்ளை இல்லையோ
தந்தை நீ மலடுதானோ,
விந்தையும் ஜாலமும் உன்னிடமிருக்குதே
வினையொன்றும் அறிகிலேனே,
வேதமும் சாஸ்திரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை இதுவல்லவோ
இந்த உலகீரேழும் ஏனளித்தாய் சொல்லு
இனி உன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே!
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே..!

6. வழிகண்டு உன்னடியை துதியாத போதிலும்
வாஞ்சையில்லாத போதிலும்
வாலாயமாய் கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்த போதிலும்
மொழி எதுகை மோனையும் இல்லாமல் பாடினும்
மூர்க்கனேன் முகடாகினும் மோசமே செய்யினும்

தேசமே கவரினும் முழுகாமியே ஆகினும்
பழியெனக்கல்லவே தாய்தந்தைக்கல்லவோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைவிக்கு பாதியுடல் ஈந்த நீ
பாலகனை காக்கொணாதோ
எழில் பெரிய அண்டங்கள் அடுக்காய் அமைத்த நீ
என் குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே!
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே..!

7. அன்னை தந்தைகள் எனை ஈன்றதற்கு அழுவனோ,
அறிவிலாததற்கு அழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசை மூன்றுக் கழுவனோ
முன்பிறப்பென்ன வினை செய்தேன் என்றழுவனோ
என் மூட அறிவுக்கு அழுவனோ
முன்னில் என் வினை வந்து மூளும் என்றழுவனோ
முத்தி வருமென்று உணர்வனோ
தன்னைநொந்தழுவனோ உன்னை நொந்தழுவனோ
தவமென்ன என்றழுவனோ
தையலார்க்கு அழுவனோ மெய்வளர்க்க அழுவனோ
தரித்திர திசைக்கழுவனோ
இன்னுமென்ன பிறவி வருமோ என்றழுவனோ
எல்லாம் உரைக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே! எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே..!

8. காயாமுன் மரமீது பூ பிஞ்சறுத்தனோ
கன்னியர்கள் பழிகொண்டனோ
கடனென்று பொருள் பறித்தே வயிறெரித்தனோ
கிளை வழியில் முள்ளிட்டனோ
தாயாருடன் பிறவிக்கென்ன வினை செய்தனோ
தந்த பொருளிலை யென்றனோ
தானென்று கெர்வித்து கொலை களவு செய்தனோ
தவசிகளை ஏசினேனோ
வாயாரப் பொய் சொல்லி வீண்பொருள் பறித்தனோ
வானவரைப் பழித்திட்டனோ
வடவுபோலே பிறரைச் சேர்க்காது அடித்தனோ
வந்தபின் என் செய்தனோ
ஈயாத லோபியென்றே பெயரெடுத்தனோ
எல்லாமும் பொறுத்தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே! எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே..!

9. தாயார் இருந்தென்ன தந்தையும் இருந்தென்ன
தன் பிறவி உறவு கோடி
தனமலை குவித்தென்ன கனபெயர் எடுத்தென்ன
தாரணியை ஆண்டுமென்ன
சேயர்கள் இருந்தென்ன குருவாய் இருந்தென்ன
சீடர்கள் இருந்தும் என்ன,
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன, நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்ன பலன் எமனோலை
ஒன்றைக் கண்டு தடுக்க
உதவுமோ இதுவெல்லாம் சந்தை உறவென்று தான்
உன்னிருபாதம் பிடித்தேன்
யார்மீது உன் மனமிருந்தாலும் உன் கடைக்
கண் பார்வை அது போதுமே..!
ஈசனே சிவகாமி நேசனே
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே..!

10. இன்னமும் சொல்லவோ உன்மனம் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இருசெவியும் மந்தமோ கேளாத அந்தமோ
இது உனக்கழகு தானோ
என் அன்னை மோகமோ இது என்ன சாபமோ,
இதுவோ உன் செய்கைதானோ
இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
ஆனாலும் நான் விடுவனோ
உன்னை விட்டெங்கு சென்றாலும் விழலாவனோ
நான் உனையடுத்துங் கெடுவனோ,
ஓஹோ இது உன்குற்றம் என்குற்றம் ஒன்றுமில்லை
உற்றுப்பார் ஐயா
என் குற்றமாயினும் உன் குற்றமாயினும்
இனியருள் அளிக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே!
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே..!
“சனி, ரகு, கேது, புதன், சுக்ரன், செவ்வாய்,
குரு, சந்திரன் சூர்யன் இவரை,
சற்றெனகுள்ளாக்கி, ராசி பனிரெண்டையும்
சமமாய் நிறுத்தி யுடனே,
பணியொத்த நட்சத்திரங்களிருபத்தேழும்
பக்குவபடுத்திப் பின்னால்,
பகர்கின்ற கிரணங்கள் பதினொன்றையும்
வெட்டிப் பலரையும் அதட்டி என் முன்

கனிபோலவே பேசி கேடுநினைவு
நினைக்கின்ற கசடர்களையுங் கசக்கி,
கர்த்தநின் தொண்டராம் தொண்டர்க்குத் தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பனாக்கி
சிறுமணவை முனுசாமி பாடியவை இசைக்கும் எமை
அருள்வது இனியுன் கடன் காண்
ஈசனே சிவகாமி நேசனே!
எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே..!”

## மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியையாம்
பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகான் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிலோர் எம்பாவாய் பாடல் 1

பாசம் பரஞ்சோதிக்கென்பாய் இராப்பகல் நாம்
பேசும் போதெப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பர் யாம் ஆரேலோர் எம்பாவாய். பாடல் 2

முத்தன்ன வெண்நகையாய் முன்வந்து எதிர் எழுந்தன்
அத்தன் ஆனந்தன் அமுதனென்ற உள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த்தாட் கொண்டாற் பொல்லாதே
எத்தோ நின் அன்புடமை எல்லோம் அறியோமே
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் நமக்கேலோர் எம்பாவாய் பாடல் 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ

எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளை
கண்ணுக்கினியானை பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயே வந்
தெண்ணிக் குறையில் துயலேலோர் எம்பாவாய். பாடல் 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவறியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய் பாடல் 5

மானே நீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப் பாடேலோர் எம்பாவாய். பாடல் 6

அன்னே யிவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். பாடல் 7

கோழிச் சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ?

வாழி! ஈதென்ன உறக்கமோ வாய் திறவாய்?
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடு ஏலோர் எம்பாவாய். பாடல் 8

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர் அடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் அங்கு அவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவர் ஆவார்
அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய் பணி செய்வோம்
இன்னவகையே எமக்கு எம் கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய். பாடல் 9

பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்டர் உளன்
கோதில் குலத்தான் தன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். பாடல் 10

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண்
ஆரழல் போல் செய்யா! வெண்ணீறு ஆடி! செல்வா!
சிறு மருங்குல் மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். பாடல் 11

ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார் கலைகள்
ஆர்ப்ப அரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
எத்தி இருஞ்சுனை நீராடேலோர் எம்பாவாய் பாடல் 12

பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்

தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த

பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து
நம் சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலர்ந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடு ஏலோர் எம்பாவாய். பாடல் 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாம் ஆட
சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளர்ந்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். பாடல் 14

ஓரொரு கால் எம்பெருமான் என்றென்றே
நம்பெருமான் சீரொருகால் வாய் ஓவாள்
சித்தம் களிகூர நீரொருகால் ஓவா
நெடுந்தாரை கண்பனிப்ப பாரொருகால் வந்து
அணையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வார் உருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏர் உருவப்பூம்புனல் பாய்ந்தாடலோர் எம்பாவாய். பாடல் 15

முன்னிக்கடலை சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னம் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னியவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் பாடல் 16

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம்பாலதாக்
கொங்கு உண் கருங்குழலி நந்தம்மை கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை

அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலம் திகழ்ந்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய். பாடல் 17

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர் வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகல
பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடி
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்தாடலோர் எம்பாவாய். பாடல் 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கு அப்பழஞ் சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எம் கொங்கை நின் அன்பரல்லாதோர் தோள் சேரற்க
எம் கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்
எங்கெழிலன் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய். பாடல் 19

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரீகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய். பாடல் 20

விழி கிடைக்குமா அபய கரம் கிடைக்குமா
விழி கிடைக்குமா அபய கரம் கிடைக்குமா
குரு நாதன் சரணத்தில் நிழல் கிடைக்குமா
சற் குரு நாதன் சரணத்தில் நிழல் கிடைக்குமா

அலை மீது அலையாக துயர் வந்து சேரும் போது
அஞ்சாதே எனும் குரலை செவி கேட்குமா
நீ அஞ்சாதே எனும் குரலை செவி கேட்குமா (விழி)
நங்கூரம் போல் குருநாதன் கடை விழி இருக்க
சம்சார புயல் கண்டு மனம் அஞ்சுமா

இந்த சம்சார புயல் கண்டு மனம் அஞ்சுமா
நினைக்காத துன்பம் பல எனை வந்து சேறும் போது
உனை நினைத்தாலே உனை நினைத்தாலே ......

நினைக்காத துன்பம் பல எனை வந்து சேறும் போது
உனை நினைத்தாலே அமயம் தரும் கரம் கிடைக்குமா (விழி)

நிஜமான அன்பு வைத்து எனதெல்லாம் அடியில் வைத்து
உன் விழியோர படகில் எனக்கிடம் கிடைக்குமா (விழி)

கோடி ஜன்மம் நான் எடுப்பேன் குரு உந்தன் அன்பு இருந்தால்
உ ணக்கேன்றே உனக்காக எனை ஆக்குவேன்

நினைக்காத துன்பம் பல எனை வந்து சேரும் போது
நினைத்தாலே அபயம் தரும் கரம் கிடைக்குமா (விழி)

விழி கிடைத்ததே அபய கரம் கிடைத்ததே
மணிவாசக சரணத்தில் நிழல் கிடைத்ததே
திருவாசகம் எனும் ஞான வழி கிடைத்ததே.

### <u>வந்த வினையும் வருகின்ற வல்வினையும்</u>

வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தன் என்ற சொல்லக் கலங்கிடுமே
செந்தில் நகர் சேவகா என்று திருநீறு அணிவார்க்கு
மேவ வராதே வினை”.

## <u>திருநீற்றுப் பதிகம்</u>!

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. பாடல் 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. பாடல் 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. பாடல் - 3

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே. பாடல் - 4

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே. பாடல் - 5

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. பாடல் - 6

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் திருவால வாயான் திருநீறே. பாடல் - 7

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே. பாடல் - 8

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே. பாடல் - 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் றிருநீறே. பாடல் - 10

ஆற்ற லடல்விடை யேறு மால வாயான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. பாடல் - 11

## திருக்குறளின் சிறப்பும் பட்டினத்தார் பாடல்களும்!!

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி? பாடல் - 1

முந்தித் தவம் கிடந்து முன்னூறு நாள்சுமந்தே
அந்திபகலாய்ச் சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்? பாடல் - 2

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டிய தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்? பாடல் - 3

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றிய தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்? பாடல் - 4

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் உருசியுள்ள
தேனே திரவியமே செல்வத் திரவியப்பூ
மானே எனஅழைத்த வாய்க்கு? பாடல் - 5

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு? பாடல் - 6

முன்னை இட்ட தீ முப்புறத்திலே
பின்னை இட்ட தீ தென்இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்கமூள்கவே. பாடல் - 7

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை. பாடல் - 8

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்? பாடல் - 9

வீட்டிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் பால்தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம். பாடல் - 10

## திருப்பொற் சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிநிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப் பார்அய னும்மரியும்
  அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்கெளெல்லாம்
  நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
  திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
  ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
  உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
  காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
  நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
  மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
  தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
  நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்

பாடக மெல்லடி யார்க்குமங்கை
  பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
  ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
  வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
  சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
  நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
  ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
  மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
  மேதகு தென்னன் பெருந்துறையான்

செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
  தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
  சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
  கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
  பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
  நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
  சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
  கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
  பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
  ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
  செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்

சேவகம் ஏந்திய வெல்கொடியான்
  சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
  செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
  சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
  மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
  உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
  அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
  காலனைக் காலால் உதைத்தல்பாடி

இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

## அம்மனின் அருட்பாடல்கள்

### காயித்திரி மந்திரம்

"ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!
தத்துவ வித்துக்கள் அரணாகுக!
பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்!
தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!"

## சரசுவதி அந்தாதி

### கடவுள் வாழ்த்து

**ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்**
**ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய**
**உருப் பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே**
**இருப்பாள் இங்கு வாரா திடர்.**
**படிக நிறமும் பவளச் செவ்வாயும்**
**கடிகமழ்பூந் தாமரை போற் கையுந் - துடியிடையும்**
**அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்**
**கல்லுஞ்சொல் லாதோ கவி.**

### நூல்

**சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கமலா சனத்தேவி செஞ்சொற்**
**றார்தந்த வென்மனத் தாமரையாட்டி சரோருக மேற்**
**பார்தந்த நாத னிசைதந்த வாரணப் பங்கயத்தாள்**
**வார்தந்த சோதி யம்போருகத் தாளை வணங்குதுமே. 1**

**வணங்குஞ் சிலைநுதலுங் கழைத்தோளும் வனமுலை மேற்**
**சுணங்கும் புதிய நிலவெழு மேனியுந் தோட்டுடனே**
**பிணங்குங் கருந்தடங் கண்களு நோக்கிப் பிரமனன்பால்**
**உணங்குந் திருமுன் றிலாய் மறைநான்கும் உரைப்பவளே. 2**

**உரைப்பா ருரைக்குங் கலைகளெல்லாம் எண்ணில் உன்னையன்றித்**
**தரைப்பா லொருவர் தரவல்ல ரோதண் டரளமுலை**
**வரைப்பா லமுதுதந் திங்கெனை வாழ்வித்த மாமயிலே**
**விரைப்பா சடைமலர் வெண்டா மரைப்பதி மெல்லியலே. 3**

**இயலானதுகொண்டு நின்றிரு நாமங்க ளேத்துதற்கு**
**முயலா மையாற்றடு மாறுகின்றே னிந்த மூவுலகும்**
**செயலால் அமைத்த கலைமகளே நின் திருவருளுக்கு**
**அயலா விடாம லடியேனையும் உவந்து ஆண்டருளே. 4**

**அருக்கோ தயத்தினும் சந்திரோதயம ஒத்த அழகெறிக்கும்**
**திருக்கோல நாயகி செந்தமிழ்ப் பாவை திசைமுகத்தான்**
**இருக்கோ துநாதனுந் தானுமெப் போதுமினி திருக்கு**
**மருக்கோல நாண்மல ராள் என்னை யாளு மடமயிலே. 5**

மயிலே மடப்பிடியே கொடியே இளமான் பிணையே
குயிலே பசுங்கிளியே அன்னமே மனக்கூ ரிருட்கோர்
வெயிலே நிலவெழு மேனிமின் னேயினி வேறுதவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவேன் உனதுபொற் பாதங்களே. 6

பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியுந் தந்தருள் பாரதிவெள் ளிதழ்ப்பூஞ்
சீதாம் புயத்தி லிருப்பா ளிருப்பவென் சிந்தையுள்ளே
ஏதாம் புவியிற் பெறலரி தாவதெனக் கினியே. 7
இனிநான் உணர்வ தெண்ணெண் கலையாளை இலகுதொண்டைக்
கனிநாணுஞ் செவ்விதழ் வெண்ணிறத் தாளைக் கமலவயன்
றனிநாயகியை அகிலாண்ட மும்பெற்ற தாயைமணப்
பனிநாண் மலர் உறை பூவையை யாரணப் பாவையையே. 8

பாவுந் தொடையும் பதங்களும் சீரும் பலவிதமா
மேவுங் கலைகள் விதிப்பா ளிடம்விதியின் முதிய
நாவும் பகர்ந்ததொல் வேதங்கள் நான்கு நறுங்கமலப்
பூவுந் திருப்பதம் பூவால் அணிபவர் புந்தியுமே. 9

புந்தியிற் கூரிரு ணீக்கும்புதிய மதியம் என்கோ
வந்தியில் றோன்றிய தீபமென்கோ நல்லரு மறையோர்
சந்தியில் தோன்றும் தபனனென் கோமணித்தா மமென்கோ
உந்தியில் தோன்றும் பிரான்புயந் தோயு மொருத்தியையே. 10

ஒருத்தியை யொன்றுமி லாவென் மனத்தினு வந்துதன்னை
இருத்தியை வெண்கமலத் திப்பாளை யெண்ணெண் கலைதோய்
கருத்தியை யைம்புலனுங் கலங்காமற் கருத்தை யெல்லாம்
திருத்தியை யான்மற வேன்றிசை நான்முகன் தேவியையே. 11

தேவருந் தெய்வப் பெருமானு நான்மறை செப்புகின்ற
மூவருந் தானவரா கியுள் ளோருமுனி வரரும்
யாவரு மேனையவெல் லாவுயிரு மிதழ் வெளுத்த
பூவரு மாதினருள் கொண்டுஞா னம்புரி கின்றதே. 12

புரிகின்ற சிந்தையி னூடே புகுந்துபுகுந் திருளை
அரிகின்ற தாய்கின்ற வெல்லா வறிவினரும் பொருளைத்
தெரிகின்ற வின்பங் கனிந்தூறி நெஞ்சந்தெ ளிந்துமுற்ற
விரிகின்ற தெண்ணெண் கலைமானுணர்த்திய வேதமுமே. 13

வேதமும் வேதத்தி னந்தமு மந்தத்தின் மெய்ப்பொருளாம்
பேதமும் பேதத்தின் மார்க்கமு மார்க்கப் பிணக்கறுக்கும்

போதமும் போதவுரு வாகியெங் கும்பொதிந் தவிந்து
நாதமு நாதவண் டார்க்கும்வெண் தாமரை நாயகியே. 14

நாயக மான மலரக மாவதுஞான வின்பச்
சேயக மான மலரக மாவதுந் தீவினையா
லேயக மாறி விடுமக மாவது மெவ்வுயிர்க்குந்
தாயக மாவதுந் தாதார்சு வேத சரோருகமே. 15

சரோருகமே திருக் கோயிலுங் கைகளுந் தாளிணையும்
உரோருகமுந் திருவல்குலு நாபியுமோங் கிருள்போற்
சிரோருகஞ் சூழ்ந்த வதனமு நாட்டமுஞ் சேயிதழும்
ஒரோருக மீரரை மாத்திரை யானவுரை மகட்கே. 16

கருந்தா மரைமலர் கட்டாமரை மலர்கா மருதாள்
அருந்தா மரைமலர் செந்தாமரை மலரா லயமாத்
தருந்தா மரைமலர் வெண்டாமரை மலர்தாவி லெழிற்
பெருந்தா மரைமணக்குங் கலைக்கூட்டப் பிணைதனக்கே. 17

தனக்கே துணிபொரு ளென்னுந் தொல்வேதஞ் சதுர்முகத்தோன்
எனக்கே சமைந்த வபிடேக மென்னு மிமையவர்தா
மனக்கேத மாற்றுமருந் தென்ப சூடுமலரென் பன்யான்
கனக்கேச பந்திக் கலைமங்கை பாத கமலங்களே. 18

கமலந்தனில் இருப்பாள் விருப்போடங் கரம் குவித்துக்

அம்மனின் அருட்பாடல்– 1

அயிகிரி நந்தினி நந்தித மேதினி
விச்வ வினோதினி நந்தநுதே
கிரிவர விந்த்ய சிரோதி நிவாஸினி
விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணு நுதே
பகவதி ஹே சிதிகண்ட குடும்பினி
பூரிகுடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்ய கபர்தினி சைலஸுதே.

அம்மனின் அருட்பாடல்- 2

**ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்கா தேவி சரணம்**
**ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்கா தேவி சரணம்**
**துர்க்கையம்மனை துதித்தால் என்றும் துன்பம் பறந்தோடும்**
**தர்மம் காக்கும் தாயாம் அவளை தரிசனம் கண்டால் போதும்**
**கர்ம வினைகளும் போகும் சர்வமங்களம் கூடும் (ஜெய ஜெய தேவி)**

**ஆயிரம் கரங்கள் உடையவளே ஆதி சக்தி அவள் பெரியவளே**
**ஆயிரம் நாமங்கள் கொண்டவளே தாய் போல் நம்மை காப்பவளே**
**(ஜெய ஜெய தேவி)**

**சங்கு சக்கரமும் வில்லும் அம்பும் மின்னும் வாளும் வேலும் சூலமும்**
**தங்க கைகளில் தாங்கி நிற்பாள் அம்மா**
**சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள் திங்களை முடிமேல் சூடி நிற்பாள்**
**மங்கள வாழ்வும் தந்திடுவாள் மங்கையர்கரசியும்**
**அவளே அங்கையர்க்கண்ணியும் அவளே**

**ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்கா தேவி சரணம்**
**ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்கா தேவி சரணம்**
**கனக துர்கா தேவி சரணம் கனக துர்கா தேவி சரணம்.**

அம்மனின் அருட்பாடல்- 3

**ஜெய ஜெய ஜெய சக்தி ஓம் ஸ்ரீ**
**ஜெய ஜெய ஜெய சக்தி**

**ஜெய ஜெய ஜெய எனப் பாடி பணிந்தோம்**
**ஜெகமெங்கும் அமைதியைத் தா ஓம் ஸ்ரீ**
**ஜெய ஜெய ஜெய சக்தி**

**திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க**
**தேவை எல்லாம் அடைய அம்மம்மா**
**தேவை எல்லாம் அடைய**

**பக்தி பெருகிட பாடி உருகிட**
**பணிப்பாய் அன்பில் எமை ஓம் ஸ்ரீ**
**ஜெய ஜெய ஜெய சக்தி**

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரம் அருள்வாய் அம்மம்மா
ஈஸ்வரி வரம் அருள்வாய்

கரம் குவித்தோம் இனி காலை விடோமம்மா
கருணையுடன் அணைப்பாய் ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் அம்மம்மா
கருத்தினில் அன்பருள்வாய்

தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே அம்மா
தேவியுன் அடைக்கலமே ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான நல்லொளி தீபம் வைத்து

நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்துக்கமைதியைத் தா ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி.

அம்மனின் அருட்பாடல் – 4

ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜகத் காரணி நீ பரிபூரணி நீ
ஜகத் காரணி நீ பரிபூரணி நீ (ஜனனி)

சதுர் வேதங்களும் பஞ்ச பூதங்களும்
சன் மார்க்கங்களும் சப்த தீர்த்தங்களும்
அஷ்ட யோகங்களும் நவ யாகங்களும்
தொழும் பூங்கழலே மலை மாமகளே
அலை மா மகள் நீ கலை மா மகள் நீ (ஜனனி)

ஸ்வர்ண ரேகையுடன் ஸ்வயமாகி வந்த
லிங்க ரூபிணியே மூகாம்பிகையே
பல ஸ்தோத்திரங்கள் தர்ம சாஸ்திரங்கள்

பணிந்தேத்துவதும் மணிமேதிரங்கள்
சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ (ஜனனி)

அம்மனின் அருட்பாடல்– 5

அம்மா அம்மா பரமேஸ்வரி
அகிலாண்டேஸ்வரி பரமேஸ்வரி
ஆதிபராசக்தி பரமேஸ்வரி
ஆனந்தவல்லி பரமேஸ்வரி (அம்மா)

திரிபுரசுந்தரி பரமேஸ்வரி
திண்ணமாய்க் காப்பாள் பரமேஸ்வரி
உலகத்து நாயகியே பரமேஸ்வரி
உன்னையே நம்பினோம் பரமேஸ்வரி (அம்மா)

தீபமங்கள பரமேஸ்வரி
தீனதயாபரி பரமேஸ்வரி
ராயராயேஸ்வரி பரமேஸ்வரி
ரட்சித்திடுவாள் பரமேஸ்வரி (அம்மா)

மங்கள ரூபினி பரமேஸ்வரி
மக்களைக் காப்பாய் பரமேஸ்வரி
பகவதியம்மா பரமேஸ்வரி
பரிவுடன் வருவாய் பரமேஸ்வரி (அம்மா)

அம்மனின் அருட்பாடல் – 6

அம்ப பரமேஸ்வரி அகிலாண்டேஸ்வரி
ஆதி பராசக்தி பாலயமாம்
ஸ்ரீ புவனேஸ்வரி ராயராயேஸ்வரி
ஆனந்த ரூபினி பாலயமாம்

பர்வத ராயகுமாரி பவானி
பஞ்சய கிருபயா மமதுரிதானி
தீனதயாபாரி பூர்ணகடாச்சி
திரிபுரசுந்தரி தேவி மீனாட்சி

**ஆரணி காரணி நாரணி நீலி**
**பூரணி யோக புராதன சீலி**
**சங்கரநாயகி சாந்த மகேஸ்வரி**
**சுந்தரிவேத விதசாவுணி கெளரி**

**பஞ்சதசாசர பஞ்சாசரவாசினி**
**குஞ்சிதபாத மகோச விலாசினி**
**கஞ்சி காமாச்சி காசி விசாலாச்சி**
**காருண்ய லாவண்ய அகிலாண்டேஸ்வரி.**

அம்மனின் அருட்பாடல் – 7

**மங்கள ரூபிணி மதி அணி சூலினி மன்மத பாணியளே**
**சங்கடம் நீங்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி செளந்தரியே**
**கங்கண பாணியன் களிமுகம் கொண்டநல் கற்பகக் காமினியே**
**ஜெயஜெய சங்கரி கெளரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி.**

**கான் உறுமலர் எனக் கதிர் ஒளிகாட்டிக் காத்திட வந்திடுவாள்**
**தான் உறு தவஒளி தார்ஒளி மதிஒளி தாங்கியே வீசிடுவாள்**
**மான் ஊறு லிழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்**
**ஜெய ஜெய சங்கரி கெளரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி.**

**சங்கரி செளந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே**
**பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே**
**எம்குலம் தழைத்திட எழில்வடிவுடனே எழுந்தநல் துர்க்கையளே**
**ஜெய ஜெய சங்கரி கெளரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி**

**தணதண தந்தண தவில் ஒலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்**
**கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீ வருவாய்**
**பணபண பம்பண பறையொலி கூவிடப் பண்மணி நீ வருவாய்**
**ஜெய ஜெய சங்கரி கெளரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி**

**பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே**
**கொஞ்சிடும் குமரனைக் குணம்மிகு வேழனைக் கொடுத்த நல்குமரியளே**
**சங்கடம் தீர்த்திடச் சமர் அது செய்தநல் சக்தி எனும் மாயே**
**ஜெய ஜெய சங்கரி கெளரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி**

**எண்ணியபடி நீ அருளிட வருவாய் எம்குல தேவியளே**
**பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்**
**கண்ணொளி அதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே**
**ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி.**

அம்மனின் அருட்பாடல் – 8

**ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்**
**ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்**
**ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம(ஓம் சக்தி)**

**சுந்தரவதனி சுகுண மனோகரி**
**முத்தகஸ முக மதிவதனி**
**சந்தன குங்கும அலங்கார முடனே**
**தந்திடுவா யுந்தன் தரிசனமே (ஓம் சக்தி)**

**நந்திதேவருடன் முனிவரும் பணிய**
**ஆனந்த முடனே வந்திடுவாய்**
**வந்தனை செய்து மாயனயனுடன்**
**வகையாயுடன் புகழ் பாடிடவே (ஓம் சக்தி)**

**தங்கச் சிலம்பு சலசலவென்றிட**
**தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட**
**பொங்குமானந்தமுடன் புலிமேல் விளங்கும்**
**மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம் சக்தி)**

**வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட**
**விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட**
**சதானந்தமான யோதிஸ்வரூபி**
**ராய ராயேஸ்வரி சரணம் சரணம் (ஓம் சக்தி)**

அம்மனின் அருட்பாடல் – 9

**கற்பக வல்லி நின் பொற்பாதங்கள் பிடித்தேன்**
**நற்கதி அருள்வாயம்மா (கற்பக வல்லி)**

**பற்பலரும் போற்றும் பதிமயிலாபுரியில்**
**சிற்பம் நிறைந்த உயர் சிங்கார கோயில் கொண்ட (கற்பக வல்லி)**

**நீ இந்த வேளை தன்னில் சேயன் எனை மறந்தால்**
**நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ?**
**ஏனிந்த மோனம மம்மா ஏழை எனக்கருள**
**ஆனந்த பைரவியே ஆதரித்தருளுமம்மா** **(கற்பக வல்லி)**

**எல்லோருக்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கி என்றும்**
**நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய**
**கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த**
**உல்லாசியே உமா உனை நம்பினேனம்மா** **(கற்பக வல்லி)**

**நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்**
**வாகீஸ்வரி மாயே வாராயிது தருணம்**
**பாகஸ்ரீ தாயே பார்வதி - இந்த**
**லோகேஸ்வரி நீயே உலகினில் துணையம்மா** **(கற்பக வல்லி)**

**அஞ்சன மையிடும் அம்பிகை எம்பிரான்**
**கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம் - அருள்**
**தஞ்சமென அடைந்தேன் தாயே உன்சேய் நான்**
**ரஞ்சனியே ரட்சிப்பாய் கெஞ்சுகிறேன் அம்மா** **(கற்பக வல்லி)**

அம்மனின் அருட்பாடல் – 10

**ரக்ஷ ரக்ஷ ஜகன் மாதா சர்வ சக்தி ஜெயதுர்கா**
**ரக்ஷ ரக்ஷ ஜகன் மாதா சர்வ சக்தி ஜெயதுர்கா**
**மங்கள வாரம் சொல்லிட வேணும்,**
**மங்கள கண்டிகை ஸ்லோகம் - இதை**
**ஒன்பது வாரம் சொல்லுவதாலே**
**உமையவள் திருவருள் சேரும.** **(ரக்ஷ ரக்ஷ)**

**படைப்பவள் அவளே, காப்பவள் அவளே,**
**அளிப்பவள் அவளே சக்தி - அபயம்**
**என்று அவளை சரண் புகுந்தாலே**
**அடைக்கலம் அவளே சக்தி ஜெய ஜெய**
**சங்கரி கௌரி மனோகரி அபயம் அளிப்பவள்**
**அம்பிகை பைரவி - சிவ சிவ சங்கரி**
**சக்தி மஹேஸ்வரி திருவருள் தருவாள் தேவி** **(ரக்ஷ ரக்ஷ)**

**கருணையின் கங்கை கண்ணனின் தங்கை**
**கடைக்கண் திறந்தால் போதும்..**
**வருகின்ற யோகம் வளர்பிறை யாகும்**

**அருள்மழை பொழிவாள் நாளும்..**
**நீலநிறத்தோடு ஞாலம் அளந்தவள்**
**காளி எனத் திரிசூலம் எடுத்தவள்..**
**பக்தருக்கெல்லாம் பாதை வகுத்தவள்**
**நாமம் சொன்னால் நன்மை தருபவள்**
**நாமம் சொன்னால் நன்மை தருபவள** **(ரக்ஷ ரக்ஷ)**

அம்மனின் அருட்பாடல் – 11

**கற்பூர நாயகியே கனகவல்லி**
**காளி மகமாயி கருமாரியம்மா**
**பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா**
**பூவிருந்தவல்லி தெய்வயானை அம்மா**
**விற்கோல வேதவல்லி விசாலாக்ஷி**
**விழிக்கோல மாமதுரை மீனாக்ஷி**
**சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே**
**சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே.**

**புவனமுழுதாளுகின்ற புவனேஸ்வரி**
**புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி**
**நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி**
**நம்பினவர் கைவிளக்கே சர்வேசஸ்வரி**
**கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி**
**காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி**
**உவமானப்பரம்பொருளே ஜகதீசஸ்வரி**
**உன்னடிமைச் சிறியேனை நீ ஆதரி.**

அம்மனின் அருட்பாடல் – 12

**அன்னை பராசக்தியே நீ வா வா வா**
**அகிலத்திற்கு அன்னையே நீ வா வா வா**
**ஓடிவா நீ ஓடிவா நீ வா வா வா**
**உள்ளம் களித்து எங்கள் முன்னே வா வா வா** **(அன்னை)**

**ஐங்கரனுக்கு அன்னையே நீ வா வா வா**
**ஆறுமுகத்தானை அழைத்து நீ வா வா வா**
**ஆனந்த ரூபியே நீ வா வா வா**
**எனப்பருடன் கூடி நீயும் வா வா வா** **(அன்னை)**

ஓங்கார உட்பொருளே வா வா வா
உண்மைப் பரம்பொருளே வா வா வா
பஞ்சாசரப் புகழே வா வா வா
பத்ம விலோசனியே நீ வா வா வா
காஞ்சி காமாட்சியே நீ வா வா வா (அன்னை)

காசி விசாலாட்சி வா வா வா
மதுரை மீனாம்பிகையே வா வா வா
மாதர் எங்கள் சங்கத்தில் நீ வா வா வா (அன்னை)

உந்தனை பணிந் தழைத்தோம் வா வா வா
ஓடி ஓடி இப்பொழுதே நீ வா வா வா
அன்னை எங்கள் ஞானம்மா நீ வா வா வா
அன்பர்கள் உள்ளம் களிக்க வா வா வா (அன்னை)

அம்மனின் அருட்பாடல் – 13

திருவிளக்கே திருவிளக்கே தேவி பராசக்தி திருவிளக்கே
தேவியின் வடிவே திருவிளக்கே தேவியே உனக்கு நமஸ்காரம் (2)

இருளை அகற்றும் திருவிளக்கே இன்பம் அளிக்கும் திருவிளக்கே
எங்கும் ஒளிதரும் திருவிளக்கே லக்ஷ்மி உனக்கு நமஸ்காரம் (2)

மங்கள ஜோதியாம் திருவிளக்கே மாலையில் ஒளிதரும் திருவிளக்கே
காலையில் ஒளிதரும் திருவிளக்கே சரஸ்வதி உனக்கு நமஸ்காரம் (2)

திருமகள் வடிவே திருவிளக்கே தேவரும் பணியும் திருவிளக்கே
தெள்ளிய ஜோதியே திருவிளக்கே சாரதே உனக்கு நமஸ்காரம் (2)

அஷ்டலக்ஷ்மி வடிவே திருவிளக்கே ஆனந்த நர்த்தினி திருவிளக்கே
ஆலய பூசணி திருவிளக்கே தேவி தீபங்கள் ஆதிபராசக்தி நமஸ்காரம் (2)

பாக்ய லக்ஷ்மியாம் திருவிளக்கே பக்தியை அளித்திடும் திருவிளக்கே
பதவியைத் தந்திடும் திருவிளக்கே பவானி உனக்கு நமஸ்காரம் (2)

ஜெகமெல்லாம் விளங்கும் திருவிளக்கே ஜெகதீஸ்வரி வடிவே திருவிளக்கே
அழகை அளிக்கும் திருவிளக்கே அம்பிகை உனக்கு நமஸ்காரம் (2)

**சௌபாக்ய ரூபிணி திருவிளக்கே சந்தான பலம் தரும் திருவிளக்கே**
**சம்பத்தை அளித்திடும் திருவிளக்கே சக்தியே உனக்கு நமஸ்காரம்**
**ராஜராஜேஸ்வரி உனக்கு நமஸ்காரம் (திருவிளக்கே)**

அம்மனின் அருட்பாடல் – 14

**திருவிளக்கை ஏற்றி வைத்தோம் திருமகளே வருக**
**திருவிளக்கை ஏற்றி வைத்தோம் திருமகளே வருக**
**குலம் விளங்க எங்கள் வீட்டில் கொலுவிருக்க வருக**

**அலைமகளே வருக ஐஸ்வர்யம் தருக**
**அலைமகளே வருக ஐஸ்வர்யம் தருக**

**திருவிளக்கை ஏற்றி வைத்தோம் திருமகளே வருக**
**குலம் விளங்க எங்கள் வீட்டில் கொலுவிருக்க வருக**
**வாசலிலே மாக்கோலம் வீட்டினிலே லக்குமிகரம்**
**வாசலிலே மாக்கோலம்**
**வீட்டினிலே லக்குமிகரம்**
**நெற்றியிலே ஸ்ரீசூர்ணம்**
**நெஞ்சினிலே லக்குமிகரம்**

**அம்மா நீ ஆதரித்தால்**
**அகிலமெல்லாம் இன்ப மயம்**
**அஷ்டமா சித்தியுடன்**
**லோகமெல்லாம் க்ஷேம மயம்**
**அஷ்டமா சித்தியுடன்**
**லோகமெல்லாம் க்ஷேம மயம்**
**அலைமகளே வருக ஐஸ்வர்யம் தருக**
**அலைமகளே வருக ஐஸ்வர்யம் தருக**

**மாவிலையும் தோரணமும்**
**மங்கலத்தின் அடையாளம்**
**மாவிலையும் தோரணமும்**
**மங்கலத்தின் அடையாளம்**
**ஊதுவத்தி எரிவதினால்**
**உள்ளத்திலும் ஒரு வாசம்**

**அம்மா நீ அருள் புரிந்தால்**
**அகிலமெல்லாம் அலங்காரம்**

அன்றாடம் பாடிடுவோம்
அஷ்டலட்சுமி திருநாமம்
அன்றாடம் பாடிடுவோம்
அஷ்டலட்சுமி திருநாமம்

சங்கு சக்ரதாரி நமஸ்காரம்
சகல வரம் தருவாய் நமஸ்காரம்
பத்மபீட தேவி நமஸ்காரம்
பக்தர் தம்மைக் காப்பாய் நமஸ்காரம்

## கலைமகள்

15. ஆய கலைகள் அறுபத்தி நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் . அம்மை
தூய உருப்பளிங்கு போல்வாள் என்
உள்ளத்தின் உள்ளே இருப்பள் இங்கு வாராது இடர்
படிகநிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரைபோற் கையும் துடியிடையும்
அல்லும் பகலும் நவரத முந்ததித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி"

16. மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ் சொல்லெடுத்து பாட வந்தோம்
அம்மா பாட வந்தோம்
அருள்வாய் நீ இசை தர வா நீ
இங்கு வருவாய் நீ லயம் தரும் வேணி அம்மா
மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ் சொல்லெடுத்து பாட வந்தோம்
அம்மா பாட வந்தோம்

நாமணக்க பாடி நின்றால் ஞானம் வளர்ப்பாய்
பூமணக்க பூஜை செய்தால் பூவை நீ மகிழ்வாய்
மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ் சொல்லெடுத்து பாட வந்தோம்
அம்மா பாட வந்தோம்

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாய்
எங்கள் உள்ளக் கோவிலிலே உறைந்து நிற்பாய்
வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாய்
எங்கள் உள்ளக் கோவிலிலே உறைந்து நிற்பாய்
கள்ளமில்லாமல் தொழும் அன்பருக்கே என்றும்
அள்ளி அறிவைத் தரும் அன்னையும் நீ

வாணி சரஸ்வதி மாதவி பாரதி வாகதீஸ்வரி மாலினி
காணும் பொருளில் தோன்றும் கலைமணி
வேண்டும் வரம் தரும் வேணி
நான்முகன் நாயகி மோகனரூபிணி
நான்மறை போற்றும் தேவி நீ
வானவர்க்கமுதே தேனருள் சிந்தும்
கான மனோகரி கல்யாணி

அருள்வாய் நீ இசை தர வா நீ
இங்கு வருவாய் நீ லயம் தரும் வேணி அம்மா

மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ் சொல்லெடுத்து பாட வந்தோம்
அம்மா பாட வந்தோம்
அம்மா பாட வந்தோம்

ஞானம்பிகை (துர்க்கை)

1. கொண்டைமுடி அலங்கரித்து
கொஞ்சும் கிளி கையில் வைத்து
கொண்டைமுடி அலங்கரித்து
கொஞ்சும் கிளி கையில் வைத்து
அஞ்சுக மொழி உமையாள் வீற்றிருந்தாள்
அந்த அழகிய மாநகர் மதுரையிலே மதுரையிலே
மதுரையிலே மதுரையிலேஹ

சரணம் 1

வான்மதி சூடிய கணவர் சொக்கேசருடன்
மாணிக்கத் தேரினில் மரகதப்பாவை வந்தாள்
வான்மதி சூடிய கணவர் சொக்கேசருடன்
வைரமுடி மின்னிட மரகதப்பாவை வந்தாள்
வானவர் பூமாரி பழிந்திடவே

தேவ கானமும் ஒலித்திட தேவி வந்தாள்
மீனாட்சி வந்தாள்
அந்த அழகிய மாநகர் மதுரையிலே மதுரையிலே

இசை சரணம் 2

1. தேனமர் சோலையாம் கதம்பவனம்
அங்கு வானளாவும் தங்க கோபுரம் எங்கும் காணும்
தேன்தமிழ் பாவலரின் தேவார கானம்
தேன்தமிழ் பாவலரின் தேவார கானம்
ஆனந்த வெள்ளம் பெருகும் மீனாட்சி சன்னிதானம்
ஆனந்த வெள்ளம் பெருகும் மீனாட்சி சன்னிதானம்

அந்த அழகிய மாநகர் மதுரையிலே மதுரையிலே
மதுரையிலே மதுரையிலே

2. ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை
அண்டமெல்லாம் பூத்தாளை
மாதுளம்பூ நிறத்தாளை
புவியடங்கக் காத்தாளை அங்குச பாசாங்குசமும்
கரும்புமங்கைச் சேர்த்தாளை
முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.

3. அணுவிற்குள் அணுவும் நீ அண்டங்கள் அனைத்தும் நீ
ஆள்கின்ற அரசியும் நீ
கணுவிற்குள் கணுவும் நீ கரும்புக்குள் சுவையும் நீ
கருணைக்கு எல்லையும் நீ
விண்ணும் நீ மண்ணும் நீ விகசிக்கும் ஒளியும் நீ
வேதத்தின் மூலமும் நீ
பண்ணும் நீ பனுவல் நீ புலவர்க்கு பொருளும் நீ
பாருக்கு அன்னையும் நீ
அகிலம் எல்லாம் போற்றும் அகிலாண்ட நாயகியே
அன்புவடி வான உமையே
அன்னையே சிவகாமி அம்மையே எனை ஈன்ற
ஆதிசிவ சக்தி தாயே!

4. கன்றுக்கு பசுவாக குன்றுக்கு ஒளியாக
என்றைக்கு நீ வருவாய்?
மன்றாடும் பிள்ளைக்கு குன்றாத அன்பதனை

என்றைக்கு நீ தருவாய்?
மண்ணுக்கு மழையாக விண்ணுக்கு நிலவாக
என்றைக்கு நீ வருவாய்?
கண்ணுக்குள் ஒளியாக நெஞ்சுக்குள் சுடராக
என்றைக்கு நீ ஒளிர்வாய்?
இருளுக்குள் அகப்பட்டு பலவாறு வதைபட்டு
ஒளிஉன்னைத் தேடி வந்தேன்
அன்னையே சிவகாமி அம்மையே எனை ஈன்ற
ஆதிசிவ சக்தி தாயே!

5. விழியுண்டு ஒளியில்லை இருளுண்டு விளக்கில்லை
வழிகாட்ட நீ வருவாய்
விதியுண்டு கதியில்லை மருளுண்டு தெளிவில்லை
மருள்நீக்க நீ வருவாய்
நதியுண்டு நீரில்லை நிலமுண்டு பயிரில்லை
வளம்சேர்க்க நீ வருவாய்
சதிசெய்யும் மதியுண்டு மதிசெய்யும் வலியுண்டு
வலிதீர்க்க நீ வருவாய்
கதியென்று யாருண்டு உனையன்றி எவருண்டு
காப்பாற்ற நீ வருவாய்
அன்னையே சிவகாமி அம்மையே எனை ஈன்ற
ஆதிசிவ சக்தி தாயே!

22. வேரற்ற மரமாகி வீழ்ந்து விட்டேன் அம்மா
        வேராக நீ வருவாய்
நோயுற்ற உயிராகி நொந்து விட்டேன் அம்மா
        மருந்தாக நீ வருவாய்
பாதையற்ற வழியில் பயணிக் கின்றேனம்மா
        பாதையாய் நீ வருவாய்
நாதியற் றிவ்வுலகில் நலிந்து விட்டேனம்மா
        நலம்செய்ய நீ வருவாய்
பேதையென் குரல் கேட்டும் பேசாமலிருப்பதுவும் தாயுனக் கழகுதானோ?
அன்னையே சிவகாமி அம்மையே எனை ஈன்ற ஆதிசிவ சக்தி தாயே!

23. ஏதொன்றும் அறியாமல் நான்செய்த பிழையாவும் பொறுத்தருள வேண்டுமம்மா
தீதென்று அறியாமல் தீவினையில் வீழ்ந்தஎன்னை காத்தருள வேண்டுமம்மா
அகிலங்கள் அனைத்துக்கும் அன்னையே உன்னையே
சரணென்று பணிந்து விட்டேன்
ஆகாய கங்கையென பொங்கிவரும் உன்கருணை
மழைநனைய வந்து விட்டேன்
நொடியு மகலாதஅன்பை யுந்தன்திரு வடிகளிலே தந்தெனக்கு அருளிடு வாய்

அன்னையே சிவகாமி அம்மையே எனை ஈன்ற
ஆதிசிவ சக்தி தாயே!

ஜனனி ஜனனி ஜகம் நீ
ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜகத் காரணி நீ பரிபூரணி நீ
ஜகத் காரணி நீ பரிபூரணி நீ
ஜகத் காரணி நீ பரிபூரணி நீ
ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜனனி ஜனனி ஜனனி ஜனனி

ஒரு மான் மழுவும் சிறு கூன் பிறையும்
சடை வார் குழலும் விடை வாகனமும்
சடை வார் குழலும் விடை வாகனமும்
கொண்ட நாயகனின் குளிர் தேகத்திலே
நின்ற நாயகியே இட பாகத்திலே
நின்ற நாயகியே இட பாகத்திலே

ஜகன் மோகினி நீ சிம்ம வாகினி நீ
ஜகன் மோகினி நீ சிம்ம வாகினி நீ
ஜகன் மோகினி நீ சிம்ம வாகினி நீ
ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜகத் காரணி நீ பரிபூரணி நீ
சதுர் வேதங்களும் பஞ்ச பூதங்களும்

சன் மார்க்கங்களும் சப்த தீர்த்தங்களும்
சன் மார்க்கங்களும் சப்த தீர்த்தங்களும்
அஷ்ட யோகங்களும் நவ யாகங்களும்
தொழும் பூங்கழலே மலை மாமகளே
தொழும் பூங்கழலே மலை மாமகளே

அலை மா மகள் நீ கலை மா மகள் நீ
அலை மா மகள் நீ கலை மா மகள் நீ
அலை மா மகள் நீ கலை மா மகள் நீ
ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜகத் காரணி நீ பரிபூரணி நீ
ஸ்வர்ண ரேகையுடன் ஸ்வயமாகி வந்த

**லிங்க ரூபிணியே மூகாம்பிகையே**
**லிங்க ரூபிணியே மூகாம்பிகையே**
**ஸ்வர்ண ரேகையுடன் ஸ்வயமாகி வந்த**
**லிங்க ரூபிணியே மூகாம்பிகையே**
**லிங்க ரூபிணியே மூகாம்பிகையே**
**பல ஸ்தோத்திரங்கள் தர்ம சாஸ்திரங்கள்**
**பணிந்தேத்துவதும் மணிமேதிரங்கள்**
**பணிந்தேத்துவதும் மணிமேதிரங்கள்**
**சக்தி பீடமும் நீ அஹ்ஹ்ஹ ஆஆ**
**சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ**
**சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ**

**சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ**
**சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ**
**சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ**
**ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ**
**ஜகத் காரணி நீ பரிபூரணி நீ**
**ஜகத் காரணி நீ பரிபூரணி நீ**

**ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ**
**ஜனனி ஜனனி ஜனனி ஜனனி**
**ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ**
**ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ"**

## 24. அபிராமி அந்தாதி பாடல்

1. ஞானமும் நல்வித்தையும் பெற
**உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன**
**விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.**

2. பிரிந்தவர் ஒன்று சேர
**துணையும் தொழும் தெய்வமும், பெற்றதாயும் சுருதிகளின்**
**பணையும், கொழுந்தும் பதி கொண்டவேரும் பனிமலர்பூங்**
**கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங்குசமும், கையில்**
**அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே.**

3. குடும்பக் கவலையிலிருந்து விடுபட
**அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு**
**செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவிப்**
**பிறந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாதகரும நெஞ்சால்**
**மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.**

4. உயர் பதவிகளை அடைய
**மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி**
**குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார்சடைமேல்**
**பனிதரும் திங்களும்இ பாம்பும், பகீரதியும் படைத்த**
**புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.**

5. மனக்கவலை தீர
**பொருந்திய முப்புரை! செப்புரை செய்யும் புணர்முலையால்**
**வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்**
**அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயமேல்**
**திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.**

6. மந்திர சித்தி பெற
**சென்னியது உன்பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே**
**மன்னியது உன் திருமந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே!**
**முன்னிய நின் அடி யாருடன் கூடி முறை முறையே**
**பன்னியது என்றும் உன் தன் பரமாகம பத்ததியே.**

7. மலையென வரும் துன்பம் பனியென நீங்க
**ததியுறு மத்திற் சுழலும் என்ஆவி தளர்விலதோர்**
**கதியுறும் வண்ணம் கருது கண்டாய், கமலாலயனும்,**
**மதியுறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கிஎன்றும்**
**துதியுறு சேவடியாய்! சிந்துரானன சுந்தரியே.**

8. பற்றுகள் நீங்கி பக்தி பெருகிட
**சுந்தரி! எந்தை துணைவி! என் பாசத் தொடரைஎல்லாம்**
**வந்தரி, சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்**
**அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்**
**சுந்தரி, கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.**

9. அனைத்தும் வசமாக
**கருத்தன, எந்தை தன் கண்ணன், வண்ணக் கனகவெற்பில்**
**பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேரருள்கூர்**
**திருத்தன பாரமும் ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்**
**முருத்தனமூரலும், நீயும், அம்மே! வந்துஎன்முன் நிற்கவே.**

10. மோட்ச சாதனம் பெற

**நின்றும்இ இருந்தும்இ கிடந்தும்இ நடந்தும் நினைப்பது உன்னை**
**என்றும் வணங்குவது உன்மலர்த்தாள், எழுதாமறையின்**
**ஒன்றும் அரும் பொருளே! அருளே! உமையே இமயத்து**
**அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!**

11. இல்வாழ்க்கையில் இன்பம் பெற

**ஆனந்தமாய் என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்இ**
**வான் அந்தமான வடிவுடையாள், மறை நான்கினுக்கும்**
**தான் அந்தமான சரணார விந்தம் தவளநிறக்**
**கானம் தம் ஆடரங்கம் எம்பிரான் முடிக்கண்ணியதே.**

12. தியானத்தில் நிலைபெற

**கண்ணியது உன்புகழ் கற்பது உன், நாமம் கசிந்து பத்தி**
**பண்ணியது உன் இருபாதாம் புயத்தில், பகல் இரவா**
**நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து, நான் முன்செய்த**
**புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே.**

13. வைராக்கிய நிலை எய்த

**பூத்தவளே புவனம் பதினான்கையும், பூத்தவண்ணம்**
**காத்தவளே பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு**
**மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!**
**மாத்தவளே உன்னை அன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே!**

14. தலைமை பெற

**வந்திப்பவர் உன்னை வானவர்இ தானவர்இ ஆனவர்கள்**
**சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே**
**பந்திப்பவர் அழியாப் பரமானந்தர், பாரில் உன்னைச்**
**சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண் ஒளியே.**

15. பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெற

**தண்ணளிக்கு என்றுமுன்னே பலகோடிதவங்கள் செய்வார்**
**மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதிவானவர் தம்**
**விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ?**
**பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.**

16. முக்காலமும் உணரும் திறன் உண்டாக

**கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்துஇ கிளர்ந்துஇ ஒளிரும்**
**ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா**
**வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!**
**அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே.**

17. கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய
**அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்**
**துதிசய ஆனன சுந்தரவல்லி, துணை இரதி**
**பதிசயமானது அபசயம் ஆக முன் பார்த்தவர் தம்**
**மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.**

18. மரண பயம் நீங்க
**வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்**
**செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே**
**அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து**
**வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே.**

19. பேரின்ப நிலையடைய
**வெளிநின்ற நின் திருமேனியைப்பார்த்தேன் விழியும் நெஞ்சும்,**
**களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை, கருத்தினுள்ளே**
**தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ?**
**ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.**

20. வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக
**உறைகின்ற நின் திருக்கோயிலில் நின்கேள்வர் ஒருபக்கமோ?**
**அறைகின்ற நான்மறையின் அடியோ? முடியோ? அமுதம்**
**நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? எந்தன் நெஞ்சமோ?**
**மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே.**

21. அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய
**மங்கலை! செங்கலசம் முலையாள்! மலையாள்! வருணச்**
**சங்கலை செங்கை! சகலகலாமயில்! தாவுகங்கை**
**பொங்கு அலைதங்கும் புரிசடையோன் புடையாள்! உடையாள்!**
**பிங்கலை! நீலி! செய்யாள்! வெளியாள்! பசும் பொற்கொடியே.**

22. இனிப் பிறவா நெறி அடைய
**கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த**
**படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்**
**பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!**
**அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.**

23. எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க
**கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது என்பர் கூட்டம் தன்னை**
**விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு**
**உள்ளேஇ அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த**
**கள்ளே! களிக்கும் களியே அளிய என் கண்மணியே.**

24. நோய்கள் விலக
**மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த**
**அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப்**
**பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!**
**பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே.**

25. நினைத்த காரியம் நிறைவேற
**பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க**
**முன்னே தவங்கள் முயன்று கொண்டேன், முதல் மூவருக்கும்**
**அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!**
**என்னே! இனி உன்னையான் மறவாமல் நின்று ஏத்துவனே.**

26. சொல்வாக்கும் செல்வாக்கும் பெருக
**ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்,**
**காத்தும்இ அழித்தும் திரிபவராம், கமழ் பூங்கடம்பு**
**சாத்தும்குழல் அணங்கே! மணம் நாறும் நின்தாள் இணைக்கு என்**
**நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடத்தே.**

27. மனநோய் அகல
**உடைத்தனை வஞ்சப் பிறவியை, உள்ளம் உருகும் அன்பு**
**படைத்தனை பத்மபதயுகம் சூடும் பணி எனக்கே**
**அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருள்புனலால்**
**துடைத்தனை சுந்தரி! நின்னருள் ஏதென்று சொல்லுவதே.**

28. இம்மை மறுமை இன்பங்கள் அடைய
**சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்**
**புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்**
**அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்**
**செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.**

29. எல்லா சித்திகளும் அடைய
**சித்தியும், சித்திதரும் தெய்வமுமாகத் திகழும்**
**பராசத்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்**
**முத்தியும், முத்திக்கு வித்தும், வித்தாகி முளைத்தெழுந்த**
**புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.**

30. அடுத்தடுத்து வரும் துன்பங்கள் நீங்க
**அன்றே தடுத்து! என்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல என்கை**
**நன்றே உனக்கு இனி நான் என்செயினும்இ நடுக்கடலுள்**
**சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே**
**ஒன்றே! பல உருவே! அருவே! என் உமையவளே!**

31. மறுமையில் இன்பம் உண்டாக
**உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு**
**எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார், இனி எண்ணுதற்குச்**
**சமையங்களும் இல்லை, ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை,**
**அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே.**

32. துர்மரணம் வராமலிருக்க
**ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்**
**பாசத்தில் அல்லல்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்**
**வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட**
**நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழையே!**

33. இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க
**இழைக்கும் வினைவழியே ஆடும் காலன் எனைநடுங்க**
**அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய், அத்தர் சித்தமெல்லாம்**
**குழைக்கும் களபக் குவிமுலை யாமலைக் கோமளையே!**
**உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.**

34. சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க
**வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான்உலகம்**
**தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்**
**பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்**
**செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.**

35. திருமணம் நிறைவேற
**திங்கள் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க**
**எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்ணிறந்த விண்ணோர்**
**தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்**
**வெங்கண் பணியணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.**

36. பழைய வினைகள் வலிமை பெற
**பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்**
**மருளே! மருளில் வரும் தெருளே என் மனத்து வஞ்சத்து**
**இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்தன்**
**அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே!**

37. நவமணிகளைப் பெற
**கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன**
**மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விட அரவின்**
**பைக்கே அணிவது பண்மணிக்கோவையும் பட்டும்இ எட்டுத்**
**திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே!**

38. வேண்டியதை வேண்டியவாறு அடைய
**பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்**
**தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்**
**துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்**
**அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே.**

39. கருவிகளைக் கையாளும் வலிமை பெற
**ஆளுகைக்கு உன் தன் அடித்தாமரைகள் உண்டு அந்தகன்பால்**
**மீளுகைக்கு உன் தன் விழியின் கடைஉண்டு, மேல் இவற்றின்**
**மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று, முப்புரங்கள்**
**மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே!**

40. பூர்வ புண்ணியம் பலன்தர
**வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்**
**பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்**
**காணதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு**
**பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.**

41. நல்லடியார் நட்புப் பெற
**புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்**
**கண்ணியும், செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்**
**நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்**
**பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே.**

42. உலகினை வசப்படுத்த
**இடம் கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி. முத்து**
**வடம்கொண்ட கொங்கை மலை கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை**
**நடம்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்**
**படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே.**

43. தீமைகள் ஒழிய
**பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்ச பாணி! இன்சொல்**
**திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்**
**பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை**
**எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.**

44. பிரிவுணர்ச்சி அகல
**தவளே! இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்**
**அவளேஇ அவர் தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்**
**இவளேஇ கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்**
**துவளேன்இ இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே.**

45. உலகோர் பழியிலிருந்து விடுபட
**தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது, துணிந்து இச்சையே**
**பண்டு செய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்**
**கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றிச் செய்தவமோ?**
**மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே, பின் வெறுக்கை அன்றே.**

46. நல்நடத்தையோடு வாழ
**வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்**
**பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சைஉண்டு**
**கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்துபொன்னே!**
**மறுக்கும் தகைமைகள் செய்யினும், யான் உன்னை வாழ்த்துவேனே!**

47. யோகநிலை அடைய
**வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன், மனத்தே ஒருவர்**
**வீழும்படி அன்று, விள்ளும் படி அன்று, வேலைநிலம்**
**ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்**
**சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.**

48. உடல் பற்று நீங்க
**சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்**
**படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதிந்து நெஞ்சில்**
**இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ,**
**குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.**

49. மரணத் துன்பம் இல்லாதிருக்க
**குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட**
**வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து**
**அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல்என்பாய்**
**நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே.**

50. அம்பிகையை நேரில் காண
**நாயகி, நான்முகி, நாராயணி, கை நளின பஞ்ச**
**சாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, சாதிநச்சு**
**வாயகி, மாலினி, வாராகி, சூலினி, மாதங்கி என்று**
**ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே.**

51. மோகம் நீங்க
**அரணம் பொருள் என்றருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்**
**முரண்அன்றழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே**
**சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்**
**மரணம், பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.**

52. பெருஞ்செல்வம் அடைய

**வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை**
**பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த**
**ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு, அன்பு முன்பு**
**செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே.**

53. பொய்யுணர்வு நீங்க

**சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்,**
**பென்னம் பெரிய முலையும், முத்தாரமும் பிச்சிமொய்த்து**
**கன்னங்கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்**
**தன்னந்தனி இருப்பார்க்கு இது போலும் தவமில்லையே.**

54. கடன் தீர

**இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்சென்று இழிவுபட்டு**
**நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்**
**கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்**
**செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.**

55. மோனநிலை எய்த

**மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது**
**அன்னாள், அகமகிழ் ஆனந்தவல்லி, அருமறைக்கு**
**முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதன்னை**
**உன்னாது ஒழியினும்இ உன்னினும் வேண்டுவது ஒன்று இல்லையே.**

56. யாவரையும் வசீகரிக்கும் ஆற்றல் உண்டாக

**ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலம் எங்குமாய்**
**நின்றாள்இ அனைத்தையும் நீங்கி நிற்பாள்என்தன் நெஞ்சினுள்ளே**
**பொன்றாது நின்று புரிகின்றவா, இப்பொருள் அறிவார்**
**அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.**

57. வறுமை ஒழிய

**ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்**
**உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்**
**செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்**
**மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே.**

58. மனஅமைதி பெற

**அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்**
**தருணாம் புயத்தும் முலைத்தையல் நல்லாள், தகை சேர்நயனக்**
**கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்,**
**சரணாம் புயமும் அல்லாற் கண்டிலேன் ஒருதஞ்சமுமே.**

59. பிள்ளைகள் நல்லவர்களாக வளர

**தஞ்சம் பிறதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே**
**நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒன்றை, நீள்சிலையும்**
**அஞ்சும் அம்பும் மிக்கலராக நின்றாய், அறியார் எனினும்**
**பஞ்சு அஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.**

60. மெய்யுணர்வு பெற

**பாலினும் சொல் இனியாய்! பனி மாமலர்ப்பாதம் வைக்க**
**மாலினும் தேவர் வணங்கநின்றோன் கொன்றை வார்சடையின்**
**மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு**
**நாலினும் சாலநன்றோ அடியேன் முடைநாய்த்தலையே?**

61. மாயையை வெல்ல

**நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்துவந்து**
**நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்**
**பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்?**
**தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே.**

62. எத்தகைய அச்சமும் அகல

**தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத**
**வெங்கண் கரிபுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்**
**கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி! கோகனகச்**
**செங்கைக் கரும்பும், அலரும் எப்போதும் என் சிந்தையதே.**

63. அறிவு தெளிவோடு இருக்க

**தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்**
**கூறும்பொருள் குன்றில்கொட்டும் தறிகுறிக்கும் சமயம்**
**ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்**
**வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே.**

64. பக்தி பெருக

**வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு**
**பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன், நின்புகழ்ச்சியன்றிப்**
**பேணேன், ஒருபொழுதும் திருமேனி பிரகாசமின்றிக்**
**காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே.**

65. ஆண்மகப்பேறு அடைய

**ககனமும், வானமும், புவனமும் காணவிற் காமன் அங்கம்**
**தகனம்முன் செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்**
**முகனும் முந்நான்கு இருமூன்றெனத் தோன்றிய மூதறிவின்**
**மகனும் உண்டாயது அன்றோ? வல்லி நீ செய்த வல்லபமே!**

66. கவிஞராக

**வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச்செம்**
**பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும் பொற்பொருப்பு**
**வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன்தொடுத்த**
**சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே.**

67. பகைவர்கள் அழிய

**தோத்திரம் செய்து, தொழுது, மின்போலும் நின் தோற்றம்ஒரு**
**மாத்திரைப் போதும் மனதில் வையாதவர் வண்மை, குலம்**
**கோத்திரம், கல்வி, குணம், குன்றி நாளும் குடில்கள்தொறும்**
**பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பாரெங்குமே.**

68. நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

**பாரும், புனலும், கனலும், வெங்காலும், படர்விசும்பும்,**
**ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்**
**சேரும் தலைவி, சிவகாமசுந்தரி சீரடிக்கே**
**சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே.**

69. சகல சௌபாக்கியங்களும் அடைய

**தனந்தரும், கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா**
**மனந்தரும், தெய்வ வடிவுந்தரும், நெஞ்சில் வஞ்சமில்லா**
**இனந்தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே**
**கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.**

70. நுண் கலைகளில் சித்தி பெற

**கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்**
**பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்**
**மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்**
**பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே.**

71. மனக்குறைகள் தீர

**அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி, அருமறைகள்**
**பழகிச் சிவந்த பதாம் புயத்தாள், பனி மாமதியின்**
**குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க**
**இழவுற்று நின்றுநெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே!**

72. பிறவிப் பிணி தீர

**என்குறை தீரநின்று ஏத்துகின்றேன், இனி யான் பிறக்கின்**
**நின்குறையே அன்றி யார் குறை காண், இரு நீள்விசும்பின்**
**மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்?**
**தன்குறை தீர எங்கோன் சடைமேல்வைத்த தாமரையே.**

73. குழந்தைப் பேறு உண்டாக

**தாமம் கடம்பு, படைபஞ்சபாணம், தனுக்கரும்பு,**
**யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது, எமக்கென்று வைத்த**
**சேமம் திருவடி, செங்கைகள் நான்கு, ஒளி செம்மை, அம்மை**
**நாமம் திரிபுரை, ஒன்றோடு இரண்டு நயனங்களே.**

74. தொழிலில் மேன்மை அடைய

**நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்**
**அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையப்**
**பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும், பாடவும்பொன்**
**சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.**

75. விதியை வெல்ல

**தங்குவர் கற்பகத் தருவின் நீழலில், தாயரின்றி**
**மங்குவர்இ மண்ணில் வழுவாப் பிறவியை, மால்வரையும்**
**பொங்குவர் அழியும்! ஈரேழ்புவனமும் பூத்த உந்திக்**
**கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.**

76. தனக்கு உரிமையானதைப் பெற

**குறித்தேன் மனத்தில் நின்கோலம் எல்லாம், நின் குறிப்பறிந்து**
**மறித்தேன் மறலிவருகின்ற நேர்வழி, வண்டுகிண்டி**
**வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்**
**பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.**

77. பகை அச்சம் நீங்க

**பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர்**
**உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா**
**வயிரவி, மண்டலி, மாலினி, சூலி வராகி என்றே**
**செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.**

78. சகல செல்வங்களையும் அடைய

**செப்பும், கனக கலசமும் போலும் திருமுலைமேல்**
**அப்பும் களப அபிராமவல்லி! அணிதிரளக்**
**கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்**
**துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்என் துணைவிழிக்கே.**

79. கட்டுகளில் இருந்து விடுபட

**விழிக்கே அருளுண்டு, அபிராமவல்லிக்கு வேதம்சொன்ன**
**வழிக்கே வழிபட நெஞ்சுண்டு, எமக்கு அவ்வழி கிடக்கப்**
**பழிக்கே சுழன்று எம் பாவங்களே செய்து பாழ்நரகக்**
**குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினியே.**

80. பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட
**கூட்டியவா! என்னைத் தன் அடியாரில் கொடியவினை**
**ஒட்டியவா! எண்கண் ஒடியவா! தன்னை உள்ளவண்ணம்**
**காட்டியவா! கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!**
**ஆட்டியவா நடம் ஆடகத்தாமரை ஆரணங்கே.**

81. நன்னடத்தை உண்டாக
**அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்**
**வணங்கேன், ஒருவரை வாழ்த்துகிலேன், நெஞ்சில் வஞ்சகரோடு**
**இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்**
**பிணங்கேன், அறிவொன்றிலேன் எண்கண் நீவைத்த பேரளியே.**

82. மன ஒருமைப்பாடு அடைய
**அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்**
**ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்**
**களியாகி, அந்தக்கரணங்கள் விம்மி, கரைபுரண்டு,**
**வெளியாய்விடின், எங்ஙனே மறப்பேன் நின்விரகினையேன்.**

83. ஏவலர் பலர் உண்டாக
**விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக்கமலம்**
**இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்**
**பரவும் பதமும், அயிராவதமும், பகீரதியும்**
**உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே.**

84. சங்கடங்கள் தீர
**உடையாளை, ஒல்கு செம்பட்டு உடையாளை, ஒளிர்மதிசெஞ்**
**சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை, தயங்குநுண்ணூல்**
**இடையாளை, எங்கள்பெம்மான் இடையாளை, இங்கு என்னை இனிப்**
**படையாளை, உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.**

85. துன்பங்கள் நீங்க
**பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு**
**ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும் என் அல்லல்எல்லாம்**
**தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்,**
**வார்க்குங்கும முலையும், முலைமேல் முத்துமாலையுமே.**

86. ஆயுத பயம் நீங்க
**மாலயன் தேட, மறைதேட, வானவர் தேட, நின்ற**
**காலையும், சூடகக் கையையும், கொண்டு, கதித்தகப்பு**
**வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில்கண்டாய்**
**பாலையும் தேனையும், பாகையும் போலும் பணிமொழியே.**

87. செயற்கரிய செய்து புகழ் பெற

**மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்தன்**
**விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்! விழியால் மதனை**
**அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்**
**பழிக்கும் படி ஒருபாகம் கொண்டாளும் பராபரையே.**

88. எப்போதும் அம்பிகை அருள் பெற

**பரம் என்று உனை அடைந்தேன் தமியேனும், உன் பக்தருக்குள்**
**தரம் அன்று இவன்என்று தள்ளத்தகாது, தரியலர் தம்**
**புரம்அன்று எரியப் பொருப்புவில்வாங்கிய போதில் அயன்**
**சிரம் ஒன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே!**

89. யோக சித்தி பெற

**சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்**
**துறக்கம் தரும், நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற**
**உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உறவற்ற, அறிவு**
**மறக்கும் பொழுது, என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.**

90. கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க

**வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்துபுதுந்து**
**இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்**
**பொருந்தாது ஒருபொருள் இல்லை, விண்மேவும் புலவருக்கு**
**விருந்தாக, வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.**

91. அரசாங்கச் செயலில் வெற்றி பெற

**மெல்லிய நுண் இடைமின் அனையாளை, விரிசடையோன்**
**புல்லிய மென்முலை பொன் அனையாளைப் புகழ்ந்துமறை**
**சொல்லிய வண்ணம் தொழும்அடியாரைத் தொழுமவர்க்குப்**
**பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.**

92. மனநிலை பக்குவமடைய

**பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம் பற்றி, உன்தன்**
**இதத்தே ஒழுக அடிமைகொண்டாய், இனியான் ஒருவர்**
**மதத்தே மதிமயங்கேன், அவர் போன வழியும் செல்லேன்,**
**முதல்தேவர் மூவரும், யாவரும் போற்றும் முகிழ்நகையே.**

93. உள்ளத்தில் ஒளி உண்டாக

**நகையே இஃதிந்த ஞாலம் எல்லாம்பெற்ற நாயகிக்கு**
**முகையே முகிழ்முலை, மானே முதுகண், முடிவில் அந்த**
**வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்**
**மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.**

94. மனநிலை தூய்மையாக
**விரும்பித் தொழும் அடியார்இ விழிநீர்மல்கி மெய்புளகம்**
**அரும்பிஇ ததும்பிய ஆனந்தமாகி, அறிவிழந்து,**
**சுரும்பிற் களித்து மொழி தடுமாறி, முன் சொன்னஎல்லாம்**
**தரும்பித்தர் ஆவரென்றால், அபிராமி சமயம் நன்றே.**

95. மன உறுதி பெற
**நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது**
**ஒன்றேயும் இல்லை, உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்**
**அன்றே உனதென்று அளித்து விட்டேன், அழியாத குணக்**
**குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!**

96. எங்கும் பெருமை பெற
**கோமள வல்லியை அல்லியம் தாமரைக்கோயில் வைகும்**
**யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய**
**சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்**
**ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.**

97. புகழும் அறமும் வளர
**ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்**
**போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,**
**காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்**
**சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.**

98. வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற
**தைவந்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்**
**கைவந்த தீயும்இ தலைவந்த ஆறும் கரந்தது எங்கே?**
**மெய்வந்த நெஞ்சில் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்**
**பொய்வந்த நெஞ்சில் புக அறியா மடப் பூங்குயிலே.**

99. அருள் உணர்வு வளர
**குயிலாய் இருக்கும் கடம்படாவியிடை, கோல இயல்**
**மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை, வந்துதித்த**
**வெயிலாய் இருக்கும் விசும்பில், கமலத்தின் மீது அன்னமாம்**
**கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.**

100. அம்பிகையை மனத்தில் காண
**குழையைத் தழுவிய ஒன்றை அம்தார் கமழ் கொங்கைவல்லி**
**கழையைப் பொருத திருநெடுந்தோளும், கரும்புவில்லும்**
**விழையப்பொருதிறல்வேரி அம்பாணமும், வெண்ணகையும்,**
**உழையப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே.**

**101. நூற்பயன்**

**ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை, அண்டம் எல்லாம்**
**பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளை, புவிஅடங்காக்**
**காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும், கரும்பும், அங்கை**
**சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே...**

**கலையாத கல்வியும்**

**கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வாராத நட்பும்**
**கன்றாத வளமையும் குன்றாத இளமையும் கழுபிணியிலாத உடலும்**
**சலியாத மனமும் அன்பகலாத மனைவியும் தவறாத சந்தானமும்**
**தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும் தடைகள் வாராத கொடையும்**
**தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு துன்பமில்லாத வாழ்வும்**
**துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய்**
**அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே ஆதிகடவூரின் வாழ்வே!**
**அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி அருள்வாமி! அபிராமியே!**

## சகலகலாவல்லி மாலை

**1) வெண் தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்க என்வெள்ளை உள்ளத்**
**தண் தாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும்அளித்து**
**உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்**
**கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.**

**2) நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்**
**பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்கயாசனத்தில்**
**கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்**
**காடும் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே.**

**3) அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்அமுது ஆர்ந்துஉன் அருள்கடலில்**
**குளிக்கும் படிக்குஎன்று கூடும்கொ லோஉளம் கொண்டுதெள்ளித்**
**தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு**
**களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே.**

**4) தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்**
**வாக்கும் பெருகப் பணித்து அருள்வாய் வடநூல் கடலும்**
**தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று**
**காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே.**

5) பஞ்சுஅப்பு இதம்தரு செய்ய பொற்பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே நெடுந் தாள் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்து அவிசு ஒத்து இருந்தாய் சகல கலாவல்லியே.

6) பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிதுஎய்த நல்காய்! எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்! சகலகலாவல்லியே!

7) பாட்டும் பொருளும் பொருளால்பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின்கடைக்கண் நல்காய்! உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே! சகலகலாவல்லியே!

8) சொல் விற்பனமும் அவதானமும் கவி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளின ஆசனம்சேர்
செல்விக்கு அரிதுஎன்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

9) சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்ஞானத்தின் தோற்றம்என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்? நிலம்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே! சகலகலா வல்லியே!

10) மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய்! படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ? சகலகலாவல்லியே!

## கௌரிக் காப்புத் தோத்திரம்

### காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

வேண்டுதற் கூறு:

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்

பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்

காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே

அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்

சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே

வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு

வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா

வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா

பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா

வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா

பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே

எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு ந்ல்லதெல்லாம் பெருகிவரும்

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று

ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்

ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே

காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு

சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே

அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர

தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

## சிவலிங்க அட்டகம் (லிங்காஷ்டகம்)

நான்முகன் திருமால் பூசைசெய் லிங்கம்
தூயசொல் புகழ்பெரும் பேரெழில் லிங்கம்
பிறவிப் பெருந்துயர் போக்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்

காமனை எரித்த பேரருள் லிங்கம்
ராவணன் கர்வம் அடக்கிய லிங்கம்
வழிவழி முனிவர்கள் வழிபடும் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்

திவ்யமனம் பல கமழ்கின்ற லிங்கம்
சித்தம் தெளிவிக்கும் சித்தர்கள் லிங்கம்
தேவரும் அசுரரும் வணங்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்

படம் எடுத்தாடும் பாம்பணி லிங்கம்
கனகமின் நவமணிகள் ஒளித்திடும் லிங்கம்
தட்சனின் யாகத்தை அழித்திட்ட லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்

குங்குமம் சந்தனம் பொலிந்திடும் லிங்கம்
பங்கய மலர்களை சூடிடும் லிங்கம்
வந்ததோர் பாவத்தை போக்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்
அமர கணங்கள் போற்றிடும் லிங்கம்
அன்பர்கள் பக்தியை ஏற்றிடும் லிங்கம்
கதிரவன் கோடி சுடர்மிகு லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்

சிற்றிதழ் மலரினை சூட்டிடும் லிங்கம்
எல்லா பிறப்பிற்கும் காரண லிங்கம்
அஷ்ட தரித்திரம் அகற்றிடும் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்

சுரரவர் குருவிடம் தொழுதிடும் லிங்கம்
நிரந்தரம் வானத்து மலர்நிறை லிங்கம்
அனைத்திற்கும் மேன்படு பரம்பொருள் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்

## ஐயப்பன் பாடல்கள்

அருட்பாடல் – 1

ஓங்கார நாதம் உயர்வான வேதம்
தேனான கீதம் சாஸ்தா உன் நாமம் (ஓங்கார)

ஒருகோடி தீபம் ஒளிவீசும் கோலம்
அருளாகத் தோன்றும் ஐயா உன் ரூபம்
பனிதூவும் மாதம் மணிமாலை போடும்
மனம் யாவும் பாடும் தேவா உன்கோசம் (ஓங்கார)

பம்பாவின் நீரில் பிணியாவும் தீரும்
படியேறும் போதே நலம் கோடி சேரும்
மலையெங்கும் வீசும் அபிஷேக வாசம்
மனைவாழச் செய்யும் மணிகண்ட கோசம் (ஓங்கார)

காலங்கள் தோறும் உன் நாமம் பாடும்
மனமொன்று போதும் வேறென்ன வேண்டும்
இல்லங்கள் தோறும் நீ தானே தெய்வம்
என்றென்றும் சொல்வோம் சாஸ்தா உன் சரணம் (ஓங்கார)

அருட்பாடல் – 2

**பகவான் சரணம் பகவதி சரணம் பாடி நடப்போம் ஐயப்பா**
**கரிகர புத்திரன் திருவடி சரணம் தேடி நடப்போம் ஐயப்பா**
**இரவும் பகலும் இருமுடி சுமந்து மலையில் நடப்போம் ஐயப்பா**
**அகமும் முகமும் நகை வரை நடந்து அருளில் மிதப்போம் ஐயப்பா**
**(பகவான் சரணம்)**

**கார்த்திகை மாதம் மார்கழி மாதம் கடுகி நடப்போம் ஐயப்பா**
**குங்குமப் பொட்டு சந்தனப் பொட்டு கொண்டு நடப்போம் ஐயப்பா**
**தீம்தக்கத்தோம் தோம் தீம்தக்கத்தோம் ஆடி நடப்போம் ஐயப்பா**
**தீம்தக்கத்தோம் தோம் தீம்தக்கத்தோம் ஆடி நடப்போம் ஐயப்பா (பகவான் சரணம்)**

**பந்தளராயன் பம்பையின் பாலன் பாதை வருவான் ஐயப்பா**
**வன்புலி ஏறும் அம்புலி ஈசன் வாழ்வு கொடுப்பான் ஐயப்பா**
**சற்குருநாதன் சங்கரநாதன் சந்ததி காப்பான் ஐயப்பா**
**தீம்தக்கத்தோம் தோம் தீம்தக்கத்தோம் ஆடி நடப்போம் ஐயப்பா**
**(பகவான் சரணம்)**

**மண்டல பூசை மணிகண்டன் பூசை கண்டு துதிப்போம் ஐயப்பா**
**மாலை அணிந்து ஆலயம் வந்து மலர்கள் படைப்போம் ஐயப்பா**
**கூட்டங்கள் கூடி வேட்டைகள் ஆடி கூவி அழைப்போம் ஐயப்பா**
**தீம்தக்கத்தோம் தோம் தீம்தக்கத்தோம் ஆடி நடப்போம் ஐயப்பா**
**(பகவான் சரணம்).**

அருட்பாடல் – 3

**சாமியே சரணம் ஐயா**
**தர்ம சாஸ்தாவே சரணம் ஐயா**
**அனுதினம் பூயை செய்தோம் - உமக்கு**
**அனந்த கோடி நமஸ்காரம் (சாமியே)**

**வன்புலியின் மீதினிலே ஏறி**
**வீர மணிகண்டனே வா**
**உன் வீர விளையாடல்களைப் பாட**
**வாணி தடை கூறவில்லை (சாமியே)**

**கொஞ்சிக் கொஞ்சிப் பேசுமுந்தன்**
**பிஞ்சு மொழி கேட்டிடவே**
**அந்த பந்தளத்தோன் நெய்த தவம்**
**இந்தப் பாமரன் நான் செய்யவில்லையா? (சாமியே)**

**பாலெடுக்க புலியெதற்கோ - உன்**
**பார்வையென்ன சக்தியற்றதோ - உன்**
**பார்வையொன்றே போதுமய்யா - என் மேல்**
**பால் பொழிய வேண்டுமைய்யா** **(சாமியே)**

**சாமியே சரணம் ஐயா**

**தர்ம சாஸ்தாவே சரணம் ஐயா**
**அனுதினம் பூயை செய்தோம் - உமக்கு**
**அனந்த கோடி நமஸ்காரம் நமஸ்காரம்.**

அருட்பாடல் – 4

**இருமுடி தாங்கி ஒரு மனதாகி குருவெனவே வந்தோம்**
**இருவினைத் தீர்க்கும் அந்த எமனையும் வெல்லும்**
**திருவடியைக் காண வந்தோம்**

**பள்ளிக் கட்டு** **சபரிமலைக்கு**
**கல்லும் முள்ளும்** **காலுக்கு மெத்தை**
**சுவாமியே ஐயப்போ** **சுவாமியே ஐயப்போ**
**சுவாமி சரணம் ஐயப்ப சரணம்!** **சுவாமி சரணம் ஐயப்ப சரணம்!**

**நெய் அபிஷேகம் சுவாமிக்கே** **கற்பூர தீபம் சுவாமிக்கே**
**ஐயப்பன் மார்களும் கூடி கொண்டு** **ஐயனை நாடி சென்றிடுவார்**
**சபரி மலைக்கு சென்றிடுவார்**
**சுவாமியே ஐயப்போ** **ஐயப்போ சுவாமியே!**
**சுவாமியே ஐயப்போ** **ஐயப்போ சுவாமியே!**

**கார்த்திகை மாதம் மாலை அணிந்து** **நேர்த்தியாகவே விரதம் இருந்து**
**பார்த்த சாரதியின் மைந்தனே**
**உனைப் பார்க்க வேண்டியே தவம் இருந்து**
**பார்த்த சாரதியின் மைந்தனே**
**உனைப் பார்க்க வேண்டியே தவம் இருந்து**

**இருமுடி எடுத்து எரிமேலி வந்து ஒரு மனதாகிப் பேட்டைத் துள்ளி**
**அருமை நண்பராம் வாவரை தொழுது ஐயனின் அருள் மலை ஏறிடுவார்**
**சுவாமியே ஐயப்போ** **ஐயப்போ சுவாமியே!**

அழுதை ஏற்றம் ஏறும் போது ஹரிஹரன் மகனை துதித்து செல்வார்
வழி காட்டிடவே வந்திடுவார் ஐயன் வன்புலி ஏறி வந்திடுவார்

கரிமலை ஏற்றம் கடினம் கடினம் கருணை கடலும் துணை வருவார்
கரிமலை இறக்கம் வந்த உடனே திருநதி பம்பையை கண்டிடுவார்
சுவாமியே ஐயப்போ ஐயப்போ சுவாமியே!

கங்கை நதிப் போல் புண்ணிய நதியாம் பம்பையில் நீராடி
சங்கரன் மகனை கும்பிடுவார் சஞ்சலமின்றி ஏறிடுவார்
நீலிமலை ஏற்றம் சிவ பாலனும் ஏற்றிடுவார்
காலமெல்லாம் நமக்கே அருட் காவலனாய் இருப்பார்

தேக பலம் தா பாத பலம் தா
தேக பலம் தா பாத பலம் தா
தேக பலம் தா என்றால் அவரும் தேகத்தை தந்திடுவார்
பாத பலம் தா என்றால் அவரும் பாதத்தை தந்திடுவார்
நல்ல பாதையைக் காட்டிடுவார்
சுவாமியே ஐயப்போ ஐயப்போ சுவாமியே!

சபரி பீடமே வந்திடுவார் சபரி
அன்னையை பணிந்திடுவார்
சரங்குத்தி ஆளில் கன்னி மார்களும்
சரத்தினைப் போட்டு வணங்கிடுவார்
சபரி மலைதனில் நெருங்கிடுவார்

ஆந்த பதினெட்டு படி மீது ஏறிடுவார்
கதியென்று அவனை சரணடைவார்
மதி முகம் கண்டே மயங்கிடுவார்
ஐயனைத் துதிக்கையிலே
தன்னையே மறந்திடுவார்

பள்ளிக் கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
சுவாமியே ஐயப்போ
ஐயப்போ சுவாமியே!

அருட்பாடல் – 5

**பொய்யின்றி மெய்யோடு நெய் கொண்டு போனால்**
**ஐயனை நீ காணலாம் சபரியில் ஐயனை நீ காணலாம்**
**ஐயப்பா சுவாமி ஐயப்பா**
**ஐயப்பா சரணம் ஐயப்பா!**

**அவனை நாடு அவன் புகழ் பாடு**
**புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்**
**உன்னை புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்**
**இருப்பது காடு வணங்குது நாடு**
**அவனைக் காண தேவை பண்பாடு**
**ஐயப்பா சுவாமி ஐயப்பா**
**ஐயப்பா சரணம் ஐயப்பா!**

**பூஜைகள் போடு தூய அன்போடு**
**பெயரோடு வாழ வைப்பான் ஐயப்பன்**
**நல்ல பெயரோடு வாழ வைப்பான் ஐயப்பன்**
**அனைவரும் வாருங்கள் ஐயனை நாடுங்கள்**
**அருள் வேண்டும் அன்பரை எல்லாம் வாழ வைப்பான்**
**ஐயப்பா சுவாமி ஐயப்பா**
**ஐயப்பா சரணம் ஐயப்பா!**

**பொய்யின்றி மெய்யோடு நெய் கொண்டு போனால்**
**ஐயனை நீ காணலாம் சபரியில் ஐயனை நீ காணலாம்**
**ஐயப்பா சுவாமி ஐயப்பா**
**ஐயப்பா சரணம் ஐயப்பா! சரணம் ஐயப்பா!**

அருட்பாடல் – 6 **கரிவராசனம் (ஹறிவராசனம்) - தமிழில்**

**அகிலம் யாவைக்கும் இன்பம் தருபவன்**
**அரிய ஆசனம் மீது அமர்ந்தவன்**
**அருணன் தொழுபவன் ஆடிக் களிப்பவன்**
**ஹரிஹரன் மகனே தஞ்சம் ஆகினேன்**

**சரண கோசத்தில் மனமும் குளிர்பவன்**
**தரணி ஆள்பவன் நாடிய காதலன்**
**பூத நாயகன் ஜொலிக்கும் சூரியன்**
**ஹரிஹரன் மகனே தஞ்சம் ஆகினேன்**

சத்யநாதனின் பாச நாயகன்
கேட்டதைத் தரும் வள்ளலானவன்
பிரணவமானவன் பாடல்கள் பிரியன்
ஹரிஹரன் மகனே தஞ்சம் ஆகினேன்
வேதம் போற்றிடும் அழகு சுந்தரன்
கீதம் விரும்பிடும் குதிரை வாகனன்
தண்டம் ஏந்திடும் குரு கிருபாகரன்
ஹரிஹரன் மகனே தஞ்சம் ஆகினேன்

மூன்று லோகமும் வணங்கும் மோகனன்
மூன்று கண்ணினன் தேவர் தொழுபவன்
வரமளிப்பவன் உயிர் ஜீவனானவன்
ஹரிஹரன் மகனே தஞ்சம் ஆகினேன்

பிறவி பயத்தினை களையும் நாயகன்
புவன மோகனன் யானை ஊர்வலன்
தந்தையானவன் திருநீறு தரிப்பவன்
ஹரிஹரன் மகனே தஞ்சம் ஆகினேன்

மதுர புன்னகை பூக்கும் திருமுகன்
குதிரை, சிங்கமும், யானை வாகனன்
மென்மை மேனியன் மயக்கும் பாலகன்
ஹரிஹரன் மகனே தஞ்சம் ஆகினேன்

போற்றும் மறைகளை சூடிக் கொண்டவன்
சாது ஜனங்களின் வாழ்வும் ஆனவன்
கானம் பிடித்தவன் வாஞ்சை யானவன்
ஹரிஹரன் மகனே தஞ்சம் ஆகினேன்

சரணம் ஐயப்பா! சுவாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா! சுவாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா! சுவாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா! சுவாமி சரணம் ஐயப்பா!

அருட்பாடல் – 7 உனை தெய்வம் என்பதா

**உனை தெய்வம் என்பதா**
**குருநாதன் என்பதா**
**எனை பார்த்து பார்த்து வளர்ப்பதனால்**
**அன்னை என்பதா**
**உன்னைக் கடவுள் என்பதா**
**கருணை வடிவம் என்பதா**
**ஐயா ஞான தானம் தந்த உன்னைத்**
**தந்தை என்பதா. (உ).**
**சேரும் செல்வமெல்லாம் உன் அருளன்றோ**
**பாடும் பாடல் எல்லாம் உன் நினைவன்றோ**
**எந்த நேரமும் உன் நினைவன்றோ**
**எந்தன் குடும்பமே உன்னை மறக்குமா**
**ஒவ்வொரு அரிசியிலும் உன் முகமன்றோ**
**சாமி முருகையா சரணம் முருகையா**
**நீ இருக்கின்றாய் அது போதும்**
**சில நேரம் உன்னை நினைக்கும் போது**
**கண் கலங்குதப்பா. (உ).**
**வாழ்க்கை படகு ஆடி ஓடுகின்றதே**
**போகும் பயணம் எங்கே? நானறியேனே**
**கரையை பார்க்கின்றேன் எதுவும் தெரியல**
**கடலைப் பார்க்கிறேன் அலையும் அடங்கல**
**உன்னைத் தவிர எனக்கு வேறு துணையில்லை**
**சாமிமுருகையா சரணம் முருகையா**
**சகலமும் எனக்கு பழனிதானப்பா**
**என் உயிரில் கலந்து நாவில் புரளும்**
**எங்கள் முருகையா**

அருட்பாடல் – 8 வில்லாளி வீரனே...

**சரணம் சொல்லி கூப்பிடுவோம் அந்த சபரி மலை வாசனை**
**வரணும் என்று அழைத்திடுவோம் வரம் கொடுக்கும் ஈசனை**

**அருளைத் தரும் ஆண்டவனை அன்பருக்கு மித்திரனை**
**சிரம் தாழ்த்தி வணங்கிடுவோம் ஹரிஹர சுதன் ஐயப்பனை**

**வில்லாளி வீரனே... வீரமணிகண்டனே...**
**தமிழ் சொல்லெடுத்து பாடுவோம்... சுந்தரேசன் மைந்தனை...**

சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (2)

சபரிமலை செல்பவர்க்கு சஞ்சலங்கள் இல்லை
சபரிமலை செல்பவர்க்கு சஞ்சலங்கள் இல்லை
பயம் தனையே போக்கிடுவான் பந்தளனின் பிள்ளை
அபயம் என்று சரணடைந்தால் அகன்றிடுமே தொல்லை
அவனன்றி அவனியிலே அணுவும் அசைவதில்லை

வீட்டை விட்டு கட்டும் கட்டி அருள்மலை புறப்படுவோம்
கூட்டுச் சரணம் போட்டு எருமேலிப் பேட்டை செல்லுவோம் (2)
சுவாமியே.... சரணம் ஐயப்பா

பேட்டைத் துள்ளி ஆடும்போது பேரின்பம் கொள்வோம்
சாமி திந்தக்கதோம் ஐயப்ப திந்தக்கதோம் (2)

பேட்டை துள்ளி ஆடும்போது பேரின்பம் கொள்வோம்
கோட்டை காவலன் வாவரு சாமியை - கொண்டாடி மகிழ்வோம்
நாம கொண்டாடி மகிழ்வோம்
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (2)

சீர்மேவும் சபரிமலை நாதனருள் தேடு சீர்மேவும் சபரிமலை நாதனருள் தேடு
ஈரொன்பது படியேறி ஈசன்பதம் நாடு

பாரெல்லாம் காத்து நிற்கும் பரமனின் திருவீடு
பாரெல்லாம் காத்து நிற்கும் பரமனின் திருவீடு
நாராயணன் செல்வனையே நாவினிக்கப்பாடு
அந்த நாராயணன் செல்வன் ஐயப்பனையே நீ நாவினிக்கப்பாட

வில்லாளி வீரனே... வீரமணிகண்டனே...
தமிழ் சொல்லெடுத்து பாடுவோம்... சுந்தரேசன் மைந்தனை...
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (5)
சரணம் சரணம் ஐயப்பா

அருட்பாடல் – 9     பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்

**பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார்**

**அச்சன் கோவில் அரசனாகி**
**ஆனந்த ரூபனாகி அன்பர்களைக் காத்திடவே**
**ஐயன் பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார்**

**ஆதிசக்தி மைந்தனாகி ஆரியங்கா ஐயனாகி**
**ஆபத்தைத் தவிர்த்திடவே ஐயன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார்**

**எரிமேலி சாஸ்தாவாகி அங்க்கள் குல தெய்வமாகி**
**ஏழைகளைக் காத்திடவே ஐயன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார்**

**ஐயங்க்கரனின் தம்பியாகி ஐயப்ப தெய்வமாகி**
**ஐயன்களைத் தீர்த்திடவே ஐயன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார்**

**சுவாமியே சரணம் சரணம் சரணம், ஐயப்ப சரணம் சரணம் சரணம்**
**சுவாமியே சரணம் சரணம் சரணம், சரணம் சரணம் ஐயப்பா (2)**

**ஊதும்பாறைக் கோட்டையாகி ஊரல்குழி தீர்த்தமாகி**
**உலகத்தைக் காத்திடவே ஐயன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார்**

**குளத்தூரில் பாலனாகி குன்றின் மீது அமர்ந்துகொண்டு**
**குற்றங்களை பொறுத்திடவே ஐயன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்**
**பொன்னூஞ்சல் ஆடுகிறார்**

கம்பங்குடி உடமையாகி காந்தமலை ஜோதியாகி
கன்னிமாரைக் காத்திடவே.... ஐயன்
பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்
பொன்னூஞ்சல் ஆடுகிறார்

பந்தளத்து செல்வனாகி பம்பா நதி தீர்த்தமாகி
பக்தர்களைக் காத்திடவே ஐயன்
பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்
பொன்னூஞ்சல் ஆடுகிறார்

சுவாமியே சரணம் சரணம் சரணம், ஐயப்ப சரணம் சரணம் சரணம்
சுவாமியே சரணம் சரணம் சரணம், சரணம் சரணம் ஐயப்பா (2)

கற்பூர பிரியனாகி கலியுக வரதனாகி
கண்திறந்து பார்த்திடவே ஐயன்
பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்
பொன்னூஞ்சல் ஆடுகிறார்

சபரிகிரி ஈசனாகி சாந்த ஸ்வரூபனாகி
சந்ததியைக் காத்திடவே ... ஐயன்
பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்
பொன்னூஞ்சல் ஆடுகிறார் சாமியே.....

சுவாமியே சரணம் சரணம் சரணம், ஐயப்ப சரணம் சரணம் சரணம்
சுவாமியே சரணம் சரணம் சரணம், சரணம் சரணம் ஐயப்பா (2)
பகவான் சரணம் பகவதி சரணம்
தேவன் சரணம் தேவி சரணம்
ஈஸ்வரன் சரணம் நாரணன் சரணம்
சரணம் சரணம் ஐயப்பா

சுவாமியே சரணம் சரணம் சரணம், ஐயப்ப சரணம் சரணம் சரணம்
சுவாமியே சரணம் சரணம் சரணம், சரணம் சரணம் ஐயப்பா

பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன்
பொன்னூஞ்சல் ஆடுகிறார்

அருட்பாடல் 10 சபரிமலை ஐயப்பன் 18 படி பாடல்:

ஒன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா - என்ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

நான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

ஐந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

ஆறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

ஏழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

எட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

ஒன்பதாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

பத்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

பதினொன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா
பன்னிரெண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

பதின்மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

பதினான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

பதினைந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

பதினாறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

பதினேழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

பதினெட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

படி பதினெட்டும் சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா

படி தொட்டு வந்தனம் சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா என் ஐயனே பொன் ஐயப்பா

சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா
ஐயப்பா சரணம், சரணம் பொன் ஐயப்பா
சாமி பொன் ஐயப்பா

ஐயனே பொன் ஐயப்பா
சாமி அல்லாதொரு சரணம் இல்லையப்பா

சுவாமியே சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் ஐயப்பா

## எந்த மலை சேவித்தாலும் பஜனை பாடல்..

ஸ்ரீ வீர தேவர் அகிலமும் ஓம் காரமாய் விளங்க ஸ்ரீ சபகிரீஸ்வரராய் மணிப்பீடத்தில்
ஐயப்பா...கண்டம் இடறி என்னை நீ தொண்டனாய் பாடவைப்பாய் நம்பினவர்க்
ஆதரவுற்றருளும் ஐயனே ஐயனே ஐயனே ஐயன் ஐயப்பனே சரணம் ஐயப்பா...

எந்த மலை சேவித்தாலும் தங்கமலை வைபோகம் எங்கயும் நான்
கண்டதில்லையே ஐயப்பா எங்கயும் நான் கண்டதில்லையே
எந்த மலை சேவித்தாலும் சபரிமலை வைபோகம் எங்கயும் நான்
கண்டதில்லையே ஐயப்பாஎங்கயும் நான் கண்டதில்லையே

கோடி சூரியன் உதிக்கும் மலைகோமலாங்கன் வாழும் மலைகோடி
ஜனங்கள் வருகும் மலைகுளத்தூர் ஐயன் வாழும் மலை
பாரில் உள்ளோரெல்லாம் புகழும் மலைபரவசத்தை கொடுக்கும்
மலைபாவ வினைகளை தீர்க்கும் மலைபம்பா பாலன் வாழும் மலை

சபரிநாயகா சரணம் சரணம் என்று உருகி ஒருமுறை கூறினால்
சகல வினைகளும், சகல குறைகளும், சகல பிணிகளும் அகலுமாம்
மதகஜானனா குக சகோதரா வருக வருக என வாழ்த்தினால்
மதகஜானனா குக சகோதரா வருக வருக வருக என வாழ்த்தினால்
மனமகிழ்ந்து முன் வந்து நின்று அருள் தந்து நேர் வழி காட்டுவார்

சுவாமியே சரணம் சுவாமியே சரணம் சுவாமியே சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் சுவாமியே சரணம் சுவாமியே சரணம் ஐயப்பா
சுவாமியே............. சரணம் ஐயப்பா

## தேடுகின்ற கண்களுக்குள்

தேடுகின்ற கண்களுக்குள் ஓடிவரும் சுவாமி
திருவிளக்கின் ஒளியினிலே குடியிருக்கும் சுவாமி (2)

வாடுகின்ற ஏழைகளின் வறுமை தீர்க்கும் சுவாமி
வஞ்சமில்லா நல்லவர்க்கு அருள் புரியும் சுவாமி

ஐயப்ப சுவாமி அருள்புரி சுவாமி (2)

கண்ணனும் நீ கணபதி நீ கந்தனும் நீயே-எங்கள்
காவல் தெய்வம் பரமசிவன் விஷ்ணுவும் நீயே (2)

அண்டமெல்லாம் காத்தருளும் சக்தியும் நீயே-என்மேல்
அன்பு வைத்து நதி வரைக்கும் ஓடிவந்தாயே
ஐயப்பா சுவாமி இன்னும் அருள்புரி சுவாமி (தேடு)

தந்தையுண்டு அன்னையுண்டு எந்தன் மனையிலே- ஒரு
தம்பி மட்டும் பிறக்க வேண்டும் உந்தன் வடிவிலே (2)

அன்புகொண்டு தந்தைக்கவன்செய்யும் பணியிலே-நாங்கள்
ஆண்டுதோறும் வந்து நிற்போம் உந்தன் நிழலிலே
ஐயப்ப சுவாமி இன்னும் அருள்புரி சுவாமி (தேடு).

மோகினி தந்த மன மோகனா நீயே
மோகினி தந்த மன மோகனா நீயே
மாமலையில் சிரிக்கின்ற மாமணி நீயே
ஐயப்பா (2)

மாதவத்தோர் வணங்கிடும் மங்களம் நீயே
மகிசியாரின் சாபம் தீர்த்த மன்னவன் நீயே
மனம் உருக சரணம் போட வருபவர் நீயே
மாதா பிதா குரு தெய்வம் எல்லாம் நீயே (2)
(மோகினி தந்த)

மழலையாக பம்பையில் பிறந்தவன் நீயே
மகிமையோடு பந்தளத்தில் வழந்தவர் நீயே
அரண்மனைக்கு புலியோடு வந்தவன் நீயே
அம்மாவின் நோய் தீர்த்துவைத்த ஆண்டவன் நீயே ஐயப்பா
(மோகினி தந்த)

கரைகாண முடியாத வேதம் நீதானே
கலியுகத்தில் கண் கண்ட தேவன் நீதானே
குருமணியாய் குன்றில் மீது நீ இருந்தாயே
பொல்லாமனம் நீயாய் என்றும் உருகுது உன்னாலே
ஐய்யப்பா
(மோகினி தந்த)

திருமாள் அருட்பாடல் – I பச்சை மாமலைபோல் மேனி

பச்சை மாமலைபோல் மேனி
பவள வாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர்றே
ஆயர் தம் கொழுந்தே என்னும்
பச்சை மாமலைபோல் மேனி
பவள வாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர்றே
ஆயர் தம் கொழுந்தே என்னும்

இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோகம் ஆளும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர் உளானே

ஊரிலேன் காணி இல்லை
உறவு மற்று ஒருவர் இல்லை
பாரில் நின் பாதம் மூலம்
பற்றிலேன் பரம மூர்த்தி

ஊரிலேன் காணி இல்லை
உறவு மற்று ஒருவர் இல்லை
பாரில் நின் பாதம் மூலம்
பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ணனே
கண்ணனே கதறுகின்றேன்
காரொளி வண்ணனே
கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் கலைஞன் அம்மா
அரங்கமா நகர் உளானே.

திருமாள் அருட்பாடல் – 2 குறை ஒன்றும் இல்லை

**குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா**
**குறை ஒன்றும் இல்லை கண்ணா**
**குறை ஒன்றும் இல்லை கோவிந்தா**
**கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா**
**கண்ணுக்குத் தெரியாமல் நின்றாலும் எனக்கு**
**குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா**

**வேண்டியதைத் தந்திட வேங்கடேசன் நின்றிருக்க**
**வேண்டியது வேறில்லை மறைமூர்த்தி கண்ணா**
**மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா**
**திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா**
**திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா**
**உன்னை மறை ஓதும் ஞானியர் மட்டுமே காண்பார்**
**என்றாலும் குறை ஒன்றும் எனக்கில்லை கண்ணா**

**குன்றின் மேல் கல்லாகி நிற்கின்ற வரதா**
**குன்றின் மேல் கல்லாகி நிற்கின்ற வரதா**
**குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா**
**மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா**

**கல்லினார்க்கு இறங்கி கல்லிலே இறங்கி**
**நிலையாக கோவிலில் நிற்கின்றாய் கேசவா**
**நிலையாக கோவிலில் நிற்கின்றாய் கேசவா**
**குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா**

**யாதும் மறுக்காத மலையப்பா உன் மார்பில்**
**யாதும் மறுக்காத மலையப்பா உன் மார்பில்**
**ஏதும் தர நிற்கும் கருணைக் கடல் அன்னை**

**என்றும் இருந்திட ஏது குறை எனக்கு**
**குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா**
**மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா.**

**கண்ணா! கண்ணா! ஆனந்தக் கண்ணா!**
**கண்ணா! கண்ணா! ஆனந்தக் கண்ணா!**
**ஓடக்குழலும் கொண்டோடிவா கண்ணா!**
**தேவகி தந்ததோர் கண்மணிக் கண்ணா!**
**ஆனந்தக் கண்ணா! ஓடிவா கண்ணா!**

காளிய நர்த்தனம் செய்ததோர் கண்ணா
ஆனந்தக் கண்ணா ஓடிவா கண்ணா!
கோவர்த்தனகிரி தூக்கிய கண்ணா
ஆனந்தக் கண்ணா ஓடிவா கண்ணா!

கம்ஸனை நிக்ரகம் செய்ததோர் கண்ணா
ஆனந்தக் கண்ணா ஓடிவா கண்ணா!
பக்தரைப் பாலிக்கும் கண்ணா கண்ணா
ஆனந்தக் கண்ணா ஓடிவா கண்ணா!

| நட்சத்திரம் | | | விண்மீன் | |
|---|---|---|---|---|
| 1. | அசுபதி | Asupathi | புரவி | Puravi |
| 2. | பரணி | Bharani | அடுப்பு | Aṭuppu |
| 3. | கார்த்திகை | Karthikai | ஆரல் | Āral |
| 4. | ரோகிணி | Rohini | சகடு | Cakaṭu |
| 5. | மிருகசீரிடம் | Mrikasiridam | மான்றலை | Māṉṟalai |
| 6. | திருவாதிரை | Thiruvadhirai | மூதிரை | Mūtirai |
| 7. | புனர்பூசம் | Punaraphusam | கழை | Kaḻai |
| 8. | பூசம் | Pusam | கொடிறு | Koṭiṟu |
| 9. | ஆயில்யம் | Āyilyam | அரவு | Aravu |
| 10. | மகம் | Makam | கொடுநுகம் | Koṭunukam |
| 11. | பூரம் | Pooram | கணை | Kaṇai |
| 12. | உத்திரம் | Uttram | உத்தரம் | Uttaram |
| 13. | அத்தம் | Astam | கை | Kai |
| 14. | சித்திரை | Cittirai | அனுபை | Aṉupai |
| 15. | சுவாதி | Swati | விளக்கு | Viḷakku |
| 16. | விசாகம் | Vicākam | முறம் | Muṟam |
| 17. | அனுசம் | Aṉuṣam | பனை | Paṉai |
| 18. | கேட்டை | Kēṭṭai | துலங்கொலி | Tulaṅkoli |
| 19. | மூலம் | Mūlam | குருகு | Kuruku |
| 20. | பூராடம் | Pūrāṭam | முற்குலம் | Muṟkulam |
| 21. | உத்திராடம் | Uttirāṭam | கடைக்குலம் | Kaṭaikkulam |
| 22. | திருவோணம் | Tiruvōṇam | முக்கோல் | Mukkōl |
| 23. | அவிட்டம் | Aviṭṭam | காக்கை | Kākkai |
| 24. | சதயம் | Catayam | செக்கு | Cekku |
| 25. | பூரட்டாதி | Pūraṭṭāti | நாழி | Nāḻi |
| 26. | உத்திரட்டாதி | Uttiraṭṭāti | முரசு | Muracu |
| 27. | ரேவதி | Rēvati | தோணி | Thōṇi |

தமிழ் மாதம்

| | | |
|---|---|---|
| 1. சித்திரை - மேழம் | 2. வைகாசி-விடை | 3. ஆனி - ஆடவை |
| 4. ஆடி- கடகம் | 5. ஆவணி - மடங்கல் | 6.புரட்டாசி - கன்னி |
| 7. ஐப்பசி - துலை | 8. கார்த்திகை - நளி | 9. மார்கழி - சிலை |
| 10.தை -சுறவம் | 11. மாசி - கும்பம் | 12. பங்குனி - மீனம் |

**எண் வடிவங்கள்**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | ௰ |

**எண்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| ௧ = 1 | ௨ = 2 | ௩ = 3 | ௪ = 4 | ௫ = 5 |
| ௬ = 6 | ௭ = 7 | ௮ = 8 | ௯ = 9 | ௰ = 10 |
| ௰௧ = 11 | ௰௨ = 12 | ௰௩ = 13 | ௰௪ = 14 | ௰௫ = 15 |
| ௰௬= 16 | ௰௭ = 17 | ௰௮ = 18 | ௰௯ = 19 | ௨௰ = 20 |
| ௨௰௧=21 | ௨௰௨=22 | ௨௰௩= 23 | ௨௰௪= 24 | ௨௰௫= 25 |
| ௨௰௬=26 | ௨௰௭= 27 | ௨௰௮= 28 | ௨௰௯=29 | ௩௰ = 30 |
| ௩௰௧= 31 | ௩௰௨ = 32 | ௩௰௩ = 33 | ௩௰௪ = 34 | ௩௰௫ = 35 |
| ௩௰௬=36 | ௩௰௭ = 37 | ௩௰௮ = 38 | ௩௰௯ = 39 | ௪௰ = 40 |
| ௪௰௧= 41 | ௪௰௨ = 42 | ௪௰௩ = 43 | ௪௰௪ = 44 | ௪௰௫ = 45 |
| ௪௰௬= 46 | ௪௰௭ = 47 | ௰௮ = 48 | ௪௰௯ = 49 | ௫௰ = 50 |
| ௫௰௧= 51 | ௫௰௨ = 52 | ௫௰௩ = 53 | ௫௰௪ = 54 | ௫௰௫ = 55 |
| ௫௰௬=56 | ௫௰௭ = 57 | ௫௰௮ = 58 | ௫௰௯ = 59 | ௬௰ = 60 |

## இலங்கை நாட்டை காக்க வேண்டி உச்சிமுருகன் கோயிலில் வழிபாடு

உச்சிமுருகா கைவிக்கம் உச்சிமுருகா
உச்சிமுருகா கைவிக்கம் உச்சிமுருகா
உன் சன்னதியில் நாம் அனைவரும் ஒன்றுகூடி உள்ளோம்
உச்சிமுருகா கைவிக்கம் உச்சிமுருகா
உன் சன்னதியில் நாம் அனைவரும் ஒன்றுகூடி உள்ளோம்.

எம் இலங்கை நாட்டை காக்க வேண்டி
நாங்கள் அனைவரும் இங்கு வளிபாட்டை செய்கின்றோம்
எம் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் முருகையா
எம் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் முருகையா

உச்சிமுருகா கைவிக்கம் உச்சிமுருகா
உன் சன்னதியில் நாம் அனைவரும் ஒன்றுகூடி உள்ளோம்
எங்கள் தாய் நாட்டில் மழை வெள்ளம்
மக்கள் படும் துன்பம் பார்க்க முடியல
எங்கள் தாய் நாட்டில் மழை வெள்ளம்
மக்கள் படும் துன்பம் பார்க்க முடியல
கந்தன் கருணையால் மழை நீர் பெற்றல் வேண்டும்
வேலன் புதுமையால் ஈழம் செழிப்புற வேண்டும்

முருகன் திருவடியை நாம் வணங்குகின்றோம்
எங்கள் இலங்கை நாட்டை காத்திட வேண்டும்
முருகன் திருவடியை நாம் வணங்குகின்றோம்
எங்கள் இலங்கை நாட்டை காத்திட வேண்டும்

உச்சிமுருகா எங்கள் உச்சிமுருகா
உன் சன்னதியிலே நாங்கள் பஜனை செய்கின்றோம்
எங்கள் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா
எங்கள் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா

உச்சிமுருகா கைவீக்கம் உச்சிமுருகா
உன் சன்னதியில் நாம் அனைவரும் ஒன்றுகூடி உள்ளோம்
ஆறுபடை கொண்ட வேல் முருகா
அனர்த்தங்கள் யாவற்றையும் தடுத்திட வேண்டும்
ஆறுபடை கொண்ட வேல் முருகா
அனர்த்தங்கள் யாவற்றையும் தடுத்திட வேண்டும்

நல்லூர் கந்தனே நலம் அருளிட வேண்டும்
கதிர்காம முருகனே நீ எம் மக்களை காத்திட வேண்டும்

சந்நிதியில் கோயில் கொண்ட சங்கரன் மகனே
எங்கள் இலங்கை நாட்டை காத்திட வேண்டும்
சந்நிதியில் கோயில் கொண்ட சங்கரன் மகனே
எங்கள் இலங்கை நாட்டை காத்திட வேண்டும்

உச்சிமுருகா எங்கள் உச்சிமுருகா
உன் சன்னதியிலே நாங்கள் பஜனை செய்கின்றோம்
உச்சிமுருகா எங்கள் உச்சிமுருகா
உன் சன்னதியிலே நாங்கள் பஜனை செய்கின்றோம்
எங்கள் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா
எங்கள் ஈழ நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா

உச்சிமுருகா கைவீக்கம் உச்சிமுருகா
உன் சன்னதியில் நாம் அனைவரும் ஒன்றுகூடி உள்ளோம்
எம் இலங்கை நாட்டை காக்க வேண்டி
நாங்கள் அனைவரும் இங்கு பஜனை செய்கின்றோம்
எம் ஈழ நாட்டை காத்தருள வேண்டும் முருகையா
எம் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா
எம் ஈழ நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா.



முருகுதிரு. சின்னத்துரை சிறீரஞ்சன் ஐயாவின் 70 அகவை (23-08-55) நிறைவு பவளவிழாவை முன்னிட்டு
சிறீரஞ்சன் குடும்பத்தின் சார்பாக திரு லக்ஸ்மன் சிறீரஞ்சன் மற்றும் தேவசிறீ சிறீரஞ்சன்
உச்சி முருகன் கோயிலுக்கு அன்பளிப்பாக கொடுத்தது.

On the occasion of the 70th Birthday (23/08/55) Coral Call Festival of Muruguthiru Sinnathurai Sriranjan Aiya, Mr. Luxman Sriranjan and Devashiri Sriranjan donated the prayer books to the Uchi Murugan Koyil on behalf of the Sriranjan family.

